REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2022 செப்டெம்பர் 26 திங்கட்கிழமை
# தினகரன்
THINAKARAN தினகரன்
1932 - 2022
வருட. 90 இல. 227 | Monday 26, September, 2022 | 16பக்கங்கள் | 40/-

## பேச்சை துரிதப்படுத்த சீனா இணக்கம்

### கொழும்பிலுள்ள தூதரகம் அறிவிப்பு



சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்கான பேச்சுவார்த்தைகளை துரிதப்படுத்த இலங்கை மற்றும் சீன அதிகாரிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர். இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார 06

### 03 நாள் உத்தியோகபூர்வ விஜயமாக

## ஜனாதிபதி ரணில் ஜப்பான் பயணம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)



ஜப்பான் மற்றும் பிலிப்பைன்ஸுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று காலை பயணமானார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமது இரண்டு நாள் ஜப்பானுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தின் 06

### O/L இல் முதல் தடவையில் சித்தியடைந்து

## A/L கற்கும் மாணவருக்கு ஜனாதிபதி புலமைப்பரிசில்

### ஜனாதிபதி நிதியத்திலிருந்து வழங்க திட்டம்



க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் முதல் தடவையிலேயே சித்தியடைந்து உயர்தரம் கற்பதற்கு தகுதி பெற்ற மாணவர்களுக்கு ஜனாதிபதி நிதியத்திலிருந்து புலமைப்பரிசில் பெற்றுக் கொடுக்கும் திட்டத்தை, மீண்டும் அமுல்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார். 06

### போதைப்பொருள் பாவனையாளர்களை கட்டுப்படுத்த

## போதைப்பொருள் வர்த்தகர்களை கைது செய்வதே ஓரேயொரு வழி



### பாவனையாளர்கள் சிறைகளுக்கு பெரும் சுமை – நீதியமைச்சர்

லோரன்ஸ் செல்வநாயகம்

முக்கிய போதைப்பொருள் வர்த்தகர்களை கைதுசெய்யாமல் போதைப்பொருள் பாவனையாளர்களின் எண்ணிக்கையை ஒருபோதும் குறைக்க முடியாது என நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது போதைப்பொருள் பாவனையாளர்கள் வெகுவாக அதிகரித்துவரும் நிலையில் இளைஞர்களின் எதிர்காலம் 06

## உள்ளக, சர்வதேச ரீதியில் நாம் எதிர்கொண்டுள்ள சவால்கள்;



# அரசியல், சமூக, பொருளாதார மறுசீரமைப்புக்கு உந்துசக்தி

### வாய்ப்பாக்கிக் கொள்ளப்போவதாக ஐ.நாவில் அமைச்சர் அலிசப்ரி தெரிவிப்பு



ஐ.நா சபையின் 77வது கூட்டத்தொடரில் வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி உரை

இலங்கையானது உள்ளக மற்றும் சர்வதேச ரீதியில் எதிர்கொண்டுள்ள சவால்களை நாட்டின் புதிய அரசியல், சமூக மற்றும் பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு வாய்ப்பாக்கிக் கொள்ளப்போவதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

அதற்காக ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பை இலங்கை எதிர்பார்த்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் சபையின் 77வது அமர்வில் உரையாற்றும் போதே வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி 06

**இலங்கையில் முன்னரை விடவும் குறிப்பிடத்தக்க முன்னேற்றகர மாற்றங்கள்**

## ஆர்ப்பாட்டத்தில் கைதான 83 பேரும் பிணையில் விடுதலை

### எரங்க உட்பட மூவருக்கு நீதிமன்ற பிணை

லோரன்ஸ் செல்வநாயகம்



மக்கள் விடுதலை முன்னணி மற்றும் சோசலிச இளைஞர் அமைப்பு ஆகியன இணைந்து நேற்று முன்தினம் கொழும்பில் மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தின் போது கைது செய்யப்பட்ட 83 பேரும் நேற்று பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். பிணையில் விடுதலை செய்யப்பட்டவர்களில் சோசலிச இளைஞர் அமைப்பின் தேசிய அமைப்பாளர் 06

## கலவரங்கள் நடத்துவதனால் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முடியாது

### எவராவது முயற்சித்தால் அது ஒருபோதும் பலனளிக்காது



கலவரத்தினை ஏற்படுத்தி, அதன் ஊடாக பாராளுமன்றத்தைக் கைப்பற்றி ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த எவரேனும் முயற்சிப்பார்களாயின் அந்த முயற்சி ஒருபோதும் வெற்றியளிக்காது என்று பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்பு என்பது நாட்டு மக்களின் பாதுகாப்பாகும். அதனை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு ஜனாதிபதிக்கு காணப்படுகிறது. 06



சவூதி அரேபியாவின் 92வது தேசிய தினம் கடந்த வெள்ளிக்கிழமை (23) இரவு கொழும்பிலுள்ள சங்ரில்லா ஹோட்டலில் புதிய தூதுவராக பொறுப்பேற்றுள்ள காலித் ஹமாட் அல் கஹ்டானி தலைமையில் வெகு விமா˙சையாக நடைபெற்றது. இந்நிகழ்வில் ஞாபகார்த்த கேக்கினை தூதுவர் தலைமையில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, நீதியமைச்சர் கலாநிதி விஜேதாச ராஜபக்ஷ, சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட், இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் உட்பட ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோர் இணைந்து வெட்டி வைப்பதை படத்தில் காணலாம்.
(படம் அஷ்ரப். ஏ. சமத்)

### சனத் ஜயசூரிய, யோஹானி இருவரது பங்கேற்பில்

## சுற்றுலாத்துறையை மேம்படுத்த இந்தியாவில் "வீதி நிகழ்ச்சிகள்"

### இன்று முதல் 30 ஆம் திகதி வரை நடத்த திட்டம்



இலங்கை சுற்றுலாத்துறை அமைச்சு, இந்தியாவின் முக்கிய நகரங்களில் தொடர்ச்சியான தெரு நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. தெரு நிகழ்ச்சிகள் மூலம் இந்தியாவுடன் 06

### இரு குழுக்களிடையே வாள்வெட்டு சம்பவம்;

## பிரான்ஸில் இலங்கை தமிழ் இளைஞன் கொடூர கொலை




பிரான்ஸின் தலைநகர் பாரிஸில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவம் ஒன்றில் இலங்கையைச் சேர்ந்த தமிழ் இளைஞனொருவர் கொடூரமாக கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் கடந்த 24ஆம் திகதி 06

### போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வாக

## கொழும்பில் சூரிய சக்தியில் இயங்கும் பயணிகள் படகுச்சேவை



### வெள்ளவத்தை – பத்தரமுல்லை பகுதிக்கு ஆரம்பம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

கொழும்பு நகர்ப்புறப் பகுதிகளில் நிலவும் வீதி நெருக்கடிகளுக்கு தீர்வாக பத்தரமுல்லை தியத பகுதியிலிருந்து வெள்ளவத்தை வரை சூரிய சக்தி படகுச் சேவை 06



தெல்தோட்டை ஊடக மன்றத்தின் ஏற்பாட்டில் 'அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் நினைவுப் பேருரை' சனிக்கிழமை (24) க/எனசல்கொல்ல மத்திய கல்லூரியில் நடைபெற்றபோது ஞானம் சஞ்சிகையின் இணை ஆசிரியர் Dr.ஞானசேகரனுக்கு மன்றத் தலைவரும், SLBC நிகழ்ச்சித் தயாரிப்பாளருமான அஷ்ஷெய்க் ஸீ.எம்.எம். சுபைர், இலக்கிய கழக தலைவரும், கண்டி வலய ஆசிரிய ஆலோசகருமான ஜனாப் ஐ.எம்.ஜெமீல் மற்றும் அருள்வாக்கி குழுத்தலைவரும், கொழும்பு ஸாஹிரா கல்லூரியின் உப அதிபருமான அஷ்ஷெய்க் ஏ.எம். மிஹ்லார் ஆகியோர் இணைந்து 'அருள்வாக்கி நேசன்' விருது வழங்கி கௌரவித்தனர். (மேலதிக விபரங்கள் 2ஆம் பக்கத்தில் பார்க்கலாம்)

## மாகாண சபைகளின் இயக்கம் முற்றிலும் சட்டவிரோதமானது



முன்னாள் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய காட்டம் 03

## பொலிஸ் அதிகாரி ஒருவரை கொடூரமாக தாக்கிய இருவர்!

அநுராதபுரம் மிஹிந்தலை பகுதியில் சம்பவம்




03

### எல்ல வனப்பகுதி தீ வைப்பு சம்பவம்:

## கைது செய்யப்பட்ட 16 மாணவர்களுக்கும் பிணை

### ஒருவருக்கு 10 வீதம் 160 மரங்களை நடுமாறு நீதிமன்றம் உத்தரவு



லோரன்ஸ் செல்வநாயகம்

எல்ல வனப்பகுதிக்கு தீ வைத்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள இம்முறை க.பொ.த சாதாரண தர 06

## கொழும்பு - மொஸ்கோ விமான சேவை மீண்டும்

### ஒக்.09 ஆம் திகதி முதல் ஆரம்பிக்க திட்டம்



ரஷ்யாவின் 'ஏரோஃப்ளோட்' விமான சேவை, ஒக்டோபர் 9 ஆம் திகதி முதல் மொஸ்கோவிலிருந்து கொழும்புக்கு விமான பயணங்களை மீண்டும் ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளது. இதன்படி, நிறுவனம் ஆரம்பத்தில் வாரத்திற்கு இரண்டு முறை விமானங்களை இயக்கும். 06



தெல்தோட்டை ஊடக மன்றத்தின் ஏற்பாட்டில் 'அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் நினைவுப் பேருரை' கடந்த சனிக்கிழமை (24) க/எனசல்கொல்ல மத்திய கல்லூரியில் வெகுவிமர்சையாக நடைபெற்றது. இதன்போது தினகரன் பத்திரிகையில் அருள்வாக்கி அப்துல் காதிர் தொடர்பாக வெளிவந்த செய்திகள், கட்டுரைகளுக்கு தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் திரு. தே. செந்தில் வேலவர் விழா ஏற்பாட்டாளர்களினால் பொன்னாடை போர்த்தி, 'அருள்வாக்கி நேசன்' விருது வழங்கி கௌரவிக்கப்படுவதையும் நினைவு சொற்பொழிவாற்றிய கலாநிதி ரவூப் ஸெய்ன் மற்றும் விழா நிகழ்வுகள் , கலந்து கொண்டோரில் ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம்.

## உம்மு ஸாவியாவில் 'ஷமாஇலுத் திர்மிதி' பாராயணம் நாளை

ருஸைக் பாரூக்

இஸ்லாத்தின் இறுதித்தூதர் முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நாளை 27ம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் அக்டோபர் மாதம் 09ம் திகதி ஞாயிறு வரை கொழும்பு 12, எம்.ஜே.எம். லாபிர் மாவத்தையில் உள்ள உம்மு ஸாவியா பள்ளிவாசலில், "120வது வருடாந்த ஷமாஇலுல் திர்மிதி" நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் முஸ்லிம் சேவை காலை 8.00 மணி முதல் 8.30 மணி வரை நேரடியாக ஒலிபரப்பவுள்ளது. அஜ்வாத் அல் பாஸி அரபிக் கல்லூரி அதிபரும் கொழும்பு பெரிய பள்ளிவாசல் கதீப் மௌலவி அஹமட் சூபி (மஹ்ழரி) அவர்கள் விஷேட பேச்சாளராக கலந்துகொள்வார் என உம்மு ஸாவியா பள்ளிவாசலின் மார்க்க விவகார குழுத் தலைவர் பௌவ்ஸான் அன்வர் தெரிவித்தார்.

# இரத்தினம் பவுண்டேசன் ஏற்பாட்டில் கணனி பாடநெறி வகுப்புகள்

இலண்டன் இரத்தினம் ப வுண்டேசனால் அம்பா றை மாவட்டம் ஆலையடிவேம்பு பிரதேச செயலக பிரிவில் கோளாவில் கிராமத்தில் சிவனருள் கணனி தொழில் சார் பாடநெறி தொழிற்பயிற்சித் திட்டம் இயங்கி வருகிறது.

இக்கணனி நிலையமானது மூன்றாம் நிலைக் கல்வி தொழிற் கல்வி ஆணைக்குழுவின் *Tertiary and Vocational Education Commission TVEC* கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அப்பிரதேசத்தில் உள்ள க.பொ.த (சா/த) மற்றும் க.பொ.த (உ/த) பரீட்சைகளை எதிர்கொண்டு பல் கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்படாத மாணவர்களுக்கு அரச அங்கீகாரம் உள்ள NVQ தரச் சான்றிதழ்களை பெறுவதற்காகன ஓர் நிலையமாக அமைந்துள்ளமை சிறப்பம்சமாகும்.



அதாவது NVQ 03 சான்றிழ்களுக்கான நான்குமாத கால *Computer Application Assistance CAA* பயிற்சி நெறி மற்றும் NVQ 04 சான்றிதழ்களுக்குரிய ஐந்து மாத கால *Computer Graphic Designer CGD* பயிற்சி நெறிகளும் நடைபெறுகின்றது.

இதன் படி 2022.05.04 தொடக்கம் 2022.09.10 ம் திகதி வரை நான்கு மாத காலங்கள் நடைபெற்ற *Computer Application Assistance CAA (NVQ 03)* பயிற்சி நெறியை இனிதே நிறைவு செய்ய 25 பயிலுனர்களுக்கான நிறுவன சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு 2022.09.14 ம் திகதி கணினி நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.



இலங்கைக்கான தாய்லாந்து உயர் ஸ்தானிகர் பீ.ஹன்போல் ( P.Harnpol) கொழும்பு மேயர் ரோஸி சேனாநாயக்கவை அண்மையில் கொழும்பு மாநகர சபையின் மேயர் பணிமனையில் சந்தித்து சினேகபூர்வ பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார்.

(படம்: பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

**தென் மாகாண தமிழ் மொழித்தின போட்டிகள்;**

# வெலிகம அறபா தேசிய பாடசாலை 09 முதலிடங்கள் பெற்று சாதனை

வெலிகம தினகரன் நிருபர்

அகில இலங்கை தமிழ் மொழித் தின மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டைமாவட்டபாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

மாத்தறை மாவட்டப் பாடசாலைகள் மாத்தறை மற்றும் அக்குரஸ்ஸ வலயங்களாக பிரிக்கப்பட்டு மாத்தறை தாருல் உலூம் மகா வித்தியாலயத்திலும் ஹம்பாந்தோட்டை மாவட்டப் போட்டிகள் ஹம்பாந்தோட்டை ஸாஹிரா மத்திய கல்லூரியிலும் நடைபெற்றன.

மாத்தறை வலய மட்டப் பாடசாலைகளில் வெலிகம அறபா தேசிய பாடசாலை ஒன்பது முதலிடங்களையும் மீயல்லை அல் மினா மகாவித்தியாலயம் ஐந்து முதலிடங்களையும் திக்குவல்லை மின்ஹாத் தேசிய பாடசாலை, மாத்தறை தாருல் உலூம் மகாவித்தியாலயம், கந்தரை அல் அஸ்ஹர் கல்லூரி ஆகிய பாடசாலைகள் தலா இரண்டு போட்டிகளில் முதலிடங்களையும் கிரிந்தை முஸ்லிம் வித்தியாலயம் ஒரு முதலிடத்தையும் பெற்றுக் கொண்டன.

மேலும் அக்குரஸ்ஸ வலய மட்ட பாடசாலைகளுக் கிடையிலான போட்டிகளில் வெலிகம மதுராபுர அஸ்ஸபா மகாவித்தியாலயம் மற்றும் ஹூலந்தாவ தமிழ் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் தலா ஆறு போட்டிகளில் முதலிடங்களை பெற்றுக் கொண்டன.

மேலும் பெவரலிய தமிழ் வித்தியாலயம் மற்றும் ஹேன்பேர்ட் வித்தியாலயம் ஆகியன தலா நான்கு போட்டிகளில் முதலிடத்தையும் செனட் மத்திய கல்லூரி அனில் காந்த தமிழ் வித்தியாலயம் கொடபிடிய ஸாதாத் மகாவித்தியாலயம் கப்புவத்தை அந்நூர் மகாவித்தியாலயம் ஹொரகொட அல் ஹூதா கல்லூரி ஆகிய பாடசாலைகள் தலா ஒவ்வொரு போட்டிகளிலும் முதலிடங்களைப் பெற்றுக் கொண்டன.

ஹம்பாந்தோட்டை மாவட்ட வலயப் பாடசாலைகளில் ஹம்பாந்தோட்டை தேசிய பாடசாலை 13 முதலிடங்களையும் அல் அக்பர் மகா வித்தியாலயம் ஐந்த முதலிடங்களையும் பதகிரிய கல்லூரி ஒரு முதலிடத்தையும் பெற்றுக் கொண்டது.

வெற்றியீட்டிய சகல போட்டியாளர்களும் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் வெலிகம மதுராபுர அஸ்ஸபா மகா வித்தியாயத்தில் நடைபெறவுள்ள மாகாண மட்டப் போட்டிகளில் கலந்து கொள்ள தகுதி பெற்றுள்ளதாக தமிழ் மொழித் தினப் போட்டி இணைப்பாளர் அஷ்ஷேக் எம். எம். எம் முன்திர் (நளீமி) தெரிவித்தார்.

## காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழப்பு

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

மிஹிந்தலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மரதன்கல்ல பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் காட்டு யானையின் தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கட்டுபொத்த, புதிய வீதி மரதன்கல்ல மிஹிந்தலை பகுதியைச் சேர்ந்த 51 வயது நபர் ஒருவரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்துள்ளவர் அவரது வீட்டுக்கு அருகில் அமைந்துள்ள உறவினர் ஒருவரின் வீட்டுக்கு சென்று முற்றத்தில் அமர்ந்திருந்த போது யானையின் தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

திடீரென குறித்த இடத்திற்கு பிரவேசித்த காட்டு யானை தாக்கியுள்ளது. அதனால் படுகாயமடைந்த நிலையில் மிஹிந்தலை வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற வேளை வெளிநோயாளர் பிரிவில் உயிரிழந்துள்ளதாக பொலிசார் மேலும் தெரிவித்தனர்.

# உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு சித்திர போட்டி



கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு முந்தல் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட மங்கள எளிய சமுர்த்தி வங்கியின் கீழ் இயங்கும் கணமூலை தெற்கு சிறுவர் சங்க உறுப்பினர்களுக்கிடையிலான சித்திரப் போட்டி நேற்று முன்தினம் (24) நடைபெற்றது.

மங்கள எளிய சமுர்த்தி வங்கி முகாமையாளர் எஸ்எம். நபீலின் ஆலோசனையில் கணமூலை தெற்கு சிறுவர் சங்க பொறுப்பாளர்களான பாத்திமா சபியா மற்றும் எஸ்.எம்.ரிப்கா தலைமையில் கணமூலை தெற்கு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரின் மேற்பார்வையில் இந்த சித்திரப் போட்டி நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் முதலாம் தரம் தொடக்கம் ஐந்தாம் தரம் வரையும், ஆறாம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரையும் என இரண்டு பிரிவுகளாக போட்டி நடாத்தப்பட்டது.

மேற்படி இரண்டு பிரிவினருக்கும் "ஒற்றுமையாக வாழ்வோம்" எனும் தலைப்பு ஏற்பாட்டுக் குழுவினரால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேற்ப டி போட்டியில் வெற்றி பெற்ற போட்டியாளர்களுக்கு எதிர்வரும் ஒக்டோபர் 1 ம் திகதி பரிசளிப்பு நிகழ்வு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தினகரன் விளம்பரம் 0112429367

விற்பனை பிரிவு 0112429444, 0112429378

ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2022 செப்டெம்பர் 26 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN


தொழுகை நேரம்

23 முதல் 26 வரை

சுபஹ் - 04.44
லுஹர் - 12.03
அஸர் - 03.16
மஃரிப் - 06.07
இஷா - 07.17

இன்றைய சுபதினம்

சுபகிருது வருடம் புரட்டாசி 9

ராகுகாலம் : பகல் : 07.30 - 09.00வரை
சுபநேரம் : காலை : 06.00 - 07.30வரை

யோகம்: சித்தயோகம்

திதி: பிரதமை




## ஆசிய அபிவிருத்தி வங்கியின் 57 வது மாநாடு பிலிப்பைன்ஸில் இன்று ஆரம்பம்

### மாநாட்டிற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

இலங்கையில் நடத்தப்படவிருந்த ஆசிய அபிவிருத்தி வங்கியின் 57வது மாநாடு நாட்டில் நிலவும் நெருக்கடி நிலைமைகள் காரணமாக பிலிப்பைன்ஸ் மணிலா நகரில் இன்று 26 ஆம் திகதி முதல் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இலங்கையின் சார்பில் நிதியமைச்சரான ரணில் விக்கிரமசிங்க அந்த மாநாட்டில் பங்கேற்கவுள்ளதுடன் மாநாட்டிற்கு தலைமைதாங்கவுமுள்ளார். இந்த மாநாட்டில் மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசேகரவும் கலந்துகொள்ளவுள்ளார்.



மணிலா நகரில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் 68 அங்கத்துவ நாடுகள் பங்கேற்கவுள்ளன.

ஆசிய பிரதிநிதிகள் 49 பேரும் ஏனைய நாடுகளிலிருந்து 19 பிரதிநிதிகளும் இந்த மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த மாநாட்டின் இறுதித் தினமான 30 ஆம் திகதி மாநாட்டின் தலைமைப் பதவி ஜனாதிபதியும் நிதியமைச்சருமான ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கப்படவுள்ளது. இலங்கைக்கு வழங்கப்படும் அந்த தலைமைப்பதவி இரண்டு வருடங்களுக்கு

06

## பருப்பு, ரின்மீன் குறைந்த விலையில் விற்பனை ச.தொ.சவிற்கு 600 கோடி ரூபா நட்டம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அதிக விலையில் பருப்பு மற்றும் ரின் மீன் ஆகியவற்றை கொள்வனவு செய்து நுகர்வோருக்கு குறைந்த விலையில் விற்பனை செய்தமையினால் சதொச நிறுவனத்திற்கு 600 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

அதிக விலையில் இவற்றைப் பெற்று நுகர்வோருக்கு ஒரு கிலோ பருப்பை 89 ரூபா விலை குறைவாகவும் ரின் மீன் ஒன்றை 110 ரூபா விலை குறைவாகவும் விற்பனை செய்தமையினாலேயே 600 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதற்கிணங்க 154 ரூபாவுக்கு ஒரு கிலோ பருப்பு கொள்வனவு செய்யப்பட்டு அதனை 65 ரூபாவுக்கு விற்றுள்ளதுடன் 210 ரூபாவுக்கு ரின் மீனை கொள்வனவு செய்து அதனை 100 ரூபாவுக்கு சதொச மூலம் விற்பனை செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி கடந்த கொரோனா கால சூழ்நிலையில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கிணங்கவே இந்த இரண்டு பொருட்களும் இவ்வாறு குறைந்த விலையில் சதொச மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

## வெளிநாட்டு வேலை வாய்ப்பில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு திட்டம் அறிமுகம்

### அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



வெளிநாட்டு வேலை வாய்ப்புகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு புதிய ஓய்வூதிய வேலைத் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டில் வேலை வாய்ப்புகளில் ஈடுபட்டுள்ள 18 வயதிற்கும் 59 வயதிற்கும் இடைப்பட்டவர்களுக்கு 'மனுஷம்' என்ற பெயரில் புதிய ஓய்வூதியதிட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாகவும் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் தம்மைப் பதிவு செய்து கொண்டு வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக செல்வோர் இந்த காப்புறுதி திட்டத்திற்குள் உள்ளடங்குவர் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## மாகாண சபைகளின் இயக்கம் முற்றிலும் சட்டவிரோதமானது

### முன்னாள் தேர்தல் ஆணையாளர் மஹிந்த காட்டம்



பொதுமக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் மாகாண சபைகளை முன்னெடுத்து செல்வது முழுவதும் சட்டவிரோத செயலாகும் என முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

ஹம்பாந்தோட்டை பகுதியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துரைத்தபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எந்தவொரு அரச நிறுவனத்தையும் மக்கள் பிரதிநிதி ஒருவர் இல்லாமல் கொண்டு செல்வது குற்றமாகும். உள்ளூராட்சி மன்றங்கள், தேர்தல் இன்றி ஆணையாளர்கள் மற்றும் செயலாளர்களினால் செயற்படுத்தப்படுவது, பொதுமக்களின் அடிப்படை உரிமை மீறலாகும் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இந்த நிலையில் கடந்த காலங்களில் தேர்தல் நடத்தப்படவில்லை என மக்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவை தூற்றினர். எனினும், நீதிமன்றிக்கு சென்றதும்,

06

## பொலிஸ் அதிகாரி ஒருவரை கொடூரமாக தாக்கிய இருவர்!

### அநுராதபுரம் மிஹிந்தலை பகுதியில் சம்பவம்



அநுராதபுரம் மிகிந்தலை கல்லாட்சிய பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் அதிகாரி ஒருவரை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் வீதியில் வைத்து கடுமையாக தாக்கியுள்ளனர்.

இந்த சம்பவத்தில் தாக்குதலுக்கு இலக்கான பொலிஸ் சார்ஜன்ட் மிகிந்தலைக்கு சென்று பின்னர் திருகோணமலை வீதியில் கருவலகஸ்வெவ விகாரைக்கு எதிரில் உள்ள கடை ஒன்றுக்கு செல்லும் போது மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு பேர், பொலிஸ் சார்ஜன்டை வீதியில் தள்ளி கடுமையாக தாக்கியுள்ளனர்.

தாக்குதல் நடத்திய நபர்கள் போதைப் பொருளை

06

துபாயிலிருந்து கட்டுநாயக்க வருகையில்

## 2 கோடி ரூபா தங்கத்துடன் சுங்கத்திடம் சிக்கிய நபர்



### பெறுமதியான மேலும் சில பொருட்களும் சிக்கின

**லோரன்ஸ் செல்வநாயகம்**

2 கோடி ரூபா பெறுமதியான தங்கம் உள்ளிட்ட மேலும் பொருட்களை சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டு வந்துள்ள நபர் ஒருவர் நேற்று சுங்க அதிகாரிகளால் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

2 கோடி ரூபா பெறுமதியான தங்கம், பாவித்த கையடக்க தொலைபேசிகள், மடிக்கணனிகள் தங்க பிஸ்கட்டுகள் மற்றும் தங்க கட்டிகள் தங்க ஆபரணங்கள் உள்ளிட்ட பொருட்களையே அவர் நாட்டுக்கு சட்ட விரோதமாக எடுத்து வந்துள்ளதாகவும் அதன் பெறுமதி 22.5 மில்லியன் ரூபா என்றும் சுங்க ஊடகப் பேச்சாளர் சுதந்த சில்வா தெரிவித்துள்ளார்.

மேற்படி நபர் தமது தனிப்பட்ட பொருட்களைக் கொண்ட பையில் அதனை மறைத்து வைத்து சாதாரணமாக பொருட்களை கொண்டு வராதவர்கள் உபயோகிக்கும் பாதையின் ஊடாக கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து வெளியேறுவதற்கு முயற்சித்துள்ளார். அந்த சந்தர்ப்பத்திலேயே சுங்க அதிகாரிகள் சந்தேகத்தின் பேரில் அவரை கைது செய்துள்ளனர்.

கைப்பற்றப்பட்டுள்ள தங்கம் மற்றும் பொருட்களை அரச உடைமையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் சுங்க ஊடக பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமாக அவர்

06

## மலேஷியா சென்ற அமைச்சர் நஸீர் அஹமட் மலாக்கா மாநில ஆளுநருடன் சந்திப்பு

கொரியாவில் இடம்பெற்ற காலநிலை மாநாட்டில் கலந்து கொண்டு நாடு திரும்பும் வழியில், சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட் மலேஷியாவுக்கு விஜயம் செய்தார்.


அங்கு மலாக்கா மாநில முன்னாள் முதலமைச்சரும் தற்போதைய ஆளுநரும் தனது நெருங்கிய நண்பருமான ரான்சிறி மொஹ்ட் அலிருஸ்தானை அமைச்சர் நஸீர் அஹமட் சந்தித்து கலந்துரையாடினார்.



மலாக்கா மாநிலத்தில் இலங்கையின் கலாசார நிலையம் ஒன்றை நிறுவுதல், இலங்கை மாணவர்களுக்கு கல்வி வாய்ப்புக்களை வழங்குதல், விவசாயிகளுக்குத் தேவையான உதவிகளை வழங்குதல் மற்றும் இலங்கையில் உல்லாசப் பயணத்துறையை விருத்தி செய்வதற்கு மலேசியாவின் ஒத்துழைப்பை பெறுவது தொடர்பிலும் இச்சந்திப்பில் மலாக்கா ஆளுநருடன் அமைச்சர் நஸீர் அஹமட் விரிவாக கலந்துரையாடினார்.

## ஐ.நா. உணவு, விவசாயம் தொடர்பான பிரதிநிதி சின்ட் மெக்கெய்ன் நேற்று இலங்கை விஜயம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



உரோமிலுள்ள ஐக்கிய நாடுகள் உணவு மற்றும் விவசாயம் தொடர்பான நிறுவனத்தின் பிரதிநிதியான சின்ட் மெக்கெய்ன் இலங்கைக்கான விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று நாட்டை வந்தடைந்தார்.

அவர் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருப்பதுடன் கொழும்பில் அரசாங்க உயரதிகாரிகள் மற்றும் உணவுப் பொருட்கள் வழங்கும் அமைப்புக்களையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

அதேவேளை, ஐக்கிய நாடுகள் நிதியத்தின் மூலம் இலங்கையில் செயற்படுத்தப்படும் மனிதாபிமான உதவித் திட்ட பயனாளிகள் மற்றும் அதனை நடைமுறைப்படுத்தும் தரப்பினரையும் சந்தித்து அவர் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. கட்டார் விமான சேவைக்கு சொந்தமான கிவ்.ஆர். 654 விமான மூலம் அவர்

06



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையின் ஏற்பாட்டில் ஆனந்த சமரக்கோன் கலையகத்தில் (22) வியாழக்கிழமை மாலை நடைபெற்ற மதுரகீதங்கள் இசை நிகழ்வில் கலாபூஷணம் முல்லை நிஸார் ரஹீம் எழுதிய "புரிதல் சிந்தனைச் சிதறல்கள்"எனும் நூலின் முதல் பிரதியை நூலாசிரியரிடமிருந்து புரவலர் ஹாசிம் உமர் பெறுவதையும் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் ஜயரஞ்சன் யோகராஜ், கலாநிதி க.ரகுவரன் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் பிரதிப் பணிப்பாளர் யூ.எல். யாகூப் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

## எரிபொருள் விலைகளை குறைப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டு வருகிறது

### ஐஓசி நிறுவன அதிகாரி தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை வீழ்ச்சியடைந்து வரும் நிலையில் எரிபொருள் விலைகளை குறைப்பதற்கு கவனம் செலுத்தி வருவதாக ஐஓசி நிறுவனம் தெரிவித்துள்ளது.

எனினும் மின் சக்தி,எரிசக்தி அமைச்சினுடாகவே அதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அந்த நிறுவனத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை வீழ்ச்சியடைந்துள்ள போதும் உடனடியாகவே உள்ளூர் சந்தைகளில் விலைகளை குறைக்க முடியாது என சுட்டிக்காட்டியுள்ள அவர் கையிருப்பில் உள்ள எரிபொருள் கடந்த காலங்களில் அதிக விலைக்கு கொள்வனவு செய்யப்பட்டவை என்பதையும் குறிப்பிட்டுள்ளார்.

உலக சந்தையில்

06

## கோழித்தீன் விலையேற்றத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை

### அமைச்சர் மஹிந்த அமரவீர



**(அக்குறணை குறூப் நிருபர்)**

கோழித் தீன் விலையேற்றத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

பேராதனை மிருக உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தில் (24) நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது;

அடுத்த சிறுபோக பயிர் செய்கையின் போது சோள உற்பத்தியை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் விலங்குணவு உற்பத்தியை அதிகரித்து கோழி இறைச்சி மற்றும் முட்டை விலை ஏற்றத்தைக் குறைக்க முடியும்.

இன்று கோழி இறைச்சி மற்றும் முட்டை விலை ஏற்றத்தில் விலங்குணவு விலையேற்றம் முக்கிய பங்களிப்பை செலுத்துகிறது.

கோழிப் பண்ணையாளர்கள் அதிக விலை கொடுத்து கோழித் தீன் போன்றவற்றை கொள்வனவு செய்வதன் காரணமாக அவர்களது உற்பத்திச் செலவு அதிகரித்துள்ளது. எனவே விலங்குணவுக்கான செலவினத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலம் கோழி மற்றும் முட்டை விலையேற்றத்தை ஓரளவு கட்டுப்படுத்த முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

தர்கா நகரில்;

## மர்ஹூம் ஐ.எல்.எம். சுஐப் ஞாபகார்த்த கூட்டமும் நூல் வெளியீடும் அக்.02இல்

**(பேருவளை விசேட நிருபர் )**

தர்கா நகர் ஸாஹிராக் கல்லூரி முன்னாள் அதிபரும் கல்விமானுமான மர்ஹூம் ஐ.எல்.எம். சுஐப் ஞாபகார்த்த கூட்டமும் "வாழும் ஆளுமை அல்ஹாஜ் ஐ.எல்.எம்.சுஐப்" எனும் நூலின் வெளியீட்டு வைபவமும் எதிர்வரும் ஒக்டோபர் 2ம் திகதி (21.09.2022) பி.ப. 4.00 மணிக்கு தர்கா நகர் ஸாஹிராக் கல்லூரி நளீம் ஹாஜியார் ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறும். மொரட்டுவை பல்கலைக்கழக முன்னாள் கணிதத்துறை தலைவர் கலாநிதி எம்.இஸட்.எம். மல்ஹருத்தீன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பேராதனை பல்கலைக்கழக விவசாய மற்றும் பொறியியல் துறை பேராசிரியர் எம்.ஐ.எம்.மௌஜூத், அக்கரைப்பற்று உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.ஏ. எம்.யூஸுப், எல்பிட்டிய தேசிய கடதாசிக் கூட்டுத்தாபன முன்னாள் பணிப்பாளர் ஏ.எஸ்.எம்.பாரூக், பேருவளை இக்ரா தொழிற் பயிற்சி நிறுவன பணிப்பாளர் வை.ஐ.எம்.ரமீஸ், தர்கா நகர் அல்ஹம்ரா மகா வித்தியாலய முன்னாள் அதிபர் எம்.இஸட்.எம்.நயீம் ஆகியோர் உரையாற்றவுள்ளதாக ஏற்பாட்டு குழு இணைப்பாளரும் இலங்கை வங்கியின் முன்னாள் முகாமையாளருமான கவிஞர் ரீ.எம்.ஸபா தெரிவித்தார். நிகழ்வில் உலமாக்கள்,கல்விமான்கள்,அரசியல்வாதிகள்,எழுத்தாளர்கள்,ஊர் பிரமுகர்கள்

06

### நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 238.30 | 249.43 |
| கனடியன் டொலர் | 266.50 | 278.62 |
| யூரோ | 355.51 | 370.47 |
| ஜப்பான் யென் | 2.4825 | 2.5854 |
| சிங்கப்பூர் டொலர் | 252.81 | 263.50 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 406.47 | 422.56 |
| சுவிஸ் பிராங்க் | 369.13 | 386.67 |
| அமெரிக்க டொலர் | 359.17 | 369.94 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 962.56 | கட்டார் ரியால் | 99.05 |
| குவைத் டினார் | 1,174.62 | சவூதி ரியால் | 96.47 |
| ஓமான் ரியால் | 942.58 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.79 |

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் புரட்டாதி மாதம் 09ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஸபர் பிறை 29

### குறள் தரும் சிந்தனை

கல்லா தவரின் கடையென்ப கற்றறிந்தும்
நல்லா ரவையஞ்சு வார்

ஆன்றோர் நிறைந்த அவையில் பேசுவதற்கு அஞ்சுகின்றவர்கள், எத்தனை நூல்களைக் கற்றிருந்த போதிலும், அவர்கள் கல்லாதவர்களைவிட இழிவானவர்களாகவே கருதப்படுவார்கள்.

## புலம்பெயர்ந்துள்ள தமிழர்களுக்கு நம்பிக்கை தரும் முன்னெடுப்புகள்

நாட்டில் சுமார் மூன்று தசாப்த காலம் நிலவிய யுத்தசூழலில் இந்தியாவுக்கு குறிப்பாக தமிழகத்திற்குச் சென்று அகதி முகாம்களிலும் முகாம்களுக்கு வெளியிலும் தங்கியுள்ளவர்களில் பலர் இலங்கைக்குத் திரும்புவதில் விருப்பம் கொண்டுள்ளனர். இந்த நிலையில் இந்தியாவில் தங்கியுள்ள இலங்கை அகதிகளை தாயகத்திற்கு அழைத்து வருவதற்கு ஏற்பாடு செய்யுமாறு ஈழ அகதிகள் புனர்வாழ்வுக்கான அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இவ்விடயத்தில் கவனம் செலுத்தியுள்ள ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, அதற்கென விஷேட குழுவொன்றை நியமித்துள்ளார். ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் சந்திமா விக்கிரமசிங்க தலைமையில் அமைக்கப்பட்டுள்ள இந்த விஷேட குழுவில் குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டுத் திணைக்கள அதிகாரி, வெளிவிவகார அமைச்சு, நீதி அமைச்சு என்பவற்றின் உயரதிகாரிகளும் அங்கத்தவர்களாக உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை இந்தியாவில் இருந்து தாயகம் திரும்பும் தமிழ் அகதிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு நிவாரணம் வழங்குவதற்கான பரிந்துரைகளைச் செய்வதற்கென நீதியமைச்சர் கலாநிதி விஜேதாச ராஜபக்ஷவினாலும் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இழப்பீட்டு அலுவலகத்துடன் இணைந்ததாக நீதியமைச்சரின் வழிகாட்டலின் கீழ் இக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த இழப்பீட்டு அலுவலகமானது 2018 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்க இழப்பீட்டு அலுவலகச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே.

இக்குழுவுக்கு நீதியமைச்சின் செயலாளர் வசந்த பெரேரா தலைமை தாங்குகிறார். ஜனாதிபதியின் செயலாளர், பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், வட மாகாணத்திலுள்ள அனைத்து மாவட்டங்களதும் செயலாளர்கள், பாதுகாப்பு அமைச்சு, வெளிவிவகார அமைச்சு, பதிவாளர் நாயகத் திணைக்களம், ஆட்பதிவுத் திணைக்களம், இழப்பீட்டு அலுவலகம் என்பவற்றின் பிரதிநிதிகள் ஆகியோரை உள்ளடக்கியதாக இக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவின் பணிகளை இலகுபடுத்தும் வகையில் நீதியமைச்சரின் ஆலோசனைக்கு அமைய இது தொடர்பிலான தகவல்களை சேகரிக்கவென யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திலும் பிரிவொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான சூழலில் இக்குழுவின் விஷேட கலந்துரையாடல் ஒன்று இழப்பீட்டு அலுவலகப் பணிப்பாளர் நாயகம் நஸீமா அஹ்மட் தலைமையில் அண்மையில் நடைபெற்றுள்ளது. அக்கலந்துரையாடலின் போது யுத்த காலத்தில் தமிழகம் உட்பட வெளிநாடுகளுக்கு இடம்பெயர்ந்திருந்து தாயகம் திரும்பும் அகதிகள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக தாயகம் திரும்பும் அகதிகள் தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்வதற்கும், பிற சேவைகளை அணுகக்கூடிய வகையிலான செயன்முறைகளை விரைவுபடுத்துவதற்கும், குடியுரிமை பெற்றுக் கொள்வதை உறுதி செய்யக்கூடிய அனைத்து இடங்களிலும் எளிய பொறிமுறையொன்றை உருவாக்கவும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள பிரதான அலுவலகங்களால் தற்போது கையாளப்படும் குடியுரிமை பெறுவது தொடர்பான ஆவணங்களை மாவட்ட மட்டத்தில் ஏற்றுக் கொள்ளவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. ஆவணங்கள் தொடர்பில் ஆதரவுகளைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் இணைந்து ஒக்டோபர் மாதத்தில் நடமாடும் சேவையொன்றை வடமாகாணத்தில் நடத்தவும் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

இவை இவ்வாறிருக்க, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்புக்கு ஏற்ப, மேற்குலக நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் இலங்கையரும் தாயகம் திரும்புவதிலும் முதலீடுகளை மேற்கொள்வதிலும் கவனம் செலுத்தி இருக்கின்றனர். இந்தப் பின்னணியில் புலம்பெயர்ந்தவர்களுக்கான அலுவலகமொன்றை ஜனாதிபதி செயலகத்தில் அமைப்பதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்நாட்டில் இருந்து தமிழகத்திற்கும் ஏனைய மேற்குலக நாடுகளுக்கும் யுத்த காலத்தில் புலம்பெயர்ந்துள்ள இலங்கையர் தாயகம் திரும்ப விருப்பும் கொண்டுள்ள தற்போதைய சூழலில் முன்னெடுக்கப்படும் இவ்வாறான நடவடிக்கைகள் புதிய நம்பிக்கையையும் எதிர்பார்ப்புக்களையும் ஏற்படுத்தக் கூடியனவாக அமைந்துள்ளன. இந்நகர்வுகள் தமிழகத்தில் தங்கியுள்ள தமிழ் அகதிகள் மத்தியிலும் மேற்குலக நாடுகளில் வாழும் புலம்பெயர் இலங்கையர் மத்தியிலும் ஏற்பட்டுள்ள புதிய நம்பிக்கைக்கு நிச்சயம் வலுசேர்க்கவே செய்யும்.

வெளிநாடுகளில் அகதிகளாகத் தங்கி இருப்பதைவிடவும் சொந்த மண்ணில் கௌரவமாக வாழவே பெரும்பாலானவர்கள் விரும்புகின்றனர். அதனால் யுத்த காலத்தில் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்த இலங்கையர் தாயகம் திரும்ப விருப்பம் கொண்டுள்ளதும் அவர்களுக்கான சேவைகள் குறித்து விஷேட கவனம் செலுத்தப்பட்டிருப்பதும் நாட்டின் புதிய சுபீட்சத்திற்கும் மறுமலர்ச்சிக்கும் வித்திடும் என்பதில் ஐயமில்லை. நாட்டின் வளமான எதிர்காலத்தை அடிப்படையாகக் கொண்டுதான் அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன. அதனால் நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்திய இத்திட்டங்கள் வெற்றி பெற ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கப்படுவது இன்றியமையாததாகும்.

editor.tkn@lakehouse.lk

# அருந்ததி நிறுவனம் மட்டுநகரில் அடுத்தமாதம் நடத்தவிருக்கும் 'மாற்று மோதிரம்' கண்காட்சி

**தினகரன், வாரமஞ்சரி ஊடக அனுசரணை**

திருமண சேவை மற்றும் மணப்பெண் அலங்காரக் கலைகளை நடத்தி வருகின்ற அருந்ததி நிறுவனம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி மட்டக்களப்பில் உள்ள அஞ்சனா கிராண்ட் பலஸ் ஹோட்டலில் நிகழ்ச்சியொன்றை நடத்தவிருப்பதாக அந்நிறுவனத்தின் பணிப்பாளர் தல் நிகழ்வு மட்டக்களப்பில் நடைபெறவிருக்கும் தகவலை கொழும்பில் நடத்திய ஊடகச் சந்திப்பின் போது அருந்ததி தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சிக்கு தினகரன் மற்றும் வாரமஞ்சரி பத்திரிகைகள் ஊடக அனுசரணை வழங்






கே. மேகலா தெரிவித்தார்.

'மாற்று மோதிரம்' என்ற பெயரிலான மேற்படி மணப்பெண் மற்றும் மணமகன் அலங்காரக் காட்சிப்படுத் குகின்றன. அங்கு கருத்துத் தெரிவித்த அருந்ததி நிறுவனத்தின் பணிப்பாளர் மேகலா மேலும் தெரிவித்ததாவது:

கடந்த வருடம் கொழும்பு பி.எம். ஐ.சி.எச் இல் மிகப் பிரமாண்டமாக இந்த மாற்று மோதிரம் கண்காட்சியை நடத்தினோம். அதன் பின்னர் யாழ்ப்பாணத்திலும் நடத்தி பெண் திறமையாளர்கள் பலரையும் இந்துறையில் வெளிக்கொண்டு வந்துள்ளோம். சுயதொழில் முயற்சியாளர்களான பெண்களுக்கு நாங்கள் கைகொடுத்து வருகின்றோம். கடந்த வரும் கொவிட் 19 தொற்று காரணமாக இத்துறை சார்ந்தவர்களின் நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டது. தற்பொழுதுபுதியவடிவிலானமணப்பெண் அலங்காரங்கள் நவீன முறையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அதனை கருத்திற் கொண்டு மேலும் இத்துறை சார்ந்தவர்களை ஊக்குவிக்கும்முகமாக இத்துறையை எனது அருந்ததி கம்பனி மீள ஆரம்பித்துள்ளது.

மட்டக்களப்பில் குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் உள்ள் இத்துறை சார்ந்தவர்களது வேண்டுகோளின் பேரில் இக்கண்காட்சியை நடத்த திட்டமிட்டுள்ளோம். இச்சந்தர்ப்பத்தில் மட்டக்களப்பில் கேக் வடிவமைக்கும் பெண்கள் காட்சியும் நடைபெறும். அத்துடன் திருமண சேவை, கொட்டுமேளம் காட்சி, மாற்றுமோதிரம் காட்சிகள் மேடையேற்றப்படும். ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் நடத்திய கண்காட்சியில் மாகாண ஆளுநர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். அக்கண்காட்சியை காண்பதற்கு ஏராளமான மக்கள் வருகை தந்திருந்தனர்.

கொழும்பு பி.எம். ஐ.சி.எச் இல் 100க்கும் காட்சிகளை வெளிக்கொணர்ந்தோம். இத்துறை சார்ந்தவர்கள் நாட்டில் பல்வேறு பிரதேசங்களில் இருந்து கலந்து கொண்டனர். இம்முறையும் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்ட பிரதேசத்தில் இத்துறை சார்ந்தவர்களின் ஆக்கங்களை மேடையேற்ற உள்ளோம்.

இவ்வாறு மேனகா தெரிவித்தார். இந்த ஊடக மாநாட்டில் தினகரன், வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர், ஏற்பாட்டாளர் கருணாகரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

**அஷ்ரப் ஏ சமத்**

# விரைவில் வெளிவரவிருக்கும் கல்விச்சுடர் மாதாந்த மின்னிதழ்

இலங்கையிலுள்ள முன்பள்ளி முதல் பல்கலைக்கழகங்கள் வரை பயின்று கொண்டிருக்கும் மாணவர்களின் நலன் கருதி 'கல்விச்சுடர்' என்ற பெயரில் மாதாந்த மின்இதழ் ஒன்று விரைவில் வெளிவரவிருக்கின்றது. தமிழ், ஆங்கில மொழிகளிலான ஆக்கங்கள் இந்த சஞ்சிகையில் இடம் பெறவுள்ளன.

இலங்கையில் கல்வித் துறையில் காணப்படும் குறைபாடுகள், கல்வி விருத்திக்காக மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்பாடுகள், கல்விச் சீர்திருத்தங்கள், புதிய போக்குகள் பற்றிய தகவல்கள், மாணவர்கள் கல்வி மற்றும் தொழில்வாய்ப்புக்கள் சம்பந்தப்பட்ட தகவல்கள், அதிபர் ஆசிரியர்களுக்கான ஆலோசனைகள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கான கல்விசார் வழிகாட்டுதல்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் அவற்றின் கல்விப் போதனைகள், கல்வி மேம்பாட்டுக்கு அரச மற்றும் புலம்பெயர் சமூக நிறுவனங்கள் வழங்கி வரும் நிதியுதவிகளும் ஆதரவும், பாடசாலைகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட செய்திகள், தகவல் குறிப்புகள் போன்ற பல தகவல்களை உள்ளடக்கியதாக 'கல்விசுடர்' மின்னிதழ் வெளிவரவிருக்கிறது.

ஆக்கங்கள் தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் இடம்பெறும். இது மின்னிதழ் என்பதால் சர்வதேச ரீதியில் குறிப்பாக இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து வாழும் அனைவரினதும் பார்வைக்கு இந்த சஞ்சிகையை கொண்டு செல்லும் வாய்ப்பு இருக்கிறது. இந்த சஞ்சிகைகளுக்கு கல்விசார் அறிஞர்கள், புலமையாளர்கள், கல்வித் துறையில் இருந்து ஓய்வு பெற்றவர்கள் மற்றும் பத்திரிகைத் துறையில் அனுபவமிக்கவர்கள், சமூகவியலாளர்கள் என்போரின் பேராதரவு கோரப்படுகின்றது.

கருத்துக்களை ஆக்கங்களாக வடிவமைத்து அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் சஞ்சிகைக்கு பங்களிப்பு செய்யலாம்.

ஆக்கங்கள் தமிழ் அல்லது ஆங்கில மொழியில் அமையலாம்.

கையெழுத்துப்பிரதி ஆக்கங்களில் A4 தாளில் நான்கு பக்கங்களுக்கு மேற்படாமலும், கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட ஆக்கங்கள் A4 தாளில் இரு பக்கங்களுக்கு மேற்படாமலும் kalvichchudaredfsl@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

தொடர்புகளுக்கு மேலுள்ள மின்னஞ்சல் முகவரியை பயன்படுத்த முடியும்.

**கல்விசுடர் ஆசிரியர் குழு**
**தகவல்: எச்.எச்.விக்ரமசிங்க**

# முஸ்லிம் உலகுக்கு பெருமை சேர்க்கும் ஈரானிய தேசம்

ஏகாதிபத்தியவாதிகளாலும் அரபு ஆட்சியாளர்களாலும் தூண்டப்பட்ட சதாம் ஹுசைனின் ஈரான் மீதான எட்டு ஆண்டுகால அழிவு யுத்தம் 1980 செப்டம்பர் 22 ஆம் திகதி ஆரம்பமானது. இப்படையெடுப்பை நினைவுகூரும் வகையில். ஈரான் இஸ்லாமிய குடியரசு மோதலின் கசப்பான மற்றும் கௌரவமான நினைவுகளை ஈரானிய சமுதாயத்திற்கு நினைவூட்ட ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதத்தில் 22ஆம் திகதியில் இருந்து புனித பாதுகாப்பு வாரத்தை அனுஷ்டிக்கிறது. பாதுகாப்புத் துறையில் தன்னிறைவை அடைய வேண்டும் என்ற வைராக்கியத்தை ஈரான் இஸ்லாமிய குடியரசுக்கு இந்த யுத்தம் வழங்கியது எனலாம்.

ஏவுகணை, ரேடார், கடல்சார் பாதுகாப்பு, லேஸர் கருவிகள், கவச வாகனங்கள் மற்றும் ட்ரோன் தொடர்பான மேம்பட்ட அமைப்புகள் மற்றும் உபகரணங்களை வடிவமைத்து தயாரிப்பதில் ஈரானின் சாதனைகள் அதன் தற்காப்பு சக்தியை சிறந்ததாக ஆக்கியுள்ளன.

ஈரான் இஸ்லாமியக் குடியரசின் இராணுவ விமானப்படைத் தளபதியின் கூற்றுப்படி, ஆளில்லா வான்வழி வாகனங்களை (UAV) உற்பத்தி செய்யும் துறையில் ஈரான் 100% தன்னிறைவை அடைந்துள்ளது.

'Kaman12' மற்றும் 'Kaman22' என பெயரிடப்பட்ட இரண்டு அதிநவீன ட்ரோன்களை தயாரிப்பதில் ஈரானிய விமானப்படை குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது என்று பிரிகேடியர் ஜெனரல் ஹமிட் வாஹிதி கூறுகின்றார்.

மேம்பட்ட UAV களை உற்பத்தி செய்யும் துறையில் ஈரான் சிறந்த பலம் வாய்ந்த நாடுகளில் ஒன்றாக இருப்பதாகவும், இந்த திறன் வேகமாக அதிகரித்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஈரானிய ஆயுதப் படைகளின் பிரதம தளபதியான ஆயதுல்லா செய்யதலி காமனெய், 'தேசம், நாடு மற்றும் எதிர்காலத்தின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளிக்க, தற்காப்புத் திறனுக்கு மேலதிகமாக தாக்குதல் திறனையும் அதிகரிக்க வேண்டும்' என்று கூறினார்.

இஸ்லாமிய புரட்சிகர காவல்படையின் தலைமைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹுசைன் சலாமி ஏப்ரல் 19, 2022 அன்று, ஈரானிய இராணுவம் மற்றும் ஐ.ஆர்.ஜி.சி ஆகிய இரண்டிலும் ஆளில்லா விமானங்களைத் தயாரிக்கும் துறையில் சாதனைகள் மிகச் சிறந்தவை என்று கூறினார்.

தளபதி, பிறிதொரு வைபவத்தில் உரையாற்றுகையில், இன்று, அமெரிக்கா தனது எந்த திட்டத்தையும் (எம்மை மீறி) பிராந்தியத்தில் செயல்படுத்த முடியாது, அதன் திட்டங்கள் தோல்வியில் முடிவடைகின்றன. ஈரான் பாதுகாப்புக்காக ஏனையோரில் தங்கியிருந்த சகாப்தம் முடிந்துவிட்டது என்று குறிப்பிட்டுள்ளார்.



பல தொழில்நுட்பங்களில் நாங்கள் முதல் இடத்தில் இருக்கிறோம், வான் பாதுகாப்புத் துறையில் கூட, சில வல்லரசுகள் நமது ஆயுதங்களை வாங்கும் நிலையில் உள்ளன. மற்றும் கூட்டு ஒத்துழைப்பை அவை நாடும் அளவுக்கு உலகின் தலைசிறந்த சக்திகளை நாம் விஞ்சிவிட்டோம், என்று அவர் குறிப்பிட்டார்.

ஈரானிய ஆயுதப் படைகளின் தலைமைத் தளபதி மேஜர் ஜெனரல் முகமது ஹுசைன் பாகரி,

நாட்டின் அதிநவீன பாதுகாப்பு வலையமைப்பினால் ஈரானிய வான்பரப்பை பாதுகாக்க முடிந்துள்ளது மற்றும் சர்வதேச அரங்கில் ஈரான் இஸ்லாமிய குடியரசின் தடுப்பு சக்தியானது எந்தவொரு அச்சுறுத்தலுக்கும் பதிலளிக்க முழுமையாக தயாராக உள்ளது என்றார்.

தேசிய வான் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு ஜெனரல் பாகரி விடுத்த செய்தியில், 'நாட்டின் ஆயுதப் படைகள் மற்றும் மேம்பட்ட பாதுகாப்பு வலையமைப்பின் தீர்க்கமான மற்றும் மூலோபாயப் பங்கில் இருந்து பயனடைந்ததுடன், வான் பாதுகாப்புப் படையினால் ஈரானிய வான்வெளியின் பாதுகாப்பை முழுமையான விழிப்புணர்வுடன் பாதுகாக்க முடிந்தது என்றார்.

ஈரானிய இராணுவத்தின் தரைப்படையானது மத்திய ஈரானில் இரண்டு நாள் எக்ததார் (வலிமை) 1401 பயிற்சிகளை அண்'மையில் தொடங்கியது, நாட்டின் மத்திய பகுதியில் துரித எதிர்வினைப் படைகள் மற்றும் ஹெலிகொப்டர்களின் குழுக்கள் இணைந்து ஒரே இரவில் ஹெலிபோர்ன் நடவடிக்கைகளைக் கொண்டிருந்தன.

ஈரானிய இராணுவ தரைப்படையானது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ஒரு மூலோபாய ஏவுகணையை (SSM) சோதித்தது, இது குறிப்பிட்ட இலக்கை துல்லியமாக தாக்கியது. ஃபத்ஹ் (வெற்றி) 360 என்ற குறியீட்டுப் பெயரிடப்பட்ட இந்த ஏவுகணை, எக்ததார் 1401 பயிற்சியின் இரண்டாம் கட்டத்தில் ஏவப்பட்டது.

ஈரானிய இராணுவப் பிரிவுகளும் உள்நாட்டு தயாரிப்பான ஃபஜ்ர்5 ஏவுகணைகளை ஏவியது. இந்த ஏவுகணை 75 கிலோமீட்டர் வரை செல்லக்கூடியது என்றும், 90 கிலோகிராம் எடையுள்ள வெடிமருந்துகளுடன் 175கிலோ வெடிபொருட்களை சுமந்து செல்லக்கூடியது என்றும் கூறப்படுகிறது.

ஃபத்ஹ் 360 ஏவுகணை மணிக்கு 3,704 கிலோமீட்டர் வேகத்தில் சென்று மூலோபாய இலக்குகளைத் தாக்கும் வல்லமைக்கு கொண்டது, மேலும் அதன் வேகத்தை மணிக்கு 5,000 கிமீ ஆக அதிகரிக்க முடியும், அதே நேரத்தில் செயற்கைக்கோள்களுடன் தொடர்பை ஏற்படுத்தி, விரைவான வழிசெலுத்தல் மற்றும் எதிரி இலக்குகளுக்கு எதிராக வேகமாகத் தாக்கக்கூடிய வல்லமை கொண்டதாகும்.

ஈரான் இஸ்லாமிய குடியரசு இராணுவம் நாடு முழுவதும் பெரிய அளவிலான ட்ரோன் பயிற்சிகளைத் தொடங்கியது, 150 க்கும் மேற்பட்ட புதிய மேம்பட்ட ட்ரோன்கள் இதன்போது பயன்படுத்தப்பட்டன.

முஹாஜிர்6 ISTAR விமானங்களுக்கு கூடுதலாக உள்நாட்டு தயாரிப்புகளான யாசிர், சாதிக், யஸ்டான், மற்றும் அபாபீல் 3 தந்திரோபாய கண்காணிப்பு ஆளில்லா வான்வழி வாகனங்கள், பெலிகன் செங்குத்து டேக்ஆஃப் மற்றும் லேண்டிங் கடற்படை ட்ரோன்கள், வெவ்வேறு தளங்களிலிருந்து பறந்து ஈரான் முழுவதும் நாட்டின் எல்லைகளை கண்காணிப்பதில் ஈடுபட்டன.

இந்தியப் பெருங்கடல் கடற்படை சிம்போசியம், பொதுவாக IONS (IMEX 2022) என்று அழைக்கப்படுகிறது, இந்திய கோவா துறைமுகத்தில் ஈரான், இந்தியா, பங்களாதேஷ் மற்றும் இந்தியப் பெருங்கடல் நாடுகள் சில இதில் பங்கேற்றன. உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ஈரானிய DENA அழிப்பான் இந்த பயிற்சியில் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது.

ஈரானிய, ரஷ்ய மற்றும் சீன கடற்படைகள் இணைந்து தங்களது மூன்றாவது இராணுவ பயிற்சியை இந்தியப் பெருங்கடலில் அண்மையில் நடத்தியது.

சமீபத்தில், ஈரானின் இராணுவ விமான பாதுகாப்பு படையின் தளபதி பிரிகேடியர் ஜெனரல் அலிரெஸா சபாஹிஃபார்ட், உள்நாட்டு தயாரிப்பான 300 கி.மீ. சென்று தாக்கக்கூடிய Bavar373 விமான பாதுகாப்பு அமைப்பின் இறுதி சோதனை அடுத்த சில நாட்களில் மேற்கொள்ளப்படும் என்று குறிப்பிட்டார்.

Bavar 373 வான் பாதுகாப்பு விமானம் தயாரிப்பதற்கான அனைத்து உபகரணங்களும் நிபுணத்துவமும் நாட்டினுள் பூர்வீகமாக இருக்கின்றன, என்பதை அவர் அடிக்கோடிட்டுக் காட்டினார்.

மேலும், ஈரானின் இஸ்லாமிய புரட்சியின் (ஐ.ஆர்.ஜி.சி) கடற்படை தளபதி ரியர் அட்மிரல் அலிரெஸா தங்சிறி (Alireza Tangsiri), ஐ.ஆர்.ஜி.சி கடற்படை படைகள் ஆண்டு இறுதி வரை பல்வேறு காலங்களில் பல்வேறு இராணுவ சாதனைகளை வெளியிடும் என்று கூறினார்.

**ஆக்கம்:**
**Amin Mohammadzadegan Khoyi**
**தமிழில்: தாஹா முஸம்மில்**

# நவராத்திரி இன்று ஆரம்பம்

ஒவ்வொரு வருடமும் புரட்டாசி மாத அமாவாசைக்கு மறு நாள், கொலு ஆரம்பிக்கும். அந்த வகையில் நவராத்திரி விரதம் இன்று ஆரம்பமாகிறது. நவராத்திரி ஆரம்பிக்கும் போது வீட்டில் வழக்கமாக கொலு வைப்பவர்கள் கலசம் வைப்பார்கள்.

எப்பொழுதும் போல, பிள்ளையார், குல தெய்வம், இஷ்ட தெய்வம், அதிர்ஷ்ட தெய்வங்களை மனதினுள் வணங்கி விட்டு, ஒரு வெள்ளிச் செம்பு அல்லது தாமிரச்(செப்பு) செம்பை எடுத்து, நன்றாகக் கழுவி விட்டு, சந்தனம் குங்குமம் வைக்க வேண்டும்.அதனுள் பச்சரிசியை நிரப்ப வேண்டும். அதனுள் ஏலக்காய், கிராம்பு, ஜாதிக்காய் போன்ற வாசனைத் திரவியங்களையும், மற்றும் காசு இவற்றைப் போட வேண்டும். தங்க நாணயம், வெள்ளி நாணயம், செப்பு நாணயம் இருந்தால் இவற்றையும் போடலாம்.

கலசத்தின் மேல் மாவிலை அல்லது வெற்றிலையை சுற்றி வர வைத்து, அதன் மேல் மஞ்சள் தடவிய தேங்காயை வைக்க வேண்டும். தேங்காய்க்கு சந்தனம் குங்குமம் இட வேண்டும். இந்தக் கலசத்தை, கொலு அம்மனாக பாவித்து, பூஜை அறையிலிருந்து எடுத்து வந்து, கொலுப் படியில் வைக்க வேண்டும். கலசத்தின் மேல் தினமும் பூக்கள் வைக்க வேண்டும்.



பூஜையாக செய்ய வேண்டும் என்றில்லாமல், குழந்தைகளின் ஆசைக்காக கொலு வைப்பவர்கள், கலசம் வைக்க வேண்டும் என்பதில்லை. புரட்டாசி மாத அமாவாசையன்று, கொலு வைப்பதற்கான வேலைகளைத் தொடங்கலாம். (கொலு மறு நாள்தான் ஆரம்பிக்கும்)

மரப்பாச்சி பொம்மைகள் இருந்தால், அவற்றை ஜோடியாக அமாவாசையன்று கொலுப்படியில் வைத்து விடலாம்.

கொலுப் படிகள் 5 அல்லது 7 அல்லது 9 அல்லது 11 படிகள் வைக்கலாம். ஹாலில் கிழக்கு மேற்காக இருக்குமாறு படிகளை அமைக்க வேண்டும்.

படிகளை அமைத்த பின், சுத்தமான வெள்ளைத் துணியை, படிகளின் மேல் விரிக்க வேண்டும்.

மேல் படிகளில், முதலில் நடுவில் பிள்ளையார் பொம்மையை வைத்து, மற்ற தெய்வ உருவங்களை வைக்க வேண்டும்.

அடுத்த படியாக மீனாட்சி கல்யாணம், தசாவதாரம், போன்ற செட் பொம்மைகளை வைக்கலாம்.

அதற்கு அடுத்தபடியாக, மனிதராகப் பிறந்து, மகான்களாக ஆனவர்களின் பொம்மைகளை வைக்கலாம்.(விவேகானந்தர், சாரதா தேவி, ஷீரடி சாயிபாபா, பரம ஹம்ஸர்) பிறகு, மற்ற பொம்மைகள் கிரிக்கெட் வீரர்கள், குறவன் குறத்தி, செட்டியார் பொம்மைகள் இப்படி வைக்கலாம்.

பிறகு மிருக பொம்மைகள் சிங்கம், புலி, குரங்கு பொம்மைகள் போன்றவை. அடுத்த படியில் பறவை பொம்மைகள். கீழ்ப் படிகளில் ஊர்வனவற்றின் பொம்மைகள் மற்றும் அனைத்து பொம்மைக ளையும் வைக்கலாம்.

கலசம் வைப்பதாக இருந்தால், கீழே இருந்து முதல் படியிலோ அல்லது மூன்றாவது படியிலோ(கைக்கு எட்டும் தூரத்தில்) கலசத்தை வைக்கலாம். தினமும் பூ வைக்க வேண்டும். பூப் போட்டு, பூஜை செய்ய வேண்டும் அல்லவா.

கலசம் வைக்கவில்லை என்றாலும், கொலு என்பது அம்மன் வடிவம்தான். அதனால் தினமும் மாலையில் விளக்கேற்றி, சுண்டல் போன்ற நைவேத்தியங்கள் தினமும் செய்ய வேண்டும்.

கொலுவின் இரண்டு பக்கமும் கீழே விளக்கேற்றி வைக்கலாம். பாதுகாப்பு குறைவு, குழந்தைகள் இருக்கும் வீடு என்றால் பூஜையறையில் மட்டும் ஏற்றினாலும் போதும். நைவேத்தியத்தையும் பூஜையறையில் விளக்கேற்றி, நைவேத்தியம் செய்து, கொலுவுக்கு முன்னால், கொண்டு வந்து வைக்கலாம்.

மாலை நேரங்களில் ஒலிக்க விடுங்கள். லலிதா ஸஹஸ்ரநாமம், அபிராமி அந்தாதி இவற்றைப் படிக்கலாம் அல்லது ஒலிக்கச் செய்து, கேட்கலாம். ஸ்ரீஸுக்தம், ஸ்ரீ தேவி பாகவதம் இவையும் ஒலி வடிவில் யு டியூபில் கிடைக்கின்றன. இவற்றையும் மாலை வேளைகளில் ஒலிக்கச் செய்யுங்கள்.




## மானுடவியல்
(தொடர்)

### கழறிற்றறிவார் நாயனார்



89

சிலம்பொலியைக் கேட்டு மகிழ்ந்த சேரவேந்தர் தமது உடைவாளைக் கீழே எறிந்துவிட்டுத் தலைமேற் கைகுவித்து வணங்கி நின்றார்.

'தேவர்களும் தேடிக் காணுதற்கரிய பெருமானே! இத்திருவருளை முன்பு செய்யாது தவிர்த்தது எது கருதி? என வினவினார் கழறிற்றழிவாகியாராகிய சேராமான்பெருமாள்.

அந்நிலையில் தோன்றாத் துணையாக மறைந்து நின்றருளிய இறைவர் "சேரனே! வன்றொண்டனாகிய சுந்தரன் தில்லையம்பலத்திலே நாம் புரியும் திருக்கூத்தினைக் கண்டு ஐம்புலன்களும் ஒன்றிய உணர்வுடன் நின்று புகழமைந்த திருபதிகங்களால் நம்மைப் பரவிப் பாடினான். அவன் பாடிய தீஞ்சுவைப் பாடலில் நாம் திளைத்திருந்தமையால் இங்கு நீ புரியும் வழிபாட்டிற்கு உரிய நேரத்தில் வரத் தாழ்ந்தோம்' எனத் திருவாய் மலர்ந்தருளினார்.

அவ்வருள் மொழியைச் செவிமடுத்த சேரமான் பெருமாள் 'அடியார்களுக்கு அருள் புரியும் இறைவனது கருணைத்திறம் என்னே' என வியந்து உளமுருகினார்.

இறைவன் திருநடம்புரிந்தருளும் பெரும்பற்றப் புலியூரிலமைந்த பொன்னம்பலத்தையும் அங்கே இறைவனது ஆடல் கண்டு மகிழ்ந்த தன்னேரில்லாப் பெரியோராகிய வன்றொண்டரையும் கண்டு வழிபடுதல் வேண்டும் எனக் கருதிச் சோழ நாட்டிற்குச் செல்ல விரும்பினார். திருவஞ்சைக் களத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவனை வழிபட்டுச் சேனைகளுடன் புறப்பட்டுச் கொங்கு நாட்டைக் கடந்து சிவனடியார்கள் எதிர்கொண்டு போற்றச் சோழ நாட்டை அடைந்தார்.

காவிரியில் நீராடி அதனைக் கடந்து தில்லைமூதுரின் எல்லையை அடைந்தார். அந்நிலையில் தில்லை வாழந்தணர்களும் சிவனடியார்களும் எதிர்கொண்டு போற்றச் சோழநாட்டை அடைந்தார். காவிரியில் நீராடி அதனைக் கடந்து தில்லைமூதூரின் எல்லையை யணுகினார். அந்நிலையில் தில்லைவாழ் அந்தணர்களும் சிவனடியார்களும் எதிர்கொண்டு வரவேற்றனர்.

அடியார்களோடு தில்லைத் திருவீதியை வலம்வந்து எழுநிலைக் கோபுரத்தை வணங்கி உட்புகுந்த சேரமான்பெருமாள் நாயனார் திருப் பேரம்பலத்தை இறைஞ்சி உள்ளே புகுந்து இறைவன் ஆடல் புரியும் திருச்சிற்றம்பலத்தின் முன் அணைந்தார். **(தொடரும்)**

கலாநிதி சிவஸ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்

# மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோவிலில் நவராத்திரி விழா

நவராத்திரி விழாவை முன்னிட்டு கொழும்பு 6, மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோவிலில் நவராத்திரி கொலு பூஜை மற்றும் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. நவராத்திரி விழாவின் ஆரம்ப நாளான எதிர்வரும் 26ஆம் திகதி திங்கட்கிழமை துர்க்கைக்கான பூஜை வழிபாடுகள் மாலை 5.30 மணி முதல் 5.45 வரை கொலு பூஜையும் அதனையடுத்து செல்வி சதுர்ஷியின் பேச்சு மற்றும் மயூரபதி அறநெறிப் பாடசாலை மாணவர்களின் 'பலதுர்க்கா' இசை நிகழ்ச்சியும் நடைபெறவுள்ளது.

இரண்டாம் நாளான 27ஆம் திகதி செவ்வாய் மாலை 5.30 மணிக்கு கொலு பூஜையுடன் ஆரம்பமாகி செல்வி சனுஷிகா லோகநாதனின் பேச்சும் அதனைத் தொடர்ந்து வீணா நாதலயம் அகடமி வழங்கும் 'வீணாம்ர்தம்' வாத்திய நிகழ்ச்சியும், ஆசிரியை திருமதி சுகன்யா நித்தியானந்தனின் சுந்தரேசர் கலைக்கோயில் மாணவிகளின் 'நவராத்திரி விழா சமர்ப்பணம்' என்பன இடம்பெறும்.

மூன்றாம் நாள் 28ஆம் திகதி புதன் மாலை 5.30 மணிக்கு கொலு பூஜை, செல்வி திலக் ரத்நாயக்க சச்சினியின் பேச்சு, ஸ்ரீ கைலேஸ்வர நாட்டியாலயா நுண்கலைக்கூட மாணவிகளின் 'தேவி நீயே துணை' நடனம், நூபுரஷேத்திரம் நடனப்பள்ளி மாணவிகளின் 'இந்திய சாஸ்திரிய நடன சங்கமம்' நடனமும் இடம்பெறும்.லக்ஷ்மி தேவிக்குரிய மூன்று நாட்களில் முதலாம் நாளான 29ஆம் திகதி வியாழன் மாலை 5.30இற்கு கொலு பூஜையுடன் ஆரம்பமாகி செல்வி ஜசந்தி தியாகராஜாவின் பேச்சு, ஸ்ரீகைலேஸ்வர நாட்டியாலயா நுண்கலைக்கூட மாணவிகள் வழங்கும் 'தேவி நீயே துணை' நடனம், மயூரபதி அறநெறிப் பாடசாலை மாணவர்களின் 'தமிழிசை' இசை நிகழ்ச்சியும் இடம்பெறும்.

லக்ஷ்மி தேவிக்குரிய இரண்டாம் நாளான 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு கொலு பூஜை, செல்வி மயூரி பாலகுமாரின் பேச்சு, தேஜஸ்வராலயா கலைக்கூடம் வழங்கும் 'வீணா காணா சமர்ப்பணம்' வாத்திய நிகழ்ச்சி, சிவஷேக்திரம் நடனக்கல்லூரி மாணவிகளின் நடன நிகழ்ச்சி இடம்பெறும்.



லக்ஷ்மி தேவிக்குரிய மூன்றாம் நாளான 01.10.2022 சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு கொலு பூஜை, செல்வி விலக்ஷி முத்துக்குமாரின் பேச்சு, மயூரபதி அறநெறிப் பாடசாலை தரம் 1 மற்றும் தரம் இரண்டு மாணவர்களின் 'விநோத உடை' மற்றும் மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நடனம் ஆகியன இடம்பெறும்.

சரஸ்வதி தேவிக்குரிய மூன்று நாட்களில் முதலாம் நாளான 02.10.2022 ஞாயிறன்று மாலை 5.30 மணிக்கு கொலு பூஜை, மாணவன் நிதுர்ஷன் லிங்கேஸ்வரனின் பேச்சு, சைவமங்கையர் கழக மாணவிகளின் 'பல்லியம்' வாத்திய நிகழ்ச்சி, நடேசன் இசைக்கல்லூரி மாணவர்களின் இசை நிகழ்ச்சியும் இடம்பெறும்.

சரஸ்;வதி தேவிக்குரிய இரண்டாம் நாளான 03.10.2022 திங்களன்று மாலை 5.30 மணிக்கு கொலு பூஜை, செல்வி பாலகிருஷ்ணன் திஷாந்திகாவின் பேச்சு, ஆவர்த்தனா பை(க)ன் ஆர்ட்ஸ் வழங்கும் 'நாதத்துவணி' வாத்திய நிகழ்ச்சி, மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் 'நவதுர்க்கைகள்' இசை நிகழ்ச்சி ஆகியன இடம்பெறும்.

சரஸ்வதி தேவிக்குரிய மூன்றாம் நாளான ஒக்டோபர் 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு கொலு புஜையுடன் செல்வி சரிக்கா மோகன்ராஜ் பேச்சு, ஸ்ரீராம் சிருஷ்டி 'கீர்த்தனம்' நடனம், மயூரபதி அறநெறிப் பாடசாலை மாணவர்களின் 'மீனாட்சி திருக்கல்யாணம்' வில்லுப் பாட்டு ஆகிய நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

05.10.2022 புதன்கிழமை காலை 07.00 மணிக்கு விஜயதசமி (ஏடு) தொடக்கம் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

## "யுகரிஷியின் ஆன்மீகச் சிந்தனைகள் - 7



ஒருவரின் குணம், செயல், இயல்பு ஆகிவைகளை அறிந்து கொண்டு, அதன் மூலம் அவன் பெறுகின்ற பலன்கள். விளைவுகளை அறிந்து கொண்டால், அதுவே நமக்கு அனுபவ பாடத்தைக் கற்றுக் கொடுக்கும். நற்செயல்களால் மேலோங்கி வளர்பவர்களை, சமுதாயத்தில் நற்பெயர் பெற்ற சான்றோர்களின் வாழ்வை வழிக்காட்டும் பாடமாக நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இதே போல் மனிதன் ஒருவன் தனது நடை, உடை, பாவனை, நடத்தை. குணம் செயல் ஆகியவைகளால் உருவாகும் நற்பலன்களின் மூலமும் அனுபவ பாடம் கற்றுக் கொள்ள முடியும். தன்னை சீர்த்திருத்திக் கொண்டு பிறப்பின் நோக்கத்தை அடைவதற்கான வழியில் நடந்து ஒருவன் நற்கதி பெற வேண்டும். அதாவது நற்சேர்க்கை, சுய ஆய்வு, சிந்தனை, அனுபவம் ஆகியவைகளை ஆதாரமாகக் கொண்டு நல்லறிவு பெற வேண்டும். வேண்டும். இம் முயற்சியை தொடர்ந்து செய்திட வேண்டும்.

ஞானமில்லாத வாழ்வு பொருளற்றது. அறியாமையானது இம்மை (உலக வாழ்க்கை) மற்றும் மறுமை (ஆன்மீக வாழ்க்கை) ஆகியவற்றை நாசமாக்கி விடும். எனவே அறியாமை இருளிலிருந்து விலகி, ஞான தீபத்தின் ஒளியை நோக்கி நாம் முன்னேறிக் கொண்டிருக்க வேண்டும். தனது சோம்பலையும் கவனமின்மையையும் நீக்கி விட்டால் தன்னுடைய பலவீனம் அகன்று விடும் என்பதை மனிதன் உணர வேண்டும். பின்னர் அவன் வாழ்வு சிறப்புற்று விளங்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. மனிதன் தனக்குத் தானே ஒரு முழுமையான மூலக்கூறு ஆவான். அவனுக்குள்ளேயே அனைத்து சக்திகளும், பிறந்ததிலிருந்தே உள்ளன. அந்த சக்தியை ஆதாரமாகக் கொண்டு, எந்த நிலையிலும் நாம் முழுமையான வெற்றியின் சிகரத்தை தொட்டுவிட முடியும்.

மனிதனுடைய உள்ளத்தின் விழிப்புணர்வே, அனைத்து தெய்வங்களின் பிரதிநிதியாகும். உந்தன் சக்தி உன் உள்ளத்தில் உறங்கி கிடக்கும் வரை, அதற்கு எவ்வித மதிப்பும் இருக்காது. அந்த சக்தி விழித்துக் கொள்ளும் போது, நம்மை சுற்றி நாலாபுறமும் அதிசய ஞான ஒளி பிரகாசிக்கும்.

நம் நற்குணங்களோ அல்லது தீயகுணங்களோ தான், நாம் பெற்றிருக்கும் உன்னத நிலை அல்லது அவலநிலைக்கு காரணம் ஆகும்.

வெளிப்புற லாபநட்டங்கள், உதவி இடைஞ்சல்கள் இவை யாவும் நம்மை உயர்த்துவதில்லை அல்லது தாழ்த்துவதில்லை. நம் உயர்வுக்கும் தாழ்வுக்கும் நாமே பொறுப்பு. எவன் தன்னை உணர்ந்து, தன் குறைகளை களைந்து நேர்மறை சிந்தனையுடன் செயல்படுகிறானோ அவன் வெற்றிக் கோட்டைக்கு மிக அருகில் இருக்கிறான்.

எவன் ஒருவன் தனது உள்ளாற்றலை புரிந்து கொண்டு அதனை தட்டி எழுப்புகிறானோ அவனிடம் அபரிதமான தெய்வசக்தி மிகுந்து காணப்படும்.

வெளிப்புற உதவிகளை புறந்தள்ளி, மனிதனின் உள்ளே பொதிந்துள்ள நல்லியல்புகளை வெளிக் கொணர்ந்து, உயர்வதே சிறப்பு. முன்னேற்றத்திற்கான அனைத்து ஆதாரங்களும் மனிதனின் உள்ளாற்றலின் விழிப்புணர்வில் தான் உள்ளது. பிறிதொருவரின் குணம், செயல், இயல்பு ஆகிவைகளை அறிந்து கொண்டு, அதன் மூலம் அவன் பெறுகின்ற பலன்கள். விளைவுகளை அறிந்து கொண்டால், அதுவே நமக்கு அனுபவ பாடத்தைக் கற்றுக் கொடுக்கும்.

**(தொடரும்)**

பண்டிட் ஸ்ரீ ராம் சர்மா ஆச்சார்யா
தமிழில்: ஸ்ரீ ஸக்தி சுமனன்

## அறநெறி அறிவுநொடி



### கே. ஈஸ்வரலிங்கம்
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

**(19278) தீவினைகள் எத்தனை வகைப்படும்?**
மூன்று வகைப்படும்.

**(19279) மூவகை தீவினைகளும் எவை?**
வந்தவை, வந்திருப்பவை, வரவிருப்பவை.

**(19280) இவற்றைத் தொலைக்கக்கூடியது எது?** நாமஜபம்.

**(19281) ஜபமும் தியானமும் செய்வதால் வரப்போகும் துன்பத்தை நீக்கிக்கொள்ள முடியுமா?**
வரவிருக்கும் தீவினைகளையும் இறைவனிடம் முழுமையாகத் தன்னை அர்ப்பணித்துக்கொள்வதால், போதிய அளவு மேற்கொள்ளப்படும் ஜபம், தியானம் போன்ற தவ சாதனைகளினால் விலக்கிக் கொள்ளலாம் அல்லது வெகுவாகக் குறைத்துக் கொள்ளலாம் என கூறப்படுகிறது.

**(19282) வேறு எவ்வாறு துன்பங்களை நீக்கிக்கொள்ள முடியும்?**
சில பரிகாரங்கள், தான தர்மங்கள் போன்றவற்றாலும் நீக்கிக் கொள்ள முடியும்

**(19283) மனிதருக்கு முக்தி கிடைக்கிறது என்றால் என்ன நடக்கிறது?**
அத்தகைய மனிதர் பரமேச்வரனுடன் ஐக்கியமாகி விடுகின்றனர். அவர்களுக்கு சச்சிதானந்த நிலை சித்திக்கிறது. எது நடந்தாலும் அவர்களுக்கு சுகமும் இல்லை, துக்கமும் இல்லை. உண்மையான அப்பழுக்கற்ற ஆனந்த நிலை! இத்தகையவரே முக்தி அடைந்தவர்.

**(19284) நைவேத்யங்களை படைக்கும் பொழுது எதில் வைத்து படைக்க வேண்டும்?**
நேரடியாக உலோகப் பாத்திரங்களில் படைக்கப்படாமல் இயற்கையாக கிடைக்கும் வாழை இலை அல்லது தெய்வீக இலைகளை வைத்து அதன் மேல் நைவேத்யம் படைப்பது சிறந்த முறையாகும்.

**(19284) கோவிலுக்கு செல்வதற்கு முன் கட்டாயம் செய்து விட்டு செல்ல விடயம் என்ன**?வீட்டில் கோலம் போட்டு விட்டு தான் செல்ல வேண்டும்.

**(19285) அது போல் செய்து விட்டு செல்ல வேண்டிய இன்னொரு விடயம் என்ன?** வீட்டில் விளக்கேற்றி விட்டு பின்னர் கோவிலுக்கு செல்வது தான் நல்லது.

**(19286) வீட்டில் விளக்கு எரிந்து கொண்டிருக்கும் பொழுது செய்யக்கூடாதது என்ன?** விளக்கில் இருக்கும் எண்ணையை எந்த காரணம் கொண்டும் நம்முடைய தலையில் தடவிக் கொள்ள கூடாது. இது மிகப்பெரிய தெய்வ குத்தம் ஆகிவிடும்.





இலங்கை வாழ் மலையாள சமூகம் ஓணம் பண்டிகையை கொழும்பில் ஒரு நாள் விழாவாகக் கொண்டாடியது. இலங்கை மலையாள சங்கத்தின் ஏற்பாட்டில் வத்தளை அவ்மாஸ் ஹோட்டல் கலையரங்கில் நடைபெற்ற ஓணம் பண்டிகையில் இந்திய தூதுவராலயத்தின் உயர் அதிகாரி கல்டோஸ் மெத்தியூ புனூஸ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். (ஏ.கே. விஜயபாலன்)



## ஆசிய அபிவிருத்தி ... (03ஆம் பக்கத் தொடர்)

நடைமுறையிலிருக்கும். மேற்படி மாநாட்டில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் அங்கத்துவ நாடுகளின் நிதியமைச்சர்கள் மத்திய வங்கி ஆளுநர்கள் உள்ளிட்ட நிதியமைச்சின் அதிகாரிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.

## ஐ.நா. உணவு, விவசாயம்... (03ஆம் பக்கத் தொடர்)

நேற்று பிற்பகல் 4.30 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையம் வந்தடைந்ததாக விமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

## மாகாண சபைகளின் ... (03ஆம் பக்கத் தொடர்)

பாராளுமன்றினால் குறித்த செயற்பாடு முன்னெடுக்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டது.

பழைய முறையில் அல்லது புதிய முறைமையில் தேர்தல் நடத்தப்பட வேண்டும். மாகாண சபை முறைமை கொண்டு செல்ல வேண்டுமாயின் மாகாண சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும் என முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய மேலும் தெரிவித்துள்ளார்.

## பொலிஸ் அதிகாரி ஒருவரை... (03ஆம் பக்கத் தொடர்)

பயன்படுத்தும் நபர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் தகவலறிந்த மிகிந்தலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சம்பவ இடத்திற்கு பொலிஸாரை அனுப்பியுள்ளார்.

பொலிஸார் அங்கு சென்ற போது, சம்பவம் முடிந்து, தாக்குதல் நடத்தியவர்கள் அங்கிருந்து ஏற்கனவே சென்று விட்டனர். மிகிந்தலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யுமாறு சம்பவத்தில் காயமடைந்த பொலிஸ் அதிகாரிக்கு அறிவித்திருந்த போதிலும் அவர் முறைப்பாடு செய்ய பொலிஸ் நிலையத்திற்கு வரவில்லை என மிகிந்தலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கூறியுள்ளார்.

## 2 கோடி ரூபா தங்கத்துடன்... (03ஆம் பக்கத் தொடர்)

துபாயிலிருந்து ஓமானின் மஸ்கட் ஊடாக கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## மர்ஹூம் ஐ.எல்.எம். சுஜப்... (03ஆம் பக்கத் தொடர்)

என பலரும் கலந்து கொள்வர். மர்ஹூம் ஐ.எல்.எம்.சுஜப் தர்கா நகர் அல்ஹம்றா மகா வித்தியாலயம், தர்கா நகர் ஸாஹிறாக் கல்லூரி, அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சி கல்லூரி ஆகியவற்றில் அதிபராகவும், கொழும்பு ஸாஹிறா கல்லூரியில் ஆசிரியராகவும் கடமையாற்றியுள்ளார். தர்கா நகர் இஷாஅத்துல் இஸ்லாம் அநாதை இல்லம், தர்கா நகர் முஅய்யதுல் இஸ்லாம் அரபுக் கல்லூரி, தர்கா நகர் ஜும்ஆ மஸ்ஜித் ஆகியவற்றில் பல்வேறு பதவிகளை வகித்து அளப்பரிய பணிகளைச் செய்த மர்ஹூம் ஐ.எல்.எம்.சுஜப் 2015ம் ஆண்டு காலமானார்.

## எரிபொருள் விலைகளை... (03ஆம் பக்கத் தொடர்)

மசகு எண்ணெயின் விலை மேலும் வீழ்ச்சியடைந்து வரும் நிலையில் டபிள்யூ.ரி.ஐ.ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 78.74 டொலராக பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### ரயில் முன் பாய்தல், மிதி பலகையில் பயணித்தல்

# ஒரு வாரத்தில் 10 ரயில் விபத்துகள் கவனமாக செயல்படுமாறு அறிவுறுத்தல்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் ரயில் விபத்துக்கள் அதிகரித்து வருவதாகவும் வாரம் ஒன்றுக்கு பத்து நபர்கள் ரயில் விபத்துகளினால் பாதிக்கப்படுவதாகவும் ரயில்வே பிரதி முகாமையாளர் காமினி செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

பிரயாணிகளின் கவனயீனமே இதற்குக் காரணம் என தெரிவித்துள்ள அவர், அதே போன்று தற்கொலை செய்து கொள்பவர்கள், ரயில் மிதிபலகையில் பயணிப்போர் இந்த விபத்துகளில் பாதிக்கப்பட்டு மரணமடைவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அதேவேளை கடந்த காலங்களில் நிலவிய எரிபொருள் நெருக்கடி காரணமாக பிரயாண கட்டணங்கள் அதிகரித்துள்ளதால் மக்கள் பாரிய அளவில் ரயில்களிலேயே தற்போது பயணம் செய்வதாக குறிப்பிட்டுள்ள அவர், ரயில் பயணத்தை மேற்கொள்ளும் போது தமது பாதுகாப்பு தொடர்பில் மிக அவதானமாக செயல்படுமாறும் அவர் பயணிகளைக் கேட்டுக் கொண்டுள்ளார். ரயில் விதி பலகைகளில் பயணிக்கும் போதும் ரயில் கடவைகளை கடக்கும் போதும் மிக கவனமாக செயல்படுமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

# ஒழுக்கவியல், சிறப்புரிமைகள் பற்றிய குழுவின் தலைவராக அமைச்சர் விஜயதாச தெரிவு

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடருக்கான பாராளுமன்ற ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவின் தலைவராக நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜேயதாச ராஜபக்ஷ (21) ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டார்.

பாராளுமன்றத்தின் 118 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகள் மற்றும் 2022 ஆகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை என்பனவற்றிற்கு அமைவாக ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவில் பணியாற்றுவதற்காக உறுப்பினர்கள் தெரிவுக் குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டிருந்தனர்.

அதற்கமைய இந்தக் குழுவின் ஏனைய உறுப்பினர்களாக டிலான் பெரேரா, டலஸ் அழகப்பெரும, வாசுதேவ நாணயக்கார, கபீர் ஹாஷிம், ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார, திருமதி தலதா அதுகோரல, கனக ஹேரத், விஜித பேருகொட, தாரக்க பாலசூரிய, அநுராத ஜயரத்ன, ஜீ.ஜீ. பொன்னம்பலம், ஹேஷா விதானகே, திருமதி கோகிலா குணவர்த்தன, வீர சுமன வீரசிங்ஹ மற்றும் சமன்பிரிய ஹேரத் ஆகியோர் பணியாற்றுகின்றனர்.

# 335 ஏற்றுமதி பயிர்ச்செய்கை வலயங்கள் அடுத்த வருடத்தில் ஆரம்பிக்க தீர்மானம்

## ரமேஷ் பத்திரன எம். பி சபையில் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஏற்றுமதி பயிர்ச்செய்கை தொடர்பில் அரசாங்கம் முக்கிய கவனம் செலுத்தியுள்ளதுடன் அடுத்த வருடத்தில் 335 ஏற்றுமதி பயிர்ச்செய்கை வலயங்களை உருவாக்குவதற்கு தீர்மானித்துள்ளதாக பெருந்தோட்டகைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரன பாராளுமன்றத்தில் அண்மையில் தெரிவித்தார்.

அதேவேளை கறுவா, கிராம்பு போன்ற வாசனைத் திரவியங்கள் ஏற்றுமதி மூலம் கடந்த வருடத்தில் 460 மில்லியன் ரூபா வருமானமாக பெற்றுக் கொண்டுள்ளதாக தெரிவித்த அமைச்சர், இந்த வருடம் அது மேலும் அதிகரிக்கும் என்றும் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் சுமித் உடுகும்புர எம்பி எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது கேள்வியின் போது, சில வருடங்களுக்கு முன்னர் விவசாய ஏற்றுமதி கிராமம் என்ற பெயரில் விசேட செயற்திட்டம் ஒன்று வெற்றிகரமாக நடைமுறைப் படுத்தப்பட்டது. தற்போது நிறுத்தப் பட்டுள்ள அந்த செயற்திட்டத்தை மீண்டும் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த அமைச்சர் அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியின் கீழ் விவசாயத்துறை அபிவிருத்திக்கான பல திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அதில் ஏற்றுமதி பயிர்ச்செய்கை தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளதென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பேச்சை துரிதப்படுத்த...

மற்றும் வர்த்தக ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த முடியும் என கொழும்பில் உள்ள சீன தூதரகம் தெரிவித்துள்ளது.

## ஆர்ப்பாட்டத்தில் கைதான ...

எரங்க குணசேகரவும் உள்ளடங்குகின்றார்.

எரங்க குணசேகர உள்ளிட்ட மூவர் நேற்று பிற்பகல் மாளிகாகந்த பதில் மஜிஸ்திரேட் நீதவான் சுனிதா டயஸ் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்ட பின் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். அத்துடன் கைது செய்யப்பட்ட ஏனைய 80 பேரும் பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் லிப்டன் சுற்றுவட்டத்தில் மேற்படி அமைப்புக்களின் ஆர்ப்பாட்டம் ஆரம்பமாகி மருதானை டீன்ஸ் வீதி வழியாக கொழும்பு நகருக்குள் பிரவேசிக்க முற்பட்ட போதே அவர்கள் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## போதைப்பொருள்...

தொடர்பில் கவலையடைய நேர்ந்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

போதைப்பொருளுக்கு அடிமையானோரை கைதுசெய்யும் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்து வரும் நிலையில் சிறைச்சாலைகள் கட்டமைப்புக்கு அதனை சுமக்க முடியாத நிலை உருவாகியுள்ளது. அந்த வகையில் முக்கிய போதைப்பொருள் வர்த்தகர்களை கைதுசெய்வதன் மூலம் போதைப் பொருள்பாவனையாளர்களைகுறைக்க முடியுமென்றும் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் அதுதொடர்பில் மேலும் தெரிவித்த அவர், பொலிஸார் தொடர்பில் மக்களுக்குள்ள நம்பிக்கையற்ற தன்மையை இல்லாதொழிப்பது அவசியமாகும். அதன் மூலமே குற்றவாளிகள் தொடர்பான சரியான தகவல்களை பெற்றுக்கொள்வதை இலகுவாக்க முடியும். மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டிய முக்கிய நிறுவனமான பொலிஸ் நிலையங்கள் மக்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாக்கும் வகையில் செயற்படுவது அவசியமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## A/L கற்கும் மாணவருக்கு...

இதற்கமைய இந்த புலமைப்பரிசில் பெறுவதற்காக ஒரு கல்வி வலயத்திலிருந்து தகுதியுடைய 30 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

அதன்படி நாடு முழுவதுமுள்ள 99 கல்வி வலயங்களின் கீழ் தேர்ந்தெடுக்கப்படும் 2970 மாணவர்களுக்கு இப்புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது. புலமைப்பரிசில் வழங்குவதற்காக தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களுக்கு, அவர்கள் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் வரை மாதாந்தம் தலா 5,000/ ரூபா ஆகக்கூடியது 24 மாதங்களுக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வருட க.பொ.த உயர்தர கல்வியாண்டு ஆரம்பிக்கப்பட்டதும் இந்த புலமைப்பரிசில் வழங்குவதற்கான விண்ணப்பங்களை கோரும் வகையில் பத்திரிகைகளில் விளம்பரங்கள் வெளியிடப்படும்.

இது தொடர்பாக மாகாண பணிப்பாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் அதிபர்களுக்கு துரிதமாக அறிவிக்குமாறு கல்வி அமைச்சின் செயலாளருக்கு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க பணிப்புரை விடுத்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## கொழும்பில் சூரிய...

யொன்று புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் வழிகாட்டலுக்கமைய நிலமீட்டல் மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம், ஜென்ஷோபவர் டெக்னோலோஜி தனியார் நிறுவனம் ஆகியன இணைந்து இந்த பயணிகள் படகுச் சேவையை ஆரம்பித்துள்ளன.

இந்த ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நாட்டின் சூரிய சக்தி மூலம் நடைமுறைப்படுத்தப்படும் முதலாவது பயணிகள் படகுச்சேவை இதுவாகுமென்றும் இது நூற்றுக்கு நூறு வீதம் சூழல் மாசற்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார். எதிர்வரும் காலங்களில் கொழும்பு நகரின் உள்ளக பிரதேசங்களில் உள்ள வாவிகளில் இதுபோன்ற மேலும் படகுச் சேவைகளை ஆரம்பிப்பதற்கு தீர்மானித்துள்ளதாகவும் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளை கவரும் வகையில் இந்தப் படகுச் சேவை முன்னெடுக்கப்படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாடு எதிர்கொண்டுள்ள எரிபொருள் நெருக்கடிக்குத் தீர்வாகவும் இந்த சூரிய சக்தி பயணிகள் படகுச்சேவை அமைவதாக தெரிவித்த அவர், இந்தப் படகுச் சேவையின் போது எவ்வித எரிபொருள் செலவும் கிடையாதென்றும் சூழல் மாசுக்கான எத்தகைய ஒலிகளும் இதிலிருந்து வெளிவராது என்றும் அத்துடன் நீரில் வாழும் உயிரினங்கள் மற்றும் தியதஉயன பகுதிகளில் காணப்படும் பறவைகளுக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படாதென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தப் படகுச் சேவையில் பத்தரமுல்லை தியதஉயனவிலிருந்து ஹீனட்டிகும்புற வரையிலான பயணத்திற்கு 30 விநாடிகள் செல்வதாகவும் அத்துடன் பத்தரமுல்லையிலிருந்து வெள்ளவத்தை வரையிலான பயணத்திற்கு ஒரு நபரிடமிருந்து 200 ரூபா கட்டணம் அறவிடப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ள அவர், அதேவேளை அக்கொன, ஹீனட்டிகும்புறவிலிருந்து வெள்ளவத்தை வரை ஒரு நபருக்கு 300 ரூபா கட்டணம் அறவிடப்படுமென்றும் தெரிவித்துள்ளார்.

தினமும் அலுவலக நேரங்களில் இந்த படகுச் சேவை நடைமுறையிலிருக்கும் என்பதுடன் ஒரு தடவையில் 8 பேர் அதில் பயணிக்க முடியும். பத்தரமுல்லை மற்றும் அதனை அண்டிய அரசு மற்றும் தனியார் அலுவலகங்கள், கேற்வே தனியார் சர்வதேச பாடசாலை, நாவல திறந்த பல்கலைக்கழகம், 176 பஸ் வழி 138 மற்றும் 122 பஸ் வழி வெள்ளவத்தை ரயில் நிலையம் வரை இந்த படகுச் சேவையை பயன்படுத்த முடியும்.

## ஜனாதிபதி ரணில்...

போது, ஜப்பானின் முன்னாள் பிரதமர் சின்ஷோ அபேயின் இறுதிச் சடங்குகளில் கலந்துகொள்ளவுள்ளதுடன் ஜப்பானிய பிரதமர், நிதியமைச்சர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோருடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவுள்ளார்.

அதனையடுத்து எதிர்வரும் 28 ஆம் திகதி பிலிப்பைன்ஸுக்கான விஜயத்தை மேற்கொள்ளும் ஜனாதிபதி அங்கு இடம்பெறவுள்ள ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர்கள் மாநாட்டிற்கு தலைமை வகிக்கவுள்ளார்.

பிலிப்பைன்ஸில் தங்கியுள்ள நாட்களில் அவர், பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி பொங் பொங் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் மஷட்சுகு அசகாவா ஆகியோரையும் சந்தித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமது ஜப்பான் மற்றும் பிலிப்பைன்ஸுக்கான விஜயத்தை நிறைவுசெய்துகொண்டு எதிர்வரும் 30 ஆம் திகதி நாடு திரும்புவாரென ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. ஜனாதிபதியுடன் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஆளணி பிரதானியுமான சாகல ரத்நாயக்க, சர்வதேச விவகாரங்களுக்கான பணிப்பாளர் தினுக் கொலம்பகே, ஊடகப் பணிப்பாளர் பானுக கருணாரத்ன, அபிவிருத்தி தொடர்பான பணிப்பாளர் ரந்துல அபேவீர மற்றும் ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளர் சென்றா பெரேரா ஆகியோரும் ஜனாதிபதியுடன் இந்த விஜயத்தில் இணைந்துகொண்டுள்ளனர். அத்துடன் ஜனாதிபதியின் பிலிப்பைன்ஸுக்கான விஜயத்தில் மத்திய வங்கியின் செயலாளர் நந்தலால் வீரசேகரவும் இணைந்துகொள்ளவுள்ளார். பிலிப்பைன்ஸுக்கான விஜயத்தில் தினுக் கொலம்பகே மற்றும் ரந்துல அபேவீர ஆகியோர் பங்கேற்கமாட்டார்கள் என்றும் அந்த பிரிவு தெரிவித்துள்ளது.

## அரசியல், சமூக...

இவ்வாறு தெரிவித்தார். அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் இடம்பெறும் ஐக்கிய நாடுகள் சபையின் 77வது பொது அமர்வில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி இலங்கை நேரப்படி நேற்று அதிகாலை 2.30 மணிக்கு உரையாற்றியுள்ளார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றியுள்ள அவர், இறுதியாக இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் பொது அமர்விற்குப் பின்னரான காலத்தில் இலங்கையில் குறிப்பிடத்தக்களவு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. நாடு தற்போது உள்ளக மற்றும் சர்வதேச ரீதியில் எதிர்கொள்ள நேர்ந்துள்ள சவால்களை மக்களது நலன்களுக்கும் தேவையான புதிய அரசியல் சமூக மற்றும் பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்குமான வாய்ப்பாகவும் முன்னெடுக்க முடிந்துள்ளது.

எதிர்காலம் தொடர்பில் எமது பொதுவான இலக்கை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கான சிறந்த தருணமாகவும் இலங்கை நம்புகிறது. அனைத்து இலங்கையர்களுக்காகவும் நீதியான, நிலையான மற்றும் ஒருமைப்பாட்டுடனான எதிர்காலத்தை சிறப்பான வகையில் மீளக்கட்டியெழுப்புவதற்கும் இது சிறந்த வாய்ப்பாகும். எமது இந்த ஆரம்பத்திற்காக ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட சர்வதேச சமூகத்தின் உதவிகளை இலங்கை எதிர்பார்க்கின்றது.

நாட்டின் தொடர்ச்சியாக நிலவிய சமூக அமைதியின்மை மற்றும் எதிர்ப்புகளின் பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த மாதம் பாராளுமன்றத்தில் முதலாவது உரையையாற்றினார். அதில், நாடு எதிர்பார்க்கும் சமூக மற்றும் அரசியல் மறுசீரமைப்பை தாம் முன்னெடுப்பதாக அவர் அதன்போது தெரிவித்தார்.

அந்த நடவடிக்கைகளுக்காக தற்போது முன்னெடுக்கப்படும் முறைமைகள் மீளாய்வுகள் ஜனநாயக நிறுவன கட்டமைப்பை பலப்படுத்துவதற்கும் நீண்டகால பொருளாதார ஸ்திரத்தன்மையை உருவாக்குவதற்குமானது என்பதுடன் அதற்காக நடவடிக்கைகள் முன்னெடுப்பது தொடர்பில் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தை சிறந்த நிதி மற்றும் நீண்ட கால பொருளாதார மற்றும் நிறுவன ரீதியான மறுசீரமைப்பின் மூலம் மட்டுமே முன்னெடுக்க முடியுமென்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். எவ்வாறெனினும் அந்த வேலைத்திட்டம் தொடர்பில் நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம்.

உத்தேச அரசியலமைப்பு மற்றும் நிறைவேற்றுத்துறை திருத்தங்களின் மூலம் சுயாதீன மற்றும் மக்கள் மதிப்பீட்டுக்கு உள்ளாகும் ஜனநாயக ஆட்சியை மீண்டும் கட்டியெழுப்பி இந்த நிலைமையை பலப்படுத்த முடியுமென நாம் எதிர்பார்க்கின்றோம்.

கடந்த காலங்களில் இடம்பெற்றுள்ள சம்பவங்கள் தொடர்பில் நாம் உணர்ந்துள்ள அதேவேளை எமதுமக்கள் முகங்கொடுத்துள்ள சமூக பொருளாதார கஷ்டங்கள் தொடர்பில் அரசாங்கம் தமது கவலையைத் தெரிவித்துக்கொள்கிறது. சர்வதேச நாணய நிதியத்துடன் பணியாளர் மட்ட அதிகாரிகளுடன் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம். சமூக அவதானத்திற்கு உட்படும் பகுதிகளை பாதுகாப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளதுடன் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பொருளாதார மறுசீரமைப்பின் மூலம் மக்களது வாழ்க்கையின் அழுத்தங்களை உச்சளவில் குறைப்பதற்கு நாம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம்.

2030 ஆம் ஆண்டில் உலகளவில் உணவு நெருக்கடியை எதிர்நோக்க நேரலாம்.

அதற்கிணங்க உணவு மற்றும் போஷணைகள் பாதுகாப்புத் தொடர்பில் பாரிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இலங்கை அதுதொடர்பான எச்சரிக்கையை விடுத்துள்ளதுடன் அதுதொடர்பில் மிகுந்த அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. நிலையான அபிவிருத்தியின் மூலம் விவசாயத்தை நவீனமயப்படுத்தி உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு இலங்கை ஒத்துழைப்பை வழங்கும்.

அனைவருக்கும் சிறந்த கல்வி மற்றும் சுகாதார சேவைகளை வழங்குவது இலங்கையின் சமூக பாதுகாப்புக் கொள்கையில் முக்கிய இடத்தை வகிக்கிறது. அனைத்து மாணவர்களையும் உள்ளடக்கும் வகையில் கல்வியைப் பெற்றுக்கொடுப்பதும் டிஜிட்டல் கட்டமைப்பை மேம்படுத்துவதும் இலங்கையின் இலக்காகும்.

இந்த சவால்களை வெற்றிகொள்வதற்கு இலங்கை அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது. தற்போதைய நெருக்கடியை வாய்ப்பாக்கிக்கொண்டு மீண்டும் எழுவதற்கும் சுதந்திரம் மற்றும் சௌபாக்கியத்தை உருவாக்குவதற்கும் செயற்படுவதுடன் அது புதிய யுகத்தில் பிரவேசிப்பதற்கான நேர்மையான எதிர்பார்ப்பாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## கலவரங்கள் நடத்துவதனால்...

எனவேதான், அதிஉயர் பாதுகாப்பு வலயங்கள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் (24) சனிக்கிழமை நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில் ,

தேசிய சபை தொடர்பில் பாராளுமன்றத்தில் கலந்துரையாடல்களை முன்னெடுத்து சபாநாயகர் அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வார்.

பொதுஜன பெரமுனவானது மக்கள் மத்தியில் கீழ் மட்டத்திலிருந்து ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்கள் தொடர்பில் சிறந்த அனுபவத்தைக் கொண்டுள்ள கட்சியாகும். இது தொடர்பில் கட்சி மட்டத்திலும் , தேசிய சபையிலும் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து உரிய நடவடிக்கைகளை எடுப்போம். ஏனைய கட்சிகள் இதற்கு ஒத்துழைப்பு வழங்காமை அவரவரின் தனிப்பட்ட தீர்மானமாகும். இது தொடர்பில் சபாநாயகருடன் கலந்துரையாடி அவர்கள் தீர்மானங்களை எடுப்பர் என்றும் அவர் தெரிவித்தார்.

## பிரான்ஸில் இலங்கை...

அதிகாலை பாரிஸின் புறநகர் பகுதியான லாக்னோரில் இடம்பெற்றதாக அந்நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தாக்குதலில் 24 வயதுடைய ஒருவர் உயிரிழந்ததுடன் 30 வயதான மற்றொருவர் ஆபத்தான நிலையில் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இரண்டு குழுக்களுக்கு இடையில் இடம்பெற்ற வாள்வெட்டுத் தாக்குதல் காரணமாக இந்த மரணம் சம்பவித்துள்ளது.

இந்த கொலைச்சம்பவம் பழிவாங்கும் நோக்கத்தில் இடம்பெற்றிருக்கக் கூடும் என பாரிஸ் குற்றவியல் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சுற்றுலாத்துறையை...

இணைந்து இரு தரப்பு உறவுகளையும், கலாசாரத்தினை விரிவுபடுத்துவதன் மூலம் இலங்கை சுற்றுலாத்துறையினை மேம்படுத்த முடியும் எனவும் எதிர்ப்பார்க்கப்படுகின்றது. இந்நிகழ்ச்சிகள் இன்று (26) முதல் 30 ஆம் திகதி வரை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

முதலாவது நிகழ்ச்சி இன்று புதுடில்லியில் உள்ள தாஜ் பேலஸ் ஹோட்டலில் நடைபெறும். அதைத் தொடர்ந்து செப்டம்பர் 28 ஆம் தேதி மும்பையில் உள்ள செயின்ட் ரெஜிஸ் ஹோட்டலில் நடைபெறுவதுடன் செப்டம்பர் 30 ஆம் திகதி ஹைதராபாத்தில் உள்ள தாஜ் கிருஷ்ணா ஹோட்டலில் நடைபெறும். நிகழ்ச்சியுடன் அனைத்து நிகழ்ச்சிகளும் நிறைவடையும்.

இந்த நிகழ்ச்சி மூலம் பெரும்பாலானோரின் கவனத்தை ஈர்ப்பதற்காக இலங்கை பிரபலங்கள் சனத் ஜெயசூரியா மற்றும் யோஹானி டி சில்வா பங்கேற்க உள்ளனர்.

மேலும் இந்த நிகழ்வுகள் மூலம் பார்வையாளர்களுக்கு அற்புதமான அனுபவத்தையும் மற்றும் இலங்கையின் கலாசாரம் தொடர்பான கவனத்தை ஈர்க்கும் வண்ணம் நடனம் மற்றும் பொழுதுபோக்கு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

## கொழும்பு மொஸ்கோ...

தாய்லாந்தின் பேங்கொக்கிற்கான விமானங்கள் அக்டோபர் 30 ஆம் திகதி மீண்டும் தொடங்குவதோடு மேலும் வாரத்திற்கு ஏழு விமானங்கள் அங்கு சேவையில் ஈடுபடும்.

அத்துடன் நவம்பர் 2 ஆம் திகதி முதல் இந்தியாவின் கோவாவிற்கு வாரத்திற்கு மூன்று விமானங்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுமென ரஷ்யாவின் ஏரோஃப்ளோட் அறிவித்துள்ளது.

ஏரோஃப்ளோட், தனது விமானம் ஒன்று கொழும்பில் தடுத்து வைக்கப்பட்டதை அடுத்து கடந்த ஜூன் மாதம் முதல் இலங்கைக்கான விமானங்களை நிறுத்திக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. விமானத்தை குத்தகைக்கு எடுத்தவருடன் தொடர்புடைய ஒரு ஐரிஷ் நிறுவனம் தாக்கல் செய்த மேல்முறையீட்டை ஏற்றுக்கொண்ட கொழும்பு நீதிமன்றத்தின் உத்தரவு காரணமாகவே விமானம் தடுத்து வைக்கப்பட்டது.

இந்த சம்பவம் ராஜதந்திர முறுகலை ஏற்படுத்திய நிலையில், அண்மையில் அமைச்சர் பந்துல குணவர்தன இலங்கையின் சார்பில் மன்னிப்பு கோரினார்.

## கைது செய்யப்பட்ட...

பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் 16 பேரும் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் ஒவ்வொரு மாணவரும் 10 மரக்கன்றுகள் வீதம் 160 மரக்கன்றுகளை தீவைக்கப்பட்ட பிரதேசத்தில் நட வேண்டுமென பண்டாரவளை மஜிஸ்திரேட் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

பொலிசாரின் மேற்பார்வையின் கீழ் இந்த மரக்கன்றுகள் நடுகை இடம்பெற வேண்டும் என பண்டாரவளை பதில் மஜிஸ்திரேட் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

ஹாலி எல மற்றும் நமுனுகுல பிரதேசத்தை சேர்ந்த மேற்படி பதினாறு மாணவர்களும் பதுளை மற்றும் பண்டாரவளை பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் கல்வி பயின்று வருகின்றனர்.

கடந்த 24 ஆம் திகதி மேலதிக வகுப்புகளுக்கு சென்றுள்ள அவர்கள் மேலதிக வகுப்புகள் இடம் பெறாததால் எல்ல வனப்பகுதியை சுற்றிப் பார்க்க சென்றுள்ளனர். அதன் போது அங்கு குப்பைகளுக்கு வைத்த தீயே வனப் பிரதேசங்களில் பற்றிக் கொண்டுள்ளது என பொலிசார் தெரிவித்துள்ளனர். இதனால் சுமார் 15 ஏக்கர் வனப்பகுதி தீக்கிரையாகியுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய உத்தியோகத்தர்கள், வன ஜீவராசி திணைக்கள அதிகாரிகள், பொலிசார் மற்றும் கிராம மக்கள் ஒன்றிணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். அதனையடுத்து மேற்படி மாணவர்கள் 16 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்களுக்கு எதிராக வனப்பகுதியை தீவைத்த குற்றச்சாட்டு சுமத்தப்பட்டதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.



கண்டி பன்விலை மடுல்கலை பிரதேச மாவுசா தோட்ட ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவ விஞ்ஞாபனம் மிகக் கோலாகலமாக நடைபெறுகிறது.14.09.2022 புதனன்று விநாயகர் வழிபாட்டோடு ஆரம்பமான உற்சவத்தில் 15.09.2022 வியாழனன்று கொடியேற்றமும் சங்காபிஷேகமும் கரகம் பாலித்தலும் இடம்பெற்றன. 17ஆம் திகதி திருவேட்டைத் திருவிழா நிகழ்வும் 18 ஆம் திகதியன்று முத்து முத்தேர் பவனியும் நடைபெற்றது. அதன் பின் அம்மனுக்கு மாவிளக்குப் பூசை நடந்தேறியதுடன் மஞ்சள் நீராட்டு விழா நடை பெற்றது.
(படம்: புசல்லாவை தினகரன் நிருபர் மருதமுத்து நவநீதன்)

### மத்திய மாகாண கல்விச் சேவையாளர்களின்

# சனச பணிப்பாளர் சபைக்கு மூன்றாவது முறையாகவும் ஒரு தமிழர் தெரிவு

**ஹட்டன் விசேட நிருபர்**



மத்திய மாகாண கல்விச் சேவையாளர்களின் சனச பணிப்பாளர் சபைக்கு மூன்றாவது முறையாகவும் ஒரு தமிழர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சங்கத்தின் பணிப்பாளர் தெரிவு (24) கண்டி தருன பௌத்த மண்டபத்தில் நடைபெற்றது.

இதன் போது நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிட்ட ஹட்டன் கல்வி வலயத்தைச் சேர்ந்த டிக்கோயா நுண்கலை கல்லூரியின் ஆசிரியர் க.சுந்தரலிங்கம் இவருடன் போட்டியிட்ட இரண்டு தமிழர்களில் 47 மேலதிக வாக்குகளை பெற்று தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மூன்று வருடத்திற்கு ஒரு முறை மத்திய மாகாணத்தில் உள்ள 15 கல்வி வலயங்களிலுமிருந்தும் மகா சபைக்கு 106 பேர் தெரிவு செய்யப்பட்டு அந்த 106 பேரிலிருந்தே பணிப்பாளர் சபை தெரிவு செய்யப்படும். குறித்த தேர்தலில் பணிப்பாளர் சபைக்காக 11 பேர் தெரிவு செய்யப்படும் இதில் 18 – 35 வயதுடைய இருவரும், மாவட்ட அடிப்படையில் மாத்தளை கண்டி,நுவரெலியா ஆகிய மூன்று மாவட்டங்களுக்கு மூவரும்,ஓய்வூதிய அங்கத்துவத்தில் ஒருவரும்,பொதுவாக ஐந்து பேரும் தெரிவு செய்யப்படுகின்றனர்.

இதன் போது சணச சங்கத்தின் தலைவராக ஓய்வு பெற்ற முன்னாள் தலைவர் வை.எம்,எச்.பண்டாரவும், உப தலைவராக அதிபர் கபில பியந்தவும், செயலாளராக அதன் ஸ்தாபகர்களில் ஒருவரும் முன்னாள் செயலாளருமான சமரவீரவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மகா சபை அங்கத்தவர்களை தெர்வு செய்வதற்கான வாக்கெடுப்பு கடந்த மாதம் 25 ம் திகதி நடைபெற்றமையும் குறிப்பிடத்தக்கது.




# சூரிய மின் சக்தி தகடுகளை நிறுவும் முதலீட்டுத் திட்டம் விரைவில் ஆரம்பம்

**(பூஜாபிட்டிய தினகரன் நிருபர்)**

மகாவலி நீர்த்தேக்கம் உள்ளிட்ட பாரிய நீர்த்தேக்கங்களை அடிப்படையாகக் கொண்டு சூரிய மின் சக்தி தகடுகளை (சோலார் பேனல்கள்) நிறுவும் முதலீட்டுத் திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படும் எனவும் அதற்கான பாராளுமன்ற அங்கீகாரம் கிடைத்துள்ளதாகவும் விளையாட்டு, இளைஞர் விவகார மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற (23) வைபவம் ஒன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போது மேற்கண்டவாறு அமைச்சர் தெரிவித்தார்.

பாரிய நீர்த்தேக்கங்களை அடிப்படையாகக் கொண்ட பாரிய சோலார் பேனல்கள் பொருத்துவதன் மூலம் அதிகளவிலான மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும் எனவும் அதற்கு உள்நாட்டு முதலீட்டாளர்களின் பங்களிப்பை பெற்றுக்கொள்வது கடினமாக இருப்பதால் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

தற்போதுள்ள துணை மின் நிலையங்கள் இந்த திட்டத்திற்கு போதுமானதாக இல்லை என்பதால் மின் துணை மின் நிலைய அமைப்புகளின் விரிவாக்கமும் இதன் கீழ் மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

மத ஸ்தலங்களுக்கான மின்சார கட்டணத்தை அதிகரிப்பதற்கு மாற்றீடாக மத ஸ்தலங்களுக் சோலார் பேனல்களை பொருத்தி சூரிய மின்கலங்களை பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்ய மின்சாரதுறை அமைச்சர் திட்டமிட்டுள்ளதாகவும் அமைச்சர் ரொஷான் ரணசிங்க குறிப்பிட்டார்.

# காடழிப்பால் நீர்வளம் குன்றி வருவதாக புகார்

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

இரத்தினபுரி மாவட்டத்தின் கலவான அயகம பிரதேச வனங்கள் பொறுப்பின்றி அழிக்கப்படுவதாக பிரதேசவாசிகள்கவலை தெரிவிக்கின்றனர். இக்காடுகளில் வியாபாரத்திற்காக மரங்களை வெட்டும் வியாபாரிகளாலும் விவசாயத்திற்காகவும் கமத்தொழிலுக்காகவும் காடுகளை வெட்டித்துப்புரவு செய்பவர்களாலும் இந்நிலைமை ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலைமைகளால் ஏற்கனவே காணப்பட்ட இப்பகுதி வனாந்தரங்கள் சுருங்கி அவற்றின் பசுமைத்தன்மை குன்றி வருவதுடன் இவற்றில் வாழ்ந்து வந்த உயிரினங்கள் பல படிப்படியாக அருகி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான இயற்கை சுற்றாடல் அழிவுக்கு இதனை பாதுகாக்க வேண்டிய வனப் பாதுகாப்பு அதிகாரிகளினதும் நேரடி மறைமுகமான உதவிகள் கிடைத்து வருவதால் இந் நிலை பாரதூரமான நிலைமைக்கு தள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது இவ்விடயத்தில் கூடிய கவனமெடுக்கப்படாவிடின் இவ்வ னங்கள் குறுகிய காலத்தில் அழிந்து விடும் ஆபத்து நிலவுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

# வட்டகொடயில் சிசுவொன்று உயிருடன் மீட்பு

**தலவாக்கலை குறூப் நிருபர்**



வட்டகொட யொக்ஸ் போர்ட் பிரதேசத்திலுள்ள கடையொன்றின் அருகாமையில் பிறந்த சிசு ஒன்று உயிருடன் நேற்று முன்தினம் (24) மீட்கப்பட்டதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர். சிசு பிறந்து சிறிது நேரத்திலேயே அந்த இடத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கலாம் என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. அதிகாலை 4 மணியளவில் குழந்தை அழும் சத்தம் மற்றும் நாய் குரைக்கும் சத்தம் கேட்டு அருகிலிருந்த கடையிலிருந்த ஒருவர் வந்து பார்த்தபோது சிசு ஒன்று தரையில் இருப்பது தெரியவந்தது. அதன்பின், அப்பகுதி மக்கள் குழந்தையை அருகிலுள்ள வீட்டிற்கு அழைத்துச் சென்று பாதுகாப்பு அளித்தனர். பின்னர் இது குறித்து 119 அவசர அம்புலன்ஸ் சேவை மற்றும் தலவாக்கலை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

அத்துடன் சிசு மருத்துவ பரிசோதனைக்காக நுவரெலியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், சிசு தற்போது நலமுடன் இருப்பதாக நுவரெலியா பொது வைத்தியசாலை பேச்சாளர் தெரிவித்தார். இது தொடர்பில் சந்தேகத்தின் பேரில் அதே பிரதேசத்தில் வசிக்கும் திருமணமாகாத பெண் ஒருவரை கைது செய்ததாகவும், கைது செய்யப்படும் போது பெண்ணுக்கு இரத்தப்போக்கு ஏற்பட்டதால் குறித்த பெண் லிந்ததுலை பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் நுவரெலியா பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதாகவும் தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




# பெறுகை அறிவித்தல்

## இலங்கை பரீட்சைகள் திணைக்களம்

### 2022/2023ஆம் வருடங்களில் நடாத்தப்படும் பரீட்சைகளின் இரகசிய ஆவணங்களை போக்குவரத்து செய்வதற்காக பஸ் / லொறிகளை நாளாந்த வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல்

### விலைக்கோரல் இல. 4/2/2/2022

இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் 2022/2023ஆம் வருடங்களில் நடாத்தப்படும் பரீட்சைகளின் இரகசிய ஆவணங்களை போக்குவரத்து செய்வதற்காக பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள வகைகளிலான பஸ் ∴ லொறிகளை நாளாந்த வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக மேல் மாகாணத்தில் வதியும் வழங்குநர்களிடமிருந்து 2022-10-17ஆம் திகதி பி.ப. 2.30 மணி வரை தேசிய போட்டி ரீதியாலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

01.

| உருப்படி இல. | வாகன வகை | விபரம் |
|---|---|---|
| 01 | இரு கதவுகளைக் கொண்ட பஸ் வண்டி மற்றும் தேவைப்பாட்டின் பிரகாரம் ஒன்றைக் கதவைக் கொண்ட பஸ் வண்டி | 30-60 எண்ணிக்கைக்கு இடையிலான பஸ் வண்டிகளை அளவை ஒரே முறையில் வழங்குவதற்கான இயலுமை இருத்தல் வேண்டும். பாதுகாப்பாக ஆவணங்களைக் கொண்டு செல்லக்கூடிய, நீரினால், தூசுகளினால் மற்றும் வேறு விதமாக ஏற்படக்கூடிய பாதிப்புகளிலிருந்து பாதுகாத்து, ஒழுங்காக கதவு மற்றும் யன்னல்களை மூடக் கூடிய, கதவுத் தாள்பாள்களைப் போடக்கூடிய, உட்புறம் மின் விளக்குகள் எரியக்கூடிய, மலை பாங்கான மற்றும் சமநிலை தரைகளில் பயணம் செய்வதற்குப் பொருத்தமான வாகனத்தின் சகல துணைப்பாகங்களும் சிறந்த முறையில் செயற்படும் நிலையிலுள்ள பஸ் வண்டியாகவிருத்தல் வேண்டும். |
| 02 | 5.5 தொன் நிகர நிறை அல்லது அதற்கு மேற்பட்ட, முழுமையாக மூடப்பட்ட (Full Body) லொறியாக இருத்தல் வேண்டும். | 15-20 எண்ணிக்கைக்கு இடையிலான பஸ் வண்டிகளை அளவை ஒரே முறையில் வழங்குவதற்கான இயலுமை இருத்தல் வேண்டும். வழங்கும் லொறிகளில் சாரதி மற்றும் சாரதி உதவியாளரை விடுத்து 04 நபர்கள் பயணம் செய்யக்கூடிய வசதிகள் இருத்தல் வேண்டும். (இரண்டு இருக்கை வரிசைகள் இருத்தல் மிகவும் உகந்ததாகவும்) பாதுகாப்பாக ஆவணங்களைக் கொண்டு செல்லக்கூடிய, நீரினால், தூசுகளினால் மற்றும் வேறு விதமாக ஏற்படக்கூடிய பாதிப்புகளிலிருந்து பாதுகாத்து, ஒழுங்காக கதவு மற்றும் யன்னல்களை மூடக் கூடிய, கதவுத் தாள்பாள்களைப் போடக்கூடிய, உட்புறம் மின் விளக்குகள் எரியக்கூடிய, மலை பாங்கான மற்றும் சமநிலை தரைகளில் பயணம் செய்வதற்குப் பொருத்தமான வாகனத்தின் சகல துணைப்பாகங்களும் சிறந்த முறையில் செயற்படும் நிலையிலுள்ள பஸ் வண்டியாகவிருத்தல் வேண்டும். |

02. விலைமனுக்களை 2022-09-26ஆம் திகதி முதல் 2022-10-14ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை பரீட்சை ஆணையாளரின் பெயரில் மீளளிக்கப்படாத 4000.00 ரூபா கட்டணத்தைச் செலுத்தி பத்தரமுல்ல, பெலவத்த, இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் மூன்றாம் மாடியில் அமைந்துள்ள வழங்கல் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் விலைக்கோரல் படிவங்களில் மாத்திரமே சமர்ப்பித்தல் வேண்டும்.

03. விலைக்கோரல் படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்காக பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

i. இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளரின் பெயரில் மீளளிக்கப்படாத 4000.00 ரூபா செலுத்தியதற்காகப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு மற்றும்

ii. போக்குவரத்துத் துறையில் 03 வருடகால அனுபவம் இருத்தல் வேண்டும். அதனை உறுதி செய்வதற்கு போக்குவரத்து தொழில்முயற்சியை நடாத்திக் கொண்டு செல்வதாக பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழ் அல்லது வியாபாரப் பதிவுச் சான்றிதழ் (புகைப்படப் பிரதி சகிதம்)

iii. வழங்குநரிடம் குறைந்தபட்சம் 02 பஸ் / லொறிகளுக்கான உரிமைத்துவம் இருப்பதை உறுதி செய்வதற்கு 02 வாகனங்களின் பதிவுச் சான்றிதழ் (புகைப்படப் பிரதி சகிதம்)

04. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைக்கோரல் ஆவணங்களை 2022-10-17ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன் பத்தரமுல்ல, பெலவத்தையிலுள்ள இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் மூன்றாம் மாடியில் அமைந்துள்ள உதவி ஆணையாளர் (வழங்கல்) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம் அல்லது அன்றைய தினத்திற்கு முன் கிடைக்கும் வகையில் ''தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்ல'' எனும் முகவரிக்கு கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். (கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''2022/2023ஆம் வருடங்களில் இரகசிய ஆவணங்களை போக்குவரத்து செய்வதற்காக பஸ் / லொறிகளை வழங்குவதற்கான விலைமனு'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்) இரு நகல்களிலான விலைமனுக்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென வெவ்வேறான உறைகளில் இட்டு முத்திரைக்குறி பொறித்து அவ்விரு உறைகளையும் மீண்டும் ஒரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து சமர்ப்பித்தல் வேண்டும்.

05. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்ததன் பின் 2022-10-17ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும். இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

06. இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் வழங்கல் கிளையில் 2022-09-26ஆம் திகதி முதல் 2022-10-14ஆம் திகதி வரையான வார நாட்களில் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 4.00 மணி வரையில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

07. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று, விலைமனுக்களைச் சமர்ப்பிப்பவர்களுக்காக 2022-10-10ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் வழங்கல் கிளையில் இடம்பெறும்.

08. இந்த விலைக்கோரல் தொடர்பான மேலதிக விபரங்களை 2022-09-26ஆம் திகதி முதல் 2022-10-14ஆம் திகதி வரையில் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 4.00 மணி வரையில் 0112784393 அல்லது 011-2785219 எனும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாக உதவி ஆணையாளர் (வழங்கல்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

09. எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் மற்றும் ஒப்பந்தத்தைக் கையளிக்கும் முன் எந்தவொரு வேளையிலும் எவ்வித காரணமும் காட்டாமல் அல்லது எந்தவொரு விலைமனுதாரருக்கும் ஏற்படும் நட்டத்திற்கு பொறுப்பு கூறுவதற்கான கடப்பாடு அல்லது விலைமனுதாரருக்கு காரணம் காட்டும் பொறுப்பின்றி திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானம் தொடர்பில் காரணம் காட்டுவதைத் தவிர்க்கும் அதிகாரத்தை திணைக்கள பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்,**
**பெலவத்த,**
**பத்தரமுல்ல.**

**2022-09-26.**

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2022 செப்டெம்பர் 26
திங்கட்கிழமை

# மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கவே சங்காவின் சிலையை வடிவமைத்து கொடுத்தேன்

## சிலையை வடிவமைத்த ஜோசப் ஜொரோமின் மார்க்

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாண பல்கலைக்கழக நிர்வாகம் என்னிடம் நேரடியாக சங்காவின் சிலையை செய்து தருமாறு கேட்கவில்லை. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் 2004ஆம் ஆண்டு மினி ஒலிம்பிக் சம்பியன் கிரிக்கெட் அணி மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கவே சங்காவின் சிலையை வடிவமைத்து கொடுத்தேன் என சிலையை வடிவமைத்த ஜோசப் ஜொரோமின் மார்க் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வைக்கப்படுவதற்காக துடுப்பாட்ட வீரர் குமார் சங்கக்காரவின் சிலை வடிவமைக்கப்பட்டுள்ளதாக சமூக ஊடகங்கள் உட்பட ஊடகங்களில் கடந்த வாரம் செய்தி வெளியாகியிருந்தன.

அது தொடர்பில் சிலை வடிவமைப்பாளரை தொடர்பு கொண்டு கேட்ட போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

நான் இதுவரையில் பிரதிமை சிற்பங்கள், கோயில் சிற்பங்கள் என பலவகை சிற்பங்களை செய்துள்ளேன். சிற்பங்களை சீமெந்து, மண், கல், மரம் ஆகியவற்றிலும் செய்து வருகிறேன். ஆனாலும் இலகுவில் எடுத்து செல்லக்கூடிய வகையில் கண்ணாடி இழையில் (பைவர்) செய்து வருகிறேன்.

சங்கக்காராவின் சிலையினை செய்வதற்கு முன்னர் அண்மையில் மாலைதீவில் உயிரிழந்த மன்னாரை சேர்ந்த பிரபல உதைப்பந்தாட்ட வீரரான டக்ஸன் பியூஸ்லஸின் சிலையையும் வடிமைத்துள்ளேன்.

இந்நிலையிலேயே, யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் 2004ஆம் ஆண்டு மினி ஒலிம்பிக் சம்பியன் கிரிக்கெட் அணி மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க சங்கக்காரவின் சிலையை வடிவமைத்தேன். அது மூன்றரை அடி உயரம் கொண்ட சிலை ஆகும். அந்த சிலையின் ஒளிப்படங்களை அழகியல் நோக்கத்திற்காகவே நான் எனது சொந்த முகநூலில் பகிர்ந்தேன்.

அதனை சிலர் தமது சமூக ஊடகங்கள் மற்றும் ஊடகங்களில் தமது சுய கருத்துக்களையும், வேறு விதமான கருத்துக்களை உருவாக்க கூடியவாறான கருத்துக்களையும் திணித்து எழுதி சங்காவின் படங்களை பகிர்ந்தனர். அதுவே சர்ச்சைகளை ஏற்படுத்தியது.







சங்காவின் சிலையினை செய்து தருமாறு பல்கலைக்கழக நிர்வாகம் என்னிடம் நேரடியாக கேட்கவில்லை.

பல்கலைக்கழகத்தின் விளையாட்டு அலகு மாணவர்கள், தமது விளையாட்டு அலகினை அழகியல் ரீதியாகவும் , தொழிநுட்ப ரீதியாகவும் விருத்தி செய்யும் பணிகளை முன்னெடுத்துள்ளனர்.

அதன் ஒரு கட்டமாக யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் விளையாட்டுத்துறை அலகில் விளையாட்டு வீரர்களின் சிலைகளை காட்சிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதற்கு ஆதரவு வழங்கும் முகமாக யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் 2004ஆம் ஆண்டு மினி ஒலிம்பிக் சம்பியன் கிரிக்கெட் அணி பழைய மாணவர்கள் சங்காவின் சிலையை வடிவமைத்து அவர்களிடம் அன்பளிப்பாக கையளிக்கவுள்ளனர்.

கால் பந்தாட்டம், துடுப்பாட்டம் என அனைத்து விளையாட்டுகள் தொடர்பில், அந்த அந்த விளையாட்டுக்களில் சாதித்தவர்களின் உருவ சிலைகளை விளையாட்டு துறை அலகில் காட்சிப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதற்காகவே சங்காவின் சிலை உருவாக்கப்பட்டது.

சங்காவின் சிலை கண்ணாடி இழையினால் வடிவமைக்கப்பட்டது,. இந்த சிலையை அன்பளிப்பு செய்ய முன்னரே பலரின் தவறான கருத்துக்களால் சர்ச்சைகள் ஏற்பட்டுள்ளன என தெரிவித்தார்.

இந்த சிலைகளை வடிவமைத்து வருபவர் மன்னார் வாங்காலை பகுதியை சேர்ந்த, மன்னார் சித்தி விநாயகர் பாடசாலை ஆசிரியரான ஜோசப் ஜொரோமின் மார்க், யாழ்ப் பல்கலை கழக இராமநாதன் நுண்கலைப்பீடத்தில் சித்திரமும் வடிவமைப்பும் துறை பட்டதாரியாவர்.

இவரது பரம்பரையினரே சிற்பகலைகளில் சிறந்து விளங்கியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சிலைக்கு பல்கலைகழகம் அனுமதி வழங்கவில்லை அதேவேளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினுள் துடுப்பாட்ட வீரர் குமார் சங்கக்காரவுக்கு சிலை நிறுவுவதற்காக யாரும் அனுமதி கோரவில்லை என்றும், அவ்வாறான எந்த அனுமதியும் வழங்கப்படவில்லை என்றும் பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து பல்கலைக்கழக விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் உட்பட நிர்வாகத்தினருடன் தொடர்பு கொண்டு கேட்ட போது,

பல்கலைக்கழகத்தினுள் துடுப்பாட்ட வீரர் குமார் சங்கக்காரவுக்கு சிலை அமைப்பதற்கான எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. சிலை அமைப்பதற்காக எவரும் அனுமதி கோரவில்லை. வளாகத்தினுள் சிலைகளை நிறுவுவதென்பது நீண்ட பொறிமுறைகளைக் கொண்டது. அவ்வாறான அனுமதி எதுவும் வழங்கவில்லை என தெரிவித்தார்.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இருந்து ஊர்தி பவனி ஆரம்பம்



**யாழ்.விசேட நிருபர்**

திலீபனின் 35 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இருந்து நேற்றைய தினம் ஞாயிற்றுக் கிழமை ஊர்தி பவனி ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பிரதான வளாகத்திலிருந்து குறித்த ஊர்தி பவனி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் ஊர்தி பயணிக்கவுள்ளதுடன், இன்றைய தினம் திங்கட்கிழமை காலை நல்லூரில் அமைந்துள்ள திலீபனின் நினைவாலயத்தை சென்றடையவுள்ளது.

# பொலிஸ் உத்தியோகத்தரும் பொதுமகனும் இரண்டு கிலோ கஞ்சாவுடன் கைது

**(நாகர்கோவில் விஷேட நிருபர்)**

பொலிஸ் விசேட பணியகத்தினால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது யாழில் இருந்து கஞ்சா கடத்திச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும், பொது மகன் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட பணியகத்தினால் நேற்று முன்தினம் சனிக்கிழமை (24) இரவு 7.00 மணி முதல் நள்ளிரவு 12.00 மணிவரையான காலப் பகுதியில் மதவாச்சி பூனாவ பொலிஸ் பிரிவில் இவ் விசேட சோதனை நடவடிக்கை இடம்பெற்றது.

விசேட பொலிஸ் பணியகத்தின் றுவான் மற்றும் சஞ்சீவ ஆகியோரின் வழிநடத்தலில் இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன் போது யாழ்ப்பாணத்தில் இருந்து கண்டி நோக்கி சென்று கொண்டிருந்த இ. போ. சபையின் பாஸ்வண்டியில் இரண்டு கிலோகிராம் கஞ்சாவுடன் பயணித்த கொடிகாமம் பகுதியச் சேர்ந்த இளைஞர் ஒருவர் இரவு 11:05 மணியளவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதே போன்று பருத்தித்துறையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்துக் கொண்டிருந்த இ. போ. சபையின் பஸ்வண்டியில் பயணித்த பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் கொட்டகொட பகுதியைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் நள்ளிரவு 11.50 மணியளவில் இரண்டு கிலோ கிராம் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர்கள் மதவாச்சி நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# புதுக்குடியிருப்பில் பட்டப்பகலில் தாலிக்கொடி உள்ளிட்ட 20 இலட்சம் நகை கொள்ளை!

**(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)**

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் கொள்ளைச் சம்பவங்கள் பல பதிவாகி வருகின்றன.

புதுக்குடியிருப்பு நகர் பகுதியினை அண்மித்த பகுதிகளிலே இவ்வாறான துணிகர கொள்ளைச் சம்பவங்கள் பதிவாகி வருகின்றன.

கடந்த 20.09.2022 அன்று புதுக்குடியிருப்பு குழந்தையேசு ஆலய வளாகத்தில் அமைந்த கடை ஆலய பொருட்கள் விற்பனை செய்யும் கடை உடைக்கப்பட்டு 75 ஆயிரம் ரூபா பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது. புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு வீதியில் புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனைக்கு அருகில் இந்த ஆலயம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இது தொடர்பில் கடை உரிமையாளரினால் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் 24.09.22 அன்று புதுக்குடியிருப்பு 9 ஆம் வட்டாரப்பகுதியில் பட்டப்பகலில் வீடு உடைத்து தாலிக்கொடி உள்ளிட்ட 20 இலட்சம் பெறுமதியான நகைகள் கொள்ளையர்களால் கொள்ளையிடப்பட்டுள்ளது.

காலை வேளை வீட்டை பூட்டிவிட்டு அருகில் உள்ள புதுக்குடியிருப்பு சந்தைக்கு பொருட்கள் வாங்குவதற்காக சென்று வந்து வீட்டினை பார்த்தபோது வீடு உடைக்கப்பட்டு வீட்டினுள் பாதுகாப்பாக வைக்கப்பட்ட ஆறரைப்பவுண் தாலிக்கொடி மோதிரங்கள் 5 கைச்செயின் ஒன்று உள்ளிட்ட 20 இலட்சம் பெறுமதியான நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளதாக புதுக்குடியிருப்பு பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.



சில மாதங்களுக்கு முன்னார் தந்தையும் இரண்டு பிள்ளைகளும் கொடிகாமம் பகுதியில் நடந்த ரயில் விபத்தில் சிக்கி ஒரு பிள்ளை இறந்த நிலையில் மற்றும் ஒரு பிள்ளை இன்று வரை கோமா நிலையில் இருப்பதினால் அவருக்கு தேவையான விசேட மருத்துவ கட்டிலை வாங்கித்தருமாறு யாழ் மாநகர முதல்வர் வி.மணிவண்ணனிடம் கோரிக்கை வைக்கப்பட்டது. இதன் அடிப்படையில் அபிராமி முருகானந்தம் அவர்களின் நினைவாக பிரான்சில் வாசிக்கும் அவருடைய தாயாரினால் வழங்கப்பட்ட நிதி உதவியில் குறித்த கட்டில் வழங்கப்பட்டது.

## உணவு வழங்கக் கோரி போராட்டம்

**(பரந்தன் குறூப் நிருபர்)**

கிளிநொச்சி புண்ணை நீராவி பகுதியில் தமது குழந்தைகளுக்கான போசாக்கு உணவை வழங்குமாறு கோரி பெற்றோர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். திருச்சபையால் வழங்கப்பட்டு வந்த உணவு, நிர்வாக சிக்கல்காரணமாக கடந்த இரண்டு வாரங்களாக இடைநிறுத்தப்பட்டது.

## தொல்காப்பியர் சிலை திறந்து வைப்பு



**ஓமந்தை விஷேட நிருபர்**

வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் தொல்காப்பியர் சிலை ஒன்று (24) திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலையின் அதிபர் பா.கமலேஸ்வரி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முதன்மை அதிதியாக வலயக்கல்வி பணிப்பாளர் சு.அன்னமலர் கலந்து கொண்டார். நிகழ்வில் தொல்காப்பியரின் சிலையினை ஆசிரியர் சு.சிவச்சந்திரன் திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து அவரது சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு மலர்தூவி கௌரவம் செலுத்தப்பட்டது.

நிகழ்வில் கட்டுரை போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களிற்கு பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன், உயர்தர பரீட்சையில் உயர் பெறுபேறுகளை பெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்பட்டிருந்தனர்.

நிகழ்விற்கு “நீம்” நிறுவனம் இணை அனுசரணையினை வழங்கியிருந்தது.

# போசனை நிறைவூட்டலுக்காக மாணவர்களுக்கு பால் வழங்கும் திட்டம்

**சாவகச்சேரி விஷேட நிருபர்**

யா/போக்கட்டி அ.த.க பாடசாலையில் போசனை நிறைவூட்டலுக்காக மாணவர்களுக்கு பால் வழங்கும் திட்டம் (21/09) புதன்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் சோ.திருக்குமரன், போசனை நிறைவூட்டல் திட்ட இணைப்பாளர் கமலேஸ்வரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் நோர்வே கிளை பழைய மாணவர் சங்கப் பொருளாளர் திருமதி சிவயோகம் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

லண்டனைச் சேர்ந்த உயர் கல்வி விரிவுரையாளர் அண்ணாமலை மயூரனின் அனுசரணையில் பாடசாலையில் போசனை நிறைவூட்டல் செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





## வவுனியாவில் தீ

**ஓமந்தை விஷேட நிருபர்**

வவுனியா இரட்டைபெரியகுளம் நுவர பிரதான வீதிக்கு அருகில் நேற்று முன்தினம் (24) இரவு தீ பரவியுள்ளது.

தீயினால் தொலைபேசி வயரிங் அமைப்பு மற்றும் வீதியோரங்களில் சிவில் பாதுகாப்பு அமைப்பினரால் நடப்பட்டிருந்த பல மரங்களும் எரிந்து நாசமாகியுள்ளன. குறித்த வீதியில் பயணித்த நபர் ஒருவர் தீ வைத்திருக்கலாம் என பொலிஸார் மற்றும் பிரதேசவாசிகள் சந்தேகிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை இரட்டைபெரியகுளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தனங்கிளப்பு கமக்கார அமைப்பிற்கு புதிய நிர்வாகிகள் தெரிவு

**சாவகச்சேரி விஷேட நிருபர்**

கைதடி கமநலசேவை நிலைய எல்லைக்குட்பட்ட தனங்கிளப்பு கமக்கார அமைப்பின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் 23/09 வெள்ளிக்கிழமை தனங்கிளப்பு பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெற்றன.

கைதடி கமநல சேவை நிலைய உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்ற புதிய நிர்வாகத் தெரிவில் தலைவராக செ.தாம்பிரவர்ணன், செயலாளராக சி.புவனதாஸ், பொருளாளராக சி.பரமேஸ்வரன், உப செயலாளராக செ.கந்தசாமி,உப தலைவராக சி.பிரபாகரன், நிர்வாக உறுப்பினர்களாக பெ.சகாதேவன் மற்றும் அ.வசந்திமாலா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். நிர்வாக தெரிவினை அடுத்து இடம்பெற்ற காலபோக பொதுக்கூட்டத்தில் விதைப்பு ஆரம்பிக்கும் காலம்,கால் நடை கட்டுப்பாட்டு திகதி, கால் நடை பிடிகாரர் தெரிவு, கால்நடை பராமரிப்பாளர் தெரிவு, கால் நடை பராமரிப்பு கூலி மற்றும் குற்றப்பணம் ஆகிய விடயங்கள் தொடர்பில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

# கிழக்கின் குரல்



## ஆயுர்வேத வைத்திய துறையில் புதுமைகளை கண்டுபிடித்து மக்களின் ஈர்ப்பை அதிகரிக்க வேண்டும்





**அட்டாளைச்சேனை குறூப் நிருபர்**

"ஒரு காலத்தில் வெளிநாட்டவர்கள் கூட ஆயுர்வேத வைத்திய, சிகிச்சை முறைகளில் மிகவும் கவரப்பட்டவர்களாக இருந்ததாகவும்,ஆயுர்வேத வைத்தியர்கள் தமது தொழிலை உற்சாகத்துடன் மேற்கொள்ள முன்வராமையாலேயே, இத்துறை வீழ்ச்சியடைந்துள்ளதென்றும் அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் அஷ்ஷேய்க் ரீ.எம் மொஹம்மட் அன்சார் தெரிவித்தார்.

ஒருங்கிணைந்த பிரதேச ஆயுவேத பாதுகாப்புச் சபையின் விஷேட பொதுக் கூட்டம் அக்கரைப்பற்று பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. பிரதேச ஆயுர்வேத பாதுகாப்புச் சபையின் தலைவர் எம்.எ.எம்.நகீம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு அக்கரைபற்று, அட்டாளைச்சேனை, ஆலயடிவேம்பு, திருக்கோயில், சம்மாந்துறை, பொத்துவில், கல்முனை போன்ற பிரதேச செயலக பிரிவுகளில் பணிபுரியும் ஆயுர்வேதவைத்தியர்கள், பாரம்பரிய சுதேச வைத்தியர்கள் கலந்து கொண்டனர்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய பிரதேச செயலாளர் மொஹம்மட் அன்சார்

ஆயுர்வேத வைத்தியத்தில் நம்பிக்கை கொண்ட வெளி நாட்டடவர்கள் இன்றும் எம்மத்தியில் இருக்கவே செய்கின்றனர். கைகண்ட மருந்துகள் எம்மத்தியில் இருக்கும்போதுகூட, ஒரு சிறு நோய்க்கும் ஆங்கில வைத்தியர்களையே நாடுகிறோம். இந்நிலை மாறவேண்டும். இதற்கு ஆயுர்வேத வைத்தியர்கள் தம்மை தயார் படுத்திக்கொள்ள வேண்டும். நாம் எவ்வளவு தூரம் இத்துறையில் முயற்சி எடுக்கின்றோமோ அவ்வளவுக்கு வெற்றி காணலாம்.

மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் பணியாற்றும் சுதேச ஆயுர்வேத பாரம்பரிய வைத்தியர்கள் ஒன்று சேர்ந்திருப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரியது. பாரம்பரிய வைதியத் துறைகளிலும் புதுமைகளையும் கண்டுபிடிப்புகளையும் மேற்கொள்ள வேண்டும். இதற்கு நாங்கள் எவ்வாறு உதவ வேண்டுமோ அவ்வாறெல்லாம் உதவ உள்ளோம் என்றார்.

ஆயுவேத பாதுகாப்புச் சபையின் தலைவர் எம்.எ.எம்.நகீம் உரையாற்றுகையில் "எமது மக்கள் ஆங்கில மருந்துகளுக்கு அடிமையாகிவிட்டனர்.

ஒரு சிறு சுகவீனத்துக்குகூட ஆங்கில வைத்தியர்களை நாடுவது ஒரு நாகரீகமாகிவிட்டது. கை கண்ட மருந்துகள் கையில் இருக்க நாம் வேறு எதையோ நாடுகின்றோம் இந்நிலையை மாற்ற வைத்தியர்களாகிய நாம் ஒன்று படவேண்டும். பாமர மக்களுக்கு நாம் இதனை நன்கு உணர்த்தவேண்டும். இதற்கு நாம் தயாராக வேண்டும்.

இதற்கு நாம் எல்லோரும் முன்வர வேண்டும். ஒருமித்து செயலாற்ற முன்வவரவேண்டும்" என்றார்.

இதனைத் தொடர்ந்து ஆயுவேத, பாரம்பரிய சுதேச வைத்தியர்கள் போன்றோர்களின் கலந்துரையாடல் நடைபெற்றது,

திட்டமிடல் பிரதிப்பணிப்பாளர் எம்.எ.தமீம், சமூக வைத்திய அதிகாரி ஷாமிளா, சபையின் செயலாளர் எம். எஸ்.வீ.எம். மர்சூக் ஆகியோரும் இங்கு உரையாற்றினர்.

## பக்தர்களால் தெய்வமாக வழிபடப்படும் திராய்மடு சித்தர் சடையப்பர் சுவாமிகள்

### 30 ஆவது மகாசமாதி தினம் நேற்று முன்தினம்



நல்லதம்பி என்னும் இயற்பெயர் கொண்ட சித்தர் சடையப்பர் சுவாமிகள் 1909 ஆம் ஆண்டு ஆடி அமாவாசை தினத்தன்று மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மட்டிக்கழி கிராமத்தில் அவதரித்தார். வாலிபப் பருவமடைந்ததும் அன்னார் திருமண பந்தத்தில் இணைந்து கொண்டபோதும், துரதிர்ஷ்டவசமாக சற்றும் எதிர்பாராத வகையில் உண்டான அதிர்ச்சிச் சம்பவம் ஒன்று அவரது துறவு வாழ்க்கைக்கு காரணமாக அமைந்தது.

மனமாற்றமடைந்த அவர் இல்லறத்தை கைவிட்டு துறவறத்தை மேற்கொண்டு, மட்டக்களப்பு முகத்துவாரத்தை அண்டிய திராய்மடு எனும் காட்டுப் பகுதிக்கு 1950.04.13 அன்று வருகை தந்தார்.

அக்காட்டுப் பகுதியை வெட்டித் துப்புரவு செய்து தனக்கென்றொரு குடிசையை அமைத்து அதன் அருகில் நின்ற வேப்பமரத்தடியில் முருகன் படம் ஒன்றையும் வைத்து வழிபட்டு வாழ்ந்துவரும் போது முருகப்பெருமானின் பேரருளால் அவர் தலையில் சடாமுடி தோன்றியது. அது வளர்ந்து வளர்ந்து 13 அடியையும் தாண்டியது. அதனால் அன்னாருக்குச் 'சடையப்பர்' என்ற பெயர் உண்டாயிற்று. பகலில் சடையைத் தலையில் சுற்றிக் கட்டியிருப்பதும், இரவில் துயிலும் வேளையில் அதை அவிழ்த்து விடுவதும் அவரது வழக்கமாகும்.

நாயன்மார்களில் ஒருவரான பூசலார் நாயனாரைப் போல் தேகமெங்கும் திருநீற்றை அள்ளிப் பூசியிருப்பதனால் அவரை 'ஈழத்துப் பூசலார்' என்று கூடப் பேசிப் பெருமைப்படுபவர்களும் உள்ளனர். உருத்திராக்கக் காய் ஒன்றையும் கழுத்தில் கட்டித் தொங்கவிட்டிருப்பார். வேட்டியை முறைப்படியன்றி இடுப்பைச் சுற்றிச் சொருகிக் கட்டியிருப்பார், வெள்ளைத் துணியால் மார்பைப் போர்த்தியிருப்பார், கண்களைச் சுருக்கி கலகலவென்று சிரித்து அனைவரையும் கவர்ந்திடுவார்.

குடிசையாக இருந்த அன்னாரின் இருப்பிடம் அடியார்களின் ஆதரவால் ஆச்சிரமமாக விஸ்தரிக்கப்பட்டது. அன்னாரின் காலத்திலேயே முருகன் ஆலயமும் கல்லால் கட்டப்பட்டு கும்பாபிஷேகமும் நடந்தேறியது. ஆலயத்திற்கு வருகை தரும் அடியார்கள் முருகப் பெருமானை வழிபட்ட பின்னர் சுவாமிகளின் பாதங்களில் விழுந்து வணங்கி ஆசி பெற்றுச் செல்வது வழக்கம்.

முருகப் பெருமானால் சுவாமிகளுக்கு பல சோதனைகளும் அவற்றால் வேதனைகளும் ஏற்பட்டன. அவை அன்னாரைப் புடம்போட்டன. மனம் தளராது அவற்றை எதிர்கொண்டு அவற்றை சாதனைகளாக்கிக் கொண்டார். சுவாமிகள் செய்து காண்பித்த அற்புதங்கள் அடியார்களை ஆச்சரியப்படும்படி செய்துவிட்டன. வாய்பேசாத சிறுவனை பேசவைத்தமை அவற்றில் ஒன்றாகும். ஒரு சிறந்த தீர்க்கதரிசியுமாய் இருந்த சுவாமிகள், இப்பிரதேசம் ஒரு பிரசித்தி பெற்ற நகரமாகும் என்று அன்று திருவாய்மொழிந்திருந்தார். இன்று அது பலித்து ஆலய வளாகத்தைச் சுற்றி வீடுகளும் அரச கட்டடங்களும் பாதைகளும் அமைக்கப்பட்டு சனநடமாட்டமுள்ள ஒரு நகரமாக இப்பிரதேசம் திகழ்வதை அனைவரும் கண்கூடாகக் காணக்கூடியதாக உள்ளது.

சுவாமிகளுடைய சமாதி தினம் அண்மித்ததாற் போலும் கொடுநோய் அவரை ஆக்கிரமித்தது. முதுமையும் சேர்ந்து மேலும் துன்பத்திற்குள்ளாக்கியது. இதனால் 1992.09.24 அன்று 83 ஆவது அகவையில் அன்னாரின் தெய்வீக ஆன்மா முருகப்பெருமானின் திருவடி நிழலைச் சென்றடைந்தது. ஏற்கனவே சுவாமிகள் வேண்டிக் கொண்டதற்கிணங்க அன்னாரின் பொன்னுடல் அவர் துயிலும் இடத்திலேயே மறுநாள் (1992.09.25) முறைப்படி கிரியைகளுடன் சமாதியில் வைக்கப்பட்டது. முருகப்பெருமானுக்குப் பூசைகள் முடிவுற்றதும் சுவாமிகளின் சமாதியிலும் பூசைகள் நடைபெறுகின்றன. அவரும் தெய்வமானார். 83 ஆண்டுகள் இப்பூவுலகில் வாழ்ந்து அவற்றில் 42 ஆண்டுகள் ஆன்மிகப் பணியாற்றிய திராய்மடுச் சித்தர் சடையப்பர் சுவாமிகளின் புகழ் என்றென்றும் நிலைத்திருக்கும்.

**கா.சிவலிங்கம் ...**
(ஆலோசகர்)
திராய்மடு ஸ்ரீ முருகன் ஆலய பரிபாலன சபை




இலங்கைக்கான பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் உமர் பாரூக் புர்கி, கிழக்கு மாகாணம் சாய்ந்தமருது அல்சுபைதா நலன்புரி அமைப்பிலுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கென அத்தியாவசிய உணவுப் பொருட்களை அன்பளிப்புச் செய்துள்ளார். அமைப்பின் தலைவரும், பொதுச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினருமான ஏ.எல். எம்.சலீமிடம்,பொருட்கள் கையளிக்கப்படுவதை காணலாம். பாகிஸ்தான் அரசாங்கம் சார்பாக இந்நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டன. (படம்: சவளக்கடை குறூப் நிருபர்)

## ஹெரோயின் வைத்திருந்த இருவர் கைது

**பாலமுனை தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின்படி போதைப்பொருள் வைத்திருந்த இருவர் கைது செய்யப்பட்டனர்.

உப பொலிஸ் பரிசோதகர் நூர்தீன் தலைமையிலான பொலிஸ் குழுவினரே ஒலுவிலில், இவர்களைக் கைது செய்தனர்.ஒருவரிடமிருந்து 90 மில்லி கிராமும், மற்றைய நபரிடமிருந்து 45 மில்லி கிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் (21) புதன்கிழமை ஆஜர்படுத்தப்பட்டனர்.இவர்களை, எதிர்வரும் (04) வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சர்வசமய சம்மேளனத் தலைவர் டாக்டர் ஜமீல் காலமானார்!

**காரைதீவு குறூப் நிருபர்**



அம்பாறை மாவட்ட சர்வசமய சம்மேளனத் தலைவரும், சமாதானத்துக்கான சமயங்களின் இலங்கை பேரவையின் அம்பாறை மாவட்ட தலைவருமான சாய்ந்தமருதைச்சேர்ந்த டாக்டர் எம்.ஐ.எம்.ஜெமீல் தனது 80 ஆவது வயதில் நேற்றுமுன்தினம் (24) சனிக்கிழமை காலமானார்.

சாய்ந்தமருது பெரிய ஜும்மா பள்ளிவாசல் தலைவராகவும் ஏனைய பல அமைப்புக்களின் முன்னணி தலைவராகவும் இவர்,செயற்பட்டிருந்தார். இன,மத பேதங்களை கடந்த இவரது சேவைகள் பலரது பாராட்டுக்களையும் பெற்றிருந்தது. ஐந்து பிள்ளைகளின் தந்தையான இவர், சமூகத்தில் கண்ணியமாக பார்க்கப்பட்டவர்.

இறுதியாக "தடங்களில் நினைவுகள் "என்ற சுயசரிதை நூலையும் மர்ஹூம் டாக்டர் ஜெமீல் வெளியிட்டருந்தார்.

அன்னாரது ஜனாஸா நல்லடக்கம் நேற்று முன்தினமிரவு (24) சாய்ந்தமருது முஸ்லிம் மையவாடியில் நடைபெற்றது.

## வெவ்வேறு இடங்களில் ஆண்களின் சடலங்கள் மீட்பு

**ரொட்டவெவ குறூப் நிருபர்**

திருகோணமலை மாவட்டத்தின் வெவ்வேறு இடங்களில், ஆண்கள் இருவரின் சடலங்களை மீட்டெடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாட்டாளிபுரம் பகுதியில் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டதுடன், கிண்ணியா சிறுபிட்டி குளத்தில் மிதந்த நிலையில் கிடந்த மற்றுமொரு ஆணின் சடலமும் கடந்த சனிக்கிழமை (24) மாலை 5.00 மணியளவில் மீட்கப்பட்டுள்ளது. பாட்டாளிபுரத்தில் மீட்கப்பட்ட சடலம் சட்டவைத்திய பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் சம்பூர் பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன் கிண்ணியா சிறுபிட்டி குளத்தில் மீட்கப்பட்ட சடலம் அடையாளம் காணமுடியாத நிலையில் உருக்குலைந்துள்ளதாகவும், இச்சடலத்தை வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் விசாரணைகளை முன்னெடுத்து வரும் உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

## இன நல்லிணக்கத்தை மேம்படுத்தும் செயலமர்வுகள் அக்கரைப்பற்றில்

**வாச்சிக்குடா விஷேட நிருபர்**

மனித உரிமைகள் மற்றும் சமாதானத்தை கட்டியெழுப்பும் செயற்றிட்டத்தின் ஊடாக இன நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கான நிகழ்வை அக்கரைப்பற்று பாதிப்புற்ற பெண்கள் அரங்கம் முன்னெடுத்து வருகின்றது.

இது தொடர்பான செயலமர்வு இரண்டு தினங்கள் அக்கரைப்பற்று சுவாட் மண்டபத்தில் நடைபெற்றன. அரச உத்தியோகத்தர்கள், இளைஞர்கள் மற்றும் சமூக தலைவர்கள் இதில் பங்கேற்றனர்.மனித உரிமைகள் மற்றும் சட்டவாக்கம் தொடர்பில் இங்கு விளக்கமளிக்கப்பட்டது.

பாதிப்புற்ற பெண்கள் அரங்கத்தின் மத்திய செயற் குழு தலைவியும் தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளருமான செல்வி அனுசியா சேனாதிராஜா, இணைப்பாளர் வாணி சைமன் மற்றும் திட்ட இணைப்பாளர் நடராஜா சுமந்தி, திட்ட பொறுப்பாளர் செல்வபதி கங்கேஸ்ரி ஆகியோரின் ஒருங்கிணைந்த தலைமையின் கீழ் இச்செயலமர்வுகள் நடாத்தப்பட்டன. ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று, பொத்துவில், இறக்காமம் ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளைச்சேர்ந்த தமிழ்,சிங்கள முஸ்லிம் அரச உத்தியோகத்தர்கள், இளைஞர்கள், யுவதிகள் மற்றும் சமூக தலைவர்கள் இதில்,கலந்து கொண்டனர்.



இச்செயலமர்வின் வளவாளராக சட்டத்தரணி எம்.சுதர்சினி கலந்து கொண்டு செயலமர்வை நடாத்தி வைத்தார்.

மனித உரிமைகள் மற்றும் இலங்கையின் சட்டவாக்கம் தொடர்பாகவும் மனித உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பங்கள், இவற்றிற்குரிய தீர்வுகள், ஆரம்பகாலத்தில் இலங்கையில் இருந்த அரசியலமைப்புக்கள், தற்போது நடைமுறையில் உள்ளவை தொடர்பிலும் தெளிவூட்டப்பட்டது.

## உள்ளூராட்சி மன்றங்களில் பட்ஜட்டை தயாரிக்கும் பயிற்சி செயலமர்வுகள்

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**

உள்ளூராட்சி மன்றங்களில் மக்கள் பங்கேற்புடனான வரவு செலவுத் திட்டத்தை (பாதீடு) தயாரிக்கும் பயிற்சி நெறிகள் இடம்பெற்று வருவதாக இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் இணைப்பாளர் பொன். சற்சிவானந்தம் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களின் பௌதீக, மனித வளங்களை வினைத்திறனாகவும் செயற்திறனாகவும் பயன்படுத்தி பிரதேச மக்களின் சமூக, பொருளாதார வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கோடு இந்தப்பயிற்சிச் செயலமர்வு மூதூர் பிரதேச சபையின் கேட்போர் கூடத்தில் நேற்று ஞாயிறன்று (25) இடம்பெற்றது.

நிகழ்வில் மூதூர் பிரதேச சபையின் தவிசாளர் எம்.எம்.ஏ. அறூஸ், உப தவிசாளர் எஸ். துரைநாயகம், சபையின் செயலாளர் வி. சத்தியசோதி, பிரதேச சபை முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், அதிகாரிகள் பொதுமக்கள், வரியிறுப்பாளர்கள் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

இவ்வாறான செயல் திட்டத்திற்கு மூதூர் பிரதேச சபையினர் முழுமையான ஒத்துழைப்பை வழங்கி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இத்திட்டத்திற்கு சர்வதேச தன்னார்வ தொண்டு நிறுவனமான ஆசியா பௌண்டேஷன் நிதி அனுசரணை வழங்குகின்றது.

இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், பிரதேச சபையின் தவிசாளர், உப தவிசாளர், மக்கள் பிரதிநிதிகள்,பிரதேச சபையின் நிருவாக அலுவலர்கள், பொதுமக்கள் வரியிறுப்பாளர்கள் ஆகிய தரப்பாருக்கு உள்ளூராட்சி நிருவாகம் சம்பந்தமான அடிப்படை சட்ட திட்ட ஏற்பாடுகளை விளக்கி பிரதேச மக்களின் தேவைகளையும் பிரச்சினைகளையும் தொடர்ச்சியாக ஆராயும் சந்திப்புக்கள் இடம்பெற்றும் வருகின்றன.

மக்கள், அதிகாரிகள், அரசியல் பிரதிநிதிகளுடைய முழுமையான பங்களிப்பு கிடைப்பதை உறுதி செய்து நிலையான அபிவிருத்தி இலக்கை அடைந்து கொள்ளும் நோக்கோடு தான்,இச்சயெலமர்வுகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

பயிற்சிச் செயலமர்வின் இறுதியில், மக்கள் பங்கேற்புடனான (பாதீடு) வரவு செலவுத் திட்டம் முன்னுரிமை அடிப்படையில் தயாரிக்கப்பட்டு மூதூர் பிரதேச சபை நிருவாகத்தினரிடம் கையளிக்கப்பட்டது.

## மாணவரிடையே வாசிப்பு பழக்கத்தை விதைக்கும் வியூகங்கள் முன்னெடுப்பு

**பெரியநீலாவணை தினகரன் நிருபர்**

பாடசாலைப் பருவத்திலிருந்தே வாசிப்பு பழக்கத்தை மாணவர் மத்தியில் விதைக்கும் நோக்கில், கல்வியமைச்சுடன் தேசிய நூலகம் மற்றும் ஆவணச்சேவைகள் சபை இணைந்து வாசிப்பு மாதத்தின் வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளது.

ஒக்டோபர் மாத தேசிய வாசிப்பு தினத்தை முன்னிட்டு இவ்வேலைத் திட்டங்கள்

முன்னெடுக்கப்படுகின்றன.' நூலகமும் ஒரு ஆசிரியரே' என்ற தொனிப்பொருளில் இவ்வருடத்திற்கான தேசிய வாசிப்பு மாதம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.இதனை முன்னிட்டு,பெற்றோருக்கு பொருளாதாரச் சுமையை ஏற்படுத்தாத வகையில் பாடசாலை அதிபரின் பொறுப்புடன் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. மாணவர்களின் வாசிப்புத் தேவையினைக் கண்டறிந்து அதனை நிறைவேற்றுதல், நூலகங்களுக்கான புத்தக சேமிப்பினை ஊக்குவித்தல், பிறந்த நாள் பரிசாக நூல்களை அன்பளிப்புச் செய்தல், புத்தகக் கண்காட்சியை நடத்துதல், புத்தக நன்கொடை தினமொன்றை அறிமுகம் செய்தல் என்பனவும் இதற்குள் அடங்குகின்றன. மேலும்,வாசிப்பின் முக்கியத்துவத்தை ஏற்படுத்தும் நோக்கிலான போட்டிகள், விரிவுரைகளை நடாத்துதல், சுவரொட்டிகள் மற்றும் துண்டுப் பிரசுரங்களை வெளியிடுதல், வாசிப்பு முகாம்களை நடத்துதல் என்பவையும், இவ்விஷேடவேலைத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளன.

ஒக்டோபர் 25 ஆம் திகதியை நூலக தினமாகப் பயன்படுத்துவதுடன் நூலக தின பதாகைகளை காட்சிப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. மறுநாள் (26) நூலகத்தை சுத்தம் செய்தல் நிகழ்வுகளும் நூல்களை ஒழுங்கமைக்கும் செயற்பாடுகளை 27 ஆம் திகதியும், நூலக மேம்பாட்டுக்கான வேலைகளை 28 இல் முன்னெடுக்கவும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அதிகமான நூல்களைப் பயன்படுத்திய வாசிப்பாளர்கள் 10 பேரை கௌரவிப்பதற்கான ஒழுங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் ஈ.டபிள்யூ எல்.கே எகொடவெலவினால்; பாடசாலைகளுக்கு இவ்வறிவுறுத்தல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வடமராட்சி அருள்மிகு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் திருக்கோவில் கொடியேற்றம்

*கரவெட்டி தினகரன் நிருபர்*



வரலாற்று சிறப்பு மிக்க வடமராட்சி அருள்மிகு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் திருக்கோவில் கொடியேற்றம் சிறப்பாக இடம் பெற்றுள்ளது. கணபதீஸ்வரக் குருக்கள் தலைமையில் கொடியேற்றம் மிக சிறப்பாக இடம் பெற்றுள்ளது.

17 தினங்கள் நடைபெறும் இப் பெரும் திருவிழா எதிர்வரும் 10/10/2022 ம் திகதி திங்கட்கிழமை நிறைவடையவுள்ளது.

01/10/2022 அன்றிலிருந்து வல்லிபுரத்து ஆழ்வார் குருக்கட்டு விநாயகர் ஆலய தரிசனத்துடன் அனைத்துத் திருவிழாக்களின் போது சுவாமி வெளிவீதி வந்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பார்.

முக்கிய திருவிழாக்களான வெண்ணெய்த்திருவிழா 02/10/2022ம் திகதியும், துகில்த்திருவிழா 03/10/2022 திகதியும், பாம்புத்திருவிழா 04/10/2022 திகதியும், கம்சன் போர்த்திருவிழா 5/10/2022 ம் திகதியும், வேட்டை திருவிழா 6/10/2022 ம் திகதியும், சப்பறத் திருவிழா 7/10/2022 ம் திகதியும் , தேர்த் திருவிழா 8/10/2022 திகதி சனிக்கிழமையும், சமுத்திர தீர்த்த திருவிழா 9/10/2022 ம் திகதி ஞாயிற்றுக்கிழமையும், கேணி தீர்த்தமும் 10/10/2022 திங்கட்கிழமையும், கொடி இறக்கம் அன்றைய நாள் பிற்பகல் 6:00 மணிக்கும் இடம்பெறவுள்ளன. பெருந் திருவிழாக்களுக்கான வசதிகள் அனைத்தும் ஆலய நிருவாகம், பருத்தித்துறை பிரதேச சபை, வடமராட்சி வடக்கு பிரதேச செயலகம், பருத்தித்துறை காவல் நிலையம் என்பனவற்றால் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதேவளை ஆலயத்திற்கு வருகை தருவோர் கலாசார உடை அணிந்து, தங்க ஆபரணங்களை அணிவதை தவிர்த்து, ஆசார சீலர்களாக வருகைதருமாறு ஆலய நிர்வாகம் கோரியுள்ளது.





பேருவளை மருதானை அல்பாஸியத்துல் நஸ்ரியா பெண்கள் பாடசாலையில் நேற்று மாபெரும் சிரமதானப் பணியொன்று இடம்பெற்றது. பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் என பலரும் சிரமதானப் பணியில் பங்குபற்றினர்.

(படம்: பேருவளை பீ.எம்.முக்தார்)

# ஆர்வ வெளிப்பாட்டுக்கான கோரிக்கை

**(ஆலோசனை சேவைகள் - நிறுவனங்கள் தேர்வு)**

**கமத்தொழில் அமைச்சு**

**காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாயத் திட்டம் (CSIAP)**

| | | |
|---|---|---|
| **நாடு** | : | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு |
| **திட்டம்** | : | காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாயத் திட்டம் (CSIAP) |
| **கடன் இல.** | : | IDA 6346 LK |
| **ஒப்படைத் தலைப்பு** | : | உலக வங்கி நிதியளிக்கப்பட்ட காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் (CSIAP) கீழ் மாகாண கமத்தொழில் திணைக்களத்தின் தேர்வு செய்யப்பட்ட அதிகாரிகளுக்கான நிகழ்ச்சிகள் மற்றும் விவசாய வர்த்தகப் பாடசாலை (FBS) நிகழ்ச்சிகளுக்கான CSIAP திட்ட பயிற்சியாளர்களுக்கு பயிற்சி (TOT) அளிப்பதற்கான ஆலோசனை சேவை |
| **குறிப்பு இல.** | : | LK-MOA-309674-CS-LCS/TOT(1)/2022/001 |

காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் (CSIAP) செலவை நோக்கி உலக வங்கியிடம் இருந்து இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கு நிதி கிடைக்கப்பெற்றிருப்பதோடு ஆலோசனை சேவைகளுக்காக அந்த நிதியின் பகுதியை பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஆலோசனை சேவைகள் ("இந்த சேவைகள்") "மையப்புள்ளி" பகுதி என அழைக்கப்படும் காலநிலை பாதிப்புக்குள்ளாகும் திட்டப் பகுதியில் உள்ள 36,000 பயனாளிகளான விவசாயிகளுக்கு (ஆண் மற்றும் பெண் (15,000) இருபாலாரும்) பயிற்சி அளிக்கும் CSIAP இன் இறுதி இலக்கிற்கு வசதி அளிக்கும் நோக்குடையாதாகும். எனவே, FBS நிகழ்ச்சிக்காக கள மட்டத்திலான விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கும் பொருட்டு, AI இற்கு உதவியாளர்களாக CSIAP இன் மையப்புள்ளி பகுதியில் ஒவ்வொரு கமநல சேவை நிலையங்களையும் (ASC) அடிப்படையாகக் கொண்டு CSIAP யினால் அண்மையில் பணியமர்த்தப்பட்டிருக்கும் 47 விவசாய உதவியாளர்கள் மற்றும் பயற்சியாளர்களாக PDOA வுக்கு (மாகாண விவசாய திணைக்களம்) சொந்தமான 120 விவசாய பயிற்சியாளர்களுக்கும் (AI) பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதனால், AI மற்றும் AF இற்கான பயிற்சியாளர்களுக்கு பயிற்சியை (TOT) ஆலோசகரால் நடத்துவதற்கு தேவைப்படுவதோடு, ஒப்படையின் சுருக்கமான விபரம் பின்வருமாறு,

104 பங்கேற்பாளர்களுக்கான நான்கு TOT நிகழ்ச்சிகள் சிங்கள மொழியில் நடத்தப்படவிருப்பதோடு 63 பங்கேற்பாளர்களுக்கான ஏனைய 20 TOT நிகழ்ச்சிகள் தமிழ் மொழியில் நடத்தப்படும்.

1. ஒவ்வொரு TOT நிகழ்ச்சிகளினதும் எதிர்பார்க்கப்படும் கால அளவு 05 நாட்களாகும்.
2. தொழில் வழங்குநர் மூலம் வழங்கப்படும் TOT நிகழ்ச்சிக்கான பாடத்திட்டத்திற்கு ஏற்ப பயிற்சி உபகரணங்களை சேவை வழங்குநர் தயார் செய்ய வேண்டும்.

தவிர, CSIAP திட்டத்தின் நோக்கத்திற்கு பொருந்தும் FBS TOT பயிற்சி வடிவத்திற்கு முயற்சிக்கப்பட்ட மற்றும் சோதிக்கப்பட்ட காலநிலை மீளாற்றல் நடைமுறைக்கு ஆலோசகர் ஒத்துழைப்பு வழங்கல் வேண்டும். பின்னர், FBS வடிவம் "காலநிலை ஸ்மார்ட் FBS" வடிவம் அல்லது நிகழ்ச்சி என மாறும். (FBS அணுகல் அனுபவப் பகிர்வு, வெற்றிகள் பற்றிய கதைகளின் மீளாய்வு, சந்தை விஜயம் மற்றும் களப் பயண வெளிப்பாட்டை ஒன்றிணைத்ததாகும்.)

ஆர்வமுடைய ஆலோசகர்கள் www.csiap.lk, www.agrimin.gov.lk என்ற இணையதள முகவரிகளில் விரிவான குறிப்பு விதிகளை இலவசமாக தரவிறக்கம் செய்யலாம் அல்லது வேலை நாட்களில் 9.00 மணி தொடக்கம் 16.00 மணி வரை பெறுகை நிபுணர், திட்ட முகாமைத்துவ பிரிவு, காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாயத் திட்டம் (CSIAP), இல.: 61/1, எம்.டி.எச் ஜயவர்தன மாவத்தை, மதின்னகொட, ராஜகிரிய என்ற முகவரியில் அதனை பெற முடியும்.

காலம்/ ஒப்படையின் காலம்/ ஒப்பந்தம்: 08 வாரங்கள்

சேவைகளை வழங்க தமது ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கு தகுதியுடைய ஆலோசனை நிறுவனங்களுக்கு ("ஆலோசகர்கள்") கமத்தொழில் அமைச்சை பிரதிநிதித்துவப்படுத்தும் காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் (CSIAP) திட்ட முகாமைத்துவ பிரிவினால் (PMU) தற்போது அழைப்பு விடுக்கப்படுகிறது. ஆர்வமுடைய ஆலோசகர்கள் சேவைகளை மேற்கொள்வதற்கு தேவையான தகைமைகள் மற்றும் அது சார்ந்த அனுபவத்தை பெற்றிருப்பதை வெளிப்படுத்தும் விபரத்தை வழங்குவது அவசியமாகும். ஆர்வ வெளிப்பாட்டுக்கான (EOI) அளவுகோலின் குறுகிய பட்டியல்:

1. குறிப்பாக கள அதிகாரிகள் மற்றும் விவசாயிகளுக்கான வர்த்தகத் திறன் மேம்பாட்டு பயிற்சிகளை நடத்தியதில் குறைந்தது 10 ஆண்டுகள் அனுபவம்.
2. சமூக அடிப்படையிலான அமைப்புகள் மற்றும்/ அல்லது கூட்டுறவு சமூகங்கள் மற்றும்/ அல்லது விவசாய உற்பத்தியாளர் அமைப்புகளுக்காக நிறுவனமயமான திறன் மேம்பாட்டு பயிற்சிகளை நடத்திய அனுபவம்.
3. ஆலோசகர் குறைந்தது கடந்த பத்து (10) ஆண்டுகளுக்காக இந்த பணியில் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆலோசகர் போதுமான நிதி நிலை மற்றும் 10 மில். இலங்கை ரூபா பெறுமதிக்கு சமர்ப்பிக்கும் திரவச் சொத்துகளின் கிடைக்கும் தன்மையின் திறனை நிரூபித்தல் வேண்டும்.
5. ஆலோசகர் குறைந்தது 20 மில். இலங்கை ரூபாவின் மொத்த பெறுமதி, இதனை ஒத்த பண்புடைய குறைந்தது இரண்டு (02) ஒப்பந்தங்களை நிறைவு செய்திருத்தல் வேண்டும்.
6. அமைப்பு ரீதியான கட்டமைப்பு
7. ஒப்படையை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்கு தேவையான தகைமைகள், தொழில்நுட்ப மற்றும் தொழில்முறை திறனுடனான ஆளணி (சுயவிபரக் கோவை வழங்க வேண்டிய தேவை இல்லை)

உலக வங்கியின் ஆர்வ முரண் கொள்கைக்கு அமைய ( ஆலோசனை வழிகாட்டல்கள் ) உலக வங்கி கடன் பெற்றவர்கள் மூலம் (IBRD கடன்கள் மற்றும் IDA கடன்கள் மற்றும் மானியங்களின் கீழ்) ஆலோசகர்களின் தேர்வு மற்றும் பணியமர்த்தலின், உலக வங்கியின் வழிகாட்டல்களின் 1.9 பந்தியில் வரையப்பட்டவை ஆர்வமுடைய ஆலாசகர்களின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

தமது தகைமையை மேம்படுத்துவதற்கு ஆலோசகர்கள் ஏனைய நிறுவனங்களுடன் கூட்டு முயற்சி அல்லது துணை ஆலோசனையில் இணையலாம்.

ஆலோசகர் வழிகாட்டலில் நிர்ணயிக்கப்பட்ட LCS (குறைந்தபட்ச செலவு தேர்வு) முறைக்கு அமைய ஆலோசகர் ஒருவர் தேர்வு செய்யப்படுவார்.

2022 செப்டெம்பர் 23 ஆம் திகதி தொடக்கம் 2022 ஒக்டோபர் 10ஆம் திகதி வரை 9.00 மணி தொடக்கம் 15.00 மணி வரையில் (உள்ளூர் நேரம்) அலுவலக நேரங்களில் கீழுள்ள முகவரியில் மேலதிக விபரங்களை பெற முடியும்.

ஆர்வ வெளிப்பாடானது 2022 ஒக்டோபர் 10ஆம் திகதி 15.00 மணிக்கு (உள்ளூர் நேரம்) கீழுள்ள முகவரியில் நேரடியாக வந்து அல்லது மின்னஞ்சல் மூலமாக எழுதப்பட்ட வடிவத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**பொறியியலாளர் ஆர்.எம்.பி. ராஜகருணா**
**திட்டப் பணிப்பாளர்**
**காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின்** (CSIAP)
**இல.:** 61/1, **எம்.டி.எச். ஜயவர்தன மாவத்தை, மதின்னகொட, ராஜகிரிய.**
**தொ.** : +94112053252 **மற்றும்/ அல்லது** +940112871293
**தொலைநகல்** : +94112053167
**மின்னஞ்சல்** : pdcsiap@gmail.com **மற்றும்/ அல்லது** ps.pmu@csiap.lk

# யாழில். மதுபானம், மாவாவுடன் கைதான மாணவர்கள்

*யாழ்.விசேட நிருபர்*

யாழ். நகர் பகுதியில் மது மற்றும் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட பாடசாலை நான்கு மாணவர்களை கடுமையாக எச்சரித்து மாணவர்களின் பெற்றோர்களிடம் பொலிஸ் அத்தியட்சகர் ஒப்படைத்துள்ளார்.

பிறவுண் வீதியில் உள்ள ஆலயத்திற்கு அருகில் போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்டுள்ளனர் என பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் , புலனாய்வுப் பிரிவினர் சம்பவ இடத்திற்கு விரைந்திருந்தனர்.

அங்கு இருந்த நான்கு மாணவர்களில் ஒரு மாணவன் "மாவா" போதைப்பாக்குடனும் ஏனைய மூன்று மாணவர்கள் மதுபானத்துடனும் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

**மஸ்கெலியா பிரதேச சபை**

**2022ஆம் வருடத்திற்கான தீபாவளி பண்டிகையினை முன்னிட்டு மஸ்கெலியா பிரதேச சபையின் பொது மைதானத்தினை கீழ்வரும் சந்தர்ப்பங்களுக்காக குத்தகைக்கு (டென்டர்) வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்**

- தற்காலிக கடையறைகள்
- கானிவேல் களியாட்ட நிகழ்வுகள்
- தற்காலிக கடையறைகளுக்காக மின்சார இணைப்பினை வழங்குதல்
- தீபாவளி விசேட வானொலிச் சேவை

**நிபந்தனைகள்**

1. விண்ணப்பக் கட்டணமாக

| | |
|---|---|
| ✳ தற்காலிக கடையறைகள் | - ரூ. 300.00 |
| ✳ கானிவேல் களியாட்ட நிகழ்வுகள் | - ரூ. 2000.00 |
| ✳ தற்காலிக கடையறைகளுக்காக மின்சார வசதிகளை வழங்குதல் | - ரூ. 2000.00 |
| ✳ தீபாவளி விசேட வானொலிச் சேவை | - ரூ. 2000.00 |


செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் அதனை மஸ்கெலியா பிரதேச சபை காரியாலயத்தில் நேரடியாக செலுத்துவதன் மூலம் அல்லது 'தலைவர், மஸ்கெலியா பிரதேச சபை' என்ற பெயரில் காசு கட்டளையை மஸ்கெலியா பிரதேச சபைக்கு பதிவுத்தபாலில் அனுப்புவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

2. தாங்கள் விண்ணப்பிக்க விரும்பும் கீழே வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள கடையறை இலக்கத்தின் கடிதவுறையில் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக குறிப்பிட்டு 2022.10.11 அன்று மு.ப. 9.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடிய வகையில் பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். அல்லது காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ள டென்டர் பெட்டியினுள் இடுதல் வேண்டும். அன்றைய தினமே மு.ப. 10.00 மணிக்கு டென்டர் விண்ணப்பங்கள் திறக்கப்படுவதுடன் குறித்த நேரத்திற்கு பின்னர் ஒப்படைக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
3. டென்டர் விண்ணப்பங்கள் 2022.09.27 முதல் 2022.10.10 வரை பி.ப. 3.00 மணி வரை விநியோகிக்கப்படும்.
4. ஒரு கடைக்கான ஆகக் குறைந்த டென்டர் தொகை ரூபா 5000.00 என்பதோடு அதிகபட்ச விலை கோரும் விண்ணப்பதாரருக்கு குறித்த இடம் குத்தகைக்கு வழங்கப்படும்.
5. 2022.10.11 அன்று காலை 10.00 மணிக்கு மஸ்கெலியா ஸ்ரீ சண்முகநாதர் கோயில் மண்டபத்தில் கேள்வி விண்ணப்பங்கள் திறக்கப்படும்.
6. ஒரு விண்ணப்பதாரர் பெயரில் அதிகபட்சமாக 3 இடப்பகுதிகளுக்கு மாத்திரமே விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க முடியும்.
7. வியாபாரத்திற்காக இடங்களை குத்தகைக்கு பெற்றுக் கொடுக்கும் காலம் 2022.10.17 திகதி தொடக்கம் 2022.10.31ஆம் திகதி வரை மட்டுமேயாகும் என்பதோடு கடைத்தொகுதிகளை தாங்களே அமைத்துக் கொள்ள வேண்டும்.
8. குறித்த இடங்களை குத்தகைக்கு பெற்றுக் கொள்வோர் அவ்வேளையிலேயே முழுத்தொகையினையும் செலுத்த வேண்டியதுடன் அவ்வாறு செலுத்தத்தவறும் பட்சத்தில் குறித்த இடமானது அடுத்த குத்தகைதாரருக்கு வழங்கப்படும்.
9. களியாட்ட நிகழ்வுகளுக்கான ஆகக்குறைந்த டென்டர் தொகை ரூபா 175,000.00 என்பதோடு அதிகபட்ச விலை கோரும் விண்ணப்பதாரருக்கு குறித்த இடம் குத்தகைக்கு வழங்கப்படும்.
10. தற்காலிக கடையறைகளுக்கு மின்சாரம் வழங்குதலுக்காக ஆகக்குறைந்த டென்டர் தொகை ரூபா 20,000.00 ஆகும். அத்துடன் அதிகபட்ச விலை கோரும் விண்ணப்பதாரருக்கு குறித்த விடயம் குத்தகைக்கு வழங்கப்படும்.
11. களியாட்ட நிகழ்வு, தற்காலிக கடையறைகளுக்கு மின்சாரம் வழங்குதல் மற்றும் தீபாவளி விசேட வானொலிச் சேவை என்பவற்றிற்கு மீள் செலுத்தப்படும் வைப்புத்தொகை ரூ. 7500.00 என்பதுடன் குறித்த டென்டரிலிருந்து அவர் விலகும் பட்சத்தில் வைப்புத்தொகையானது மீள் செலுத்தப்பட மாட்டாது.
12. களியாட்ட நிகழ்வுகளுக்காக விநியோகிக்கப்படும் டிக்கட்டுகளுக்கான பெறுமதியில் 5% களியாட்ட வரியாக பிரதேச சபைக்கு செலுத்துதல் வேண்டும்.
13. குத்தகையை பெற்றுக் கொள்ளும் நபர் உடனடியாக பிரதேச சபையுடன் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடல் வேண்டும். ஏனைய நிபந்தனைகள் பற்றி கேள்வி விண்ணப்பங்கள் திறக்கப்படுவதற்கு முன்னர் விளக்கமளிக்கப்படும்.
14. களியாட்ட நிகழ்வுகளுக்காக தொழில்நுட்ப உத்தியோகத்தரின் அறிக்கையினை பெற்றுக் கொள்ளுதல் அவசியமாவதுடன் அச்சாதனங்கள் பொது மக்களுக்கு பாதிப்பேற்படுத்தாத வண்ணம் பொருத்தப்படல் வேண்டும்.
15. சபையினால் பிரசுரிக்கப்பட்ட வரைபடத்தில் குறித்துக் கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் மாத்திரம் களியாட்ட நிகழ்வுகளை மேற்கொள்வதோடு களியாட்ட நிகழ்வு இடம்பெறும் இடத்தில் சட்டவிரோத விடயங்கள் மேற்கொள்வது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.
16. குத்தகையினை பெற்றுக் கொள்ளும் நபர் குத்தகை தொகையில் 50% இனை அவ்விடத்தில் உடனடியாக செலுத்துதல் வேண்டும். என்பதோடு மிகுதி 50% இனை களியாட்ட நிகழ்வுகள் ஆரம்பிக்கும் முன் செலுத்த வேண்டும்.
17. தற்காலிக கடையறைகளுக்காக மின்சார இணைப்பினை வழங்குதல் மற்றும் தீபாவளி விசேட வானொலிச் சேவை என்பவற்றிற்கான நிபந்தனைகள் கேள்வி விண்ணப்பங்கள் திறக்கப்படுவதற்கு முன்னர் விளக்கமளிக்கப்படும்.
18. வியாபாரங்கள் நடைபெறும் நேரத்தில் மஸ்கெலியா பிரதேச சபை உத்தியோகத்தர்கள் ஏனைய அரச உத்தியோகத்தர்களுக்கு தேவைப்படும் எந்நேரங்களிலும் களப் பரிசோதனையினை மேற்கொள்ள இடமளித்தல் வேண்டும்.
19. வியாபாரப் பரப்பினுள் பட்டாசு விற்பனை மிருகங்கள் இறைச்சி விற்பனை மது மற்றும் சட்ட விரோத விற்பனைகள் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.
20. வியாபார நடவடிக்கையில் ஈடுபடுவோருக்கான அடிப்படை தேவை வசதிகள் (குடி நீர்குழாய், பொது மலசலகூடம்) பிரதேச சபையின் மூலம் அமைத்துக் கொடுக்கப்படும். கடையறைகளுக்கான மின்சார இணைப்புக்களை வியாபாரிகளே பெற்றுக் கொள்ள வேண்டும்.
21. கடைத்தொகுதிகளை அமைக்கும் பொழுது மைதானத்தின் உடைமைகளுக்கு (வயர்நெட்) சேதமேற்படாத வண்ணம் தாங்களே அமைத்துக் கொள்ள வேண்டும்.

மேற்கூறப்பட்ட நிபந்தனையினை/நிபந்தனைகளை மீறும் பட்சத்தில் அவருக்கான கேள்வி அறிவித்தல் இரத்து செய்யப்பட்டு குறித்த இடத்தினை மீளப்பெறும் அதிகாரம் பிரதேச சபைக்கு உரித்தாகுவதோடு கேள்விச் சபையின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

மேலதிக தகவல்களுக்கு: 052-2277275, 052-2277700.

**தவிசாளர்,**
**மஸ்கெலியா பிரதேச சபை,**
**மஸ்கெலியா.**



# நவராத்திரி கால விசேட நிகழ்வு


நவராத்திரி விரத காலத்தையொட்டி இன்று 26 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் ஒக்டோபர் 05 ஆம் திகதி வரை விசேட நிகழ்வானது இல. 124,ஸ்ரீகுணானந்த மாவத்தையில் அமைந்துள்ள பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நாளாந்த வாழக்கையில் மன நிம்மதியை அனுபவம் செய்வதில் நவராத்திரி விரதத்தின் பங்களிப்பு மற்றும் நவராத்திரி விரதத்தின் ஆன்மீக இரகசியத்தை கூறும் பட விளக்கக் கண்காட்சி, தியானம், தேவி தரிசனம் ஆகிய பல அம்சங்கள் உள்ளன. மக்கள் இன்று (26.09.2022) முதல்05.10.2022 வரையான நாட்களில் காலை 7.00 மணியிலிருந்து மாலை 8.00 மணிக்குட்பட்ட நேரத்திற்குள் வருகை தர முடியும். அனுமதி முற்றிலும் இலவசம் எனவும் மேலதிக விபரங்களுக்கு 0773747404, 0112344106 ஆகிய இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

# ஸ்ரீ முனீஸ்வரர் முத்து மாரியம்மன் தேவஸ்தானம் நவராத்திரி விழா

கொழும்பு 13ஜெம்பட்டா வீதி இல 151/155தோட்டம் ஸ்ரீ முனீஸ்வரர் முத்து மாரியம்மன் தேவஸ்தான் நவராத்திரி விழா 2022 நவா வர்ண ஸ்ரீ சக்கர பூஜை 26.09.2022 முதல் 05 -10 வரை சாரதா நவராத்திரி விழாவும் நவாவரண ஸ்ரீ சக்கர பூஜையும் நவசக்தி மஹா ஹோமமும் தொடர்ந்து, 9 ,நாட்களுக்கு நடைபெறும். தினமும் 3.30 மணிக்கு கும்ப பூஜை ஆரம்பமாகும் மாலை 4.30 மணிக்கு நவாவரண ஸ்ரீ சக்கர பூஜை மாலை 6.30 மணிக்கு முத்தேவியர் ஹோமம் மாலை 7.00 மணிக்கு சாயரட்ச புஜை மாலை 7.30 மணிக்கு வசந்தமணடப பூஜை விஷேட தீபாராதனை நடைபெறும். 0510.புதன் கிழமை காலை 8.00 மணிக்கு விஷேட நவகலச அபிஷேகம் தொடர்ந்து வித்தியாரம்பம் ஏடு தொடக்குதல் நடைபெறும். மாலை 4.00 மணிக்கு மானம்பூ திருவிழா (வாழவெட்டு) நடைபெறும்.

தொடர்ந்து பிரயச்சித்த அபிஷேகம் நடைபெறும். விழா ஒருங்கமைப்புகளை தைவி பூஜா ஸேவா துரந்தரர் ஜோதிடமணி விஸ்வ அபிமானி தேசபந்து ஆன்மீக ஜோதிட மணி சர்வதேச இந்துமத பீட இணைப்பாளர் கலாநிதி ஸ்ரீவஸ்ரீ.செ.சிவநேச குருக்கள் மேற்கொண்டு வருகிறார்.

# அமரர் பண்டாரநாயக்கா பற்றி முத்தழகு பாடிய தமிழ் பாடல்கள்



தேசிய கலை கலாசார வளர்ச்சிக்கு வித்திட்ட இலங்கையின் முன்னாள் பிரதமர் அமரர் எஸ்.டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க மீது 1924 ஆம் ஆண்டு பாடப்பட்ட பாடல்களை மீண்டும் இலங்கை வானொலி தமிழ் சேவையில் கேட்கின்ற வாய்ப்பு இலங்கை வானொலி தமிழ் சேவை ரசிகர்களுக்கு கிடைக்க இருக்கின்றது. இந்தப் பாடல்கள், இன்று 26 ஆம் திகதி காலை 7.00 மணிக்குப் பின் தேசிய சேவையிலும் தென்றல் சேவையிலும் ஒலிபரப்பப்படவுள்ளன.பிரபல தேசிய பாடகரும் வானொலி தொலைக்காட்சி தமிழ், சிங்கள திரைப்படப் பின்னணிப் பாடகருமான வி. சூரியகுமார் முத்தழகு பாடிய பாடல்கள் இவ்வாறு ஒலிபரப்பப்படவிருக்கின்றன.

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்கவின் முயற்சிக்கு அமைய தமிழ்ச்சேவைப் பணிப்பாளர் கணபதிப்பிள்ளையின் நடவடிக்கைக்கு ஏற்ப ய இந்தப் பாடல்கள் ஒலிபரப்பப்படவிருக்கின்றன.

# தந்தையற்ற மாணவனின் கற்றலுக்கு உதவி



*கிண்ணியா தினகரன் நிருபர்*

அல்ஹித்மதுல் உம்மா பௌண்டேசனின் ஏற்பாட்டில் IHHNL இன் அனுசரணையுடன் தந்தையற்ற மாணவனுக்கு கற்றலுக்குத் தேவையான மேசையொன்று நேற்று (25) வழங்கப்பட்டது.

அல்ஹித்மத்துல் உம்மா பௌண்டேசனின் தலைவர் கஸ்ஸாலி முகமட் பாத்திஹ், மூதூரைச் சேர்ந்த முகமட் சாகிருக்கு கற்றலுக்குத் தேவையான மேசையையும் வினாவிடைப் புத்தகத்தினையும் வழங்கி வைத்தார்.

அல்ஹித்மதுல் உம்மா பௌண்டேசன் தந்தையற்ற மாணவ மாணவிகளுடைய தேவையை இனங்கண்டு அவர்களுக்குத் தேவையான உதவிகளை தொடர்ந்து வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சிறு விளம்பரம்

மோட்டார் வாகனங்கள் 108

## நிஸான் கார் விற்பனைக்கு

WP CAK-9954 NISSAN ZAA-ZEO LEAF Motor Car Black - 2012. கூடிய விலைக் கோரிக்கைக்கு. செரண்டிப் பினான்ஸ் லிமிட்டட், 187, கட்டுகஸ்தொட்ட ரோட், கண்டி. தொ.பே. 08122 0 0272. 055867


## பெயர் மாற்றம்

மாத்தளை இரத்தோட்டை பிரதேச செயலகத்தின் விஹாரகம கிராம சேவக பிரிவில் வசிக்கும் கனகரத்தினம் இரத்தினகலா ஆகிய நான் எதிர்வரும் காலத்தில் **கனகரட்ணம் ரட்ணகலா (KANAGARATNAM RATNAKALA)** என எனது பெயரை பயன்படுத்துவேன் என இலங்கை அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் அறியத்தருகிறேன்.


Repeat Your ad For Better Offers


# பவர் ஆ∴ப் அட்டர்ணி இரத்து

எண் 36/13 இன் வீரஹந்திகே ஶ்ரீயானி புஷ்பலதா ஸ்வர்ண பிளேஸ், ஹொன்னந்தர தெற்கு பிலியந்தலை, 41, சமன்புர, தம்புள்ளை வீதி, குருநாகல் என்ற முகவரியில் உள்ள லலித் உதேனி பத்மசிறி ஜயவீரவை எனது பவர் ஆ∴ப் அட்டர்ணியாக நியமித்துள்ளார். இன்று முதல் இரத்து செய்யப்பட்டுள்ளது என்பதை இலங்கை குடியரசின் பொது மக்களுக்கு இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**வீரஹந்திகே ஷ்ரியாணி புஷ்பலதா**

## பெயர் மாற்றம்

கோறளைப்பற்று மத்திய பிரதேச செயலாளர் பிரிவில் மையன் ஹாஜியார் வீதி. பாலக்காட்டுவெட்டை, தியாவட்ட வான் எனும் முகவரியில் வசிக்கும் **தம்பிராசா பாத்திமா சாகிரா** ஆகிய நான் கடந்த 24.10.2000 திகதி புனித இஸ்லாத்தை தழுவிக் கொண்டு **தம்பிராசா யோகேஸ்வரி** என்ற எனது பெயரை **பாத்திமா சாகிரா** என்று மாற்றியுள்ளேன் அன்று முதல் எனது சகல ஆவணங்களிலும் **பாத்திமா சாகிரா** என்று ஒப்பமிட்டு வருகின்றேன் என்று இத்தால் இலங்கை அரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருகிறேன்

**பாத்திமா சாகிரா**
**மையன் ஹாஜியார் வீதி,**
**பாலக்காட்டுவெட்டை,**
**தியாவட்டவான்.**

## பெயர் மாற்றம்

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் காவத்தமுனை பாடசாலை வீதியில் வசிக்கும் **முஹம்மது பஸீர் முஹம்மது இம்தாத்** ஆகிய எனது பிறப்பு அத்தாட்சி பத்திரத்தில் பெயர் **'ஆதம்பாவா'** என வைக்கப்பட்டுள்ளது அந்தப் பெயரில் எனக்கு விருப்பம் இன்மை காரணமாகவும் எனது குடும்பத்தாராலும் உறவினர்களாலும் **முஹம்மது இம்தாத்** என அழைக்கப்படுவதாலும் எனது சகல ஆவணங்களிலும் **முஹம்மது இம்தாத்** என்று உள்ளதாலும் எனது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் **முஹம்மது இம்தாத்** என எனது பெயரை மாற்றவுள்ளேன் என இத்தால் இலங்கை அரசுக்கும் பொது மக்களுக்கும் தெரியப்படுத்துகிறேன்.

**முஹம்மது இம்தாத்**
**பாடசாலை வீதி, காவத்தமுனை.**

# கழிக்கப்பட்ட பொருட்களின் பகிரங்க ஏல விற்பனை

## வெளி மண்டலவியல் திணைக்களம்

## கொழும்பு -07

* இத்திணைக்களத்தின் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட இரும்பு, அலுமினியம், மரத்தலபாடங்கள், கணனி துணைப்பாகங்கள் உற்பட அலுவலக உபகரணங்கள் 2022.10.06ம் திகதி திணைக்கள வளாகத்தில் மு.ப. 9.00 முதல் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.
* இப் பொருட்களைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கு 2022.10.05ம் திகதி மு.ப. 9.00 முதல் பி.ப. 4.00 வரை முடியும். காசாக மாத்திரம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுவதுடன் கொள்வனவு செய்த பொருட்களை 2022.10.06ம் திகதியன்றே திணைக்கள வளாகத்திலிருந்து அகற்றிக் கொள்ளல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**வளி மண்டலவியல் திணைக்களம்,**
**தொ. பே. 011 2694846.**

### அறிவித்தல்

பொது அறிவித்தல் 2007 07 ஆம் இலக்க கம்பனிச்சட்டத்தின் 9 பிரிவின் அடிப்படையில் கீழ் குறிப்பிட்டுள்ள என்பதை இவ்வறிவித்தல் மூலம் அறியத்தருகின்றோம்.

கம்பனியின் பெயர்: Queen Consolidated (Private) Limited
கம்பனியின்
இலக்கம்: PV 119495
திகதி: 19.01.2017
பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி: 7, 34th Lane A, Off Queens Road, Colombo-03.

செயலாளர் - எஸ்டிஎம் செக்ரடறியல் சர்விசஸ் (பிரைவேட்) லிமிட்டட் 86, எஸ்.டி. எஸ் ஜயசிங்க மாவத்தை, கொஹுவல, நுகேகொட.

2022 செப்டெம்பர் 21

# வாகனங்கள் விற்பனைக்கு

| வாகன இல. | வகை | மாதிரி | வருடம் |
|---|---|---|---|
| **கார்** | | | |
| KA -2XXX | SUZUKI | LIANA | 2005 |
| **லொறி** | | | |
| GR -9XXX | MAZDA | BONGO | 1997 |
| PW -8XXX | TATA | SUPERACE | 2012 |
| **டிப்பர்** | | | |
| LA -9XXX | TATA | LPK 1615 | 2005 |
| LM -4XXX | LANKA ASHOK LAYLAND 1616 | | 2016 |
| **முச்சக்கர வண்டிகள்** | | | |
| HW -8XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2003 |
| JN -8XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2004 |
| JY -2XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2004 |
| QB -2XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2005 |
| QA -0XXX | BAJAJ | AUTO RE STROKE | 2005 |
| QB -6XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2005 |
| QE -9XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QF -7XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QJ -7XXX | BAJAJ | AUTO AR4S | 2007 |
| QV -9XXX | BAJAJ | AR4S-UG | 2009 |
| QV -1XXX | BAJAJ | BAJAJ 4 S | 2009 |
| QW -3XXX | BAJAJ | AR4S-UG | 2009 |
| QW -5XXX | BAJAJ | AR4S-UG | 2010 |
| YI -6XXX | BAJAJ | RE 205 | 2010 |
| QZ -6XXX | BAJAJ | AR4S-UG | 2010 |
| AAZ -3XXX | BAJAJ | RE | 2015 |

வாகன பரிசீலித்தல்களுக்கு:
**மேர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சி**
வாகன முற்றம் - இல.176, வாவி வீதி, மஹரகம.
தொ.பேசி : 0112 088 505

**வாகன பரிசீலித்தல்களுக்கான திகதிகள்**

மேற்குறிப்பிட்ட விலாசத்தில் 2022 செப்டம்பர் 26ஆம், 27ஆம், 28ஆம், மற்றும் 29ஆம் திகதிகளில் மு.ப.9.00 முதல் பி.ப.5.00 வரை பரிசீலிக்க முடியும். (கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படுவது 2022 செப்டம்பர் 29ஆம் திகதி பி.ப.5.00 மணியுடன் நிறைவுபெறும்)

மீளப் பெற முடியாத கட்டணமான ரூ.200/-ஐ செலுத்தி கேள்வி படிவங்களை மேற்குறித்த விலாசத்தில் மேர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சி வாகன முற்றத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். வெற்றிகரமான கேள்விதாரர் தொலைபேசியூடாக அறிவிக்கப்படுவதுடன் அதனுடன் தொடர்பான வாகனம் அறிவிக்கப்பட்டதிலிருந்து 7 நாட்களுக்குள் அப்புறப்படுத்தப்பட வேண்டும்.

கேள்வியிலிருந்து எந்தவொரு காரணத்தையும் கூறாமல் எந்தவொரு வாகனத்தையும் விலக்கிக் கொள்ள கம்பனிக்கு பூரண உரிமையுண்டு. அத்தோடு வெற்றிகரமான கேள்விதாரர் வாகனத்தை அதன் தற்போதைய நிலையிலேயே பொறுப்பேற்க வேண்டியதோடு, அதனுடன் தொடர்பான அரச வரி மற்றும் வாகன வருமான உத்தரவுப் பத்திரம் போன்றவற்றின் நிலுவைக் கட்டணங்கள் இருப்பின் அவற்றையும் கேள்விதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

**இக் கேள்வியின் தொடர்பான மேர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சி இன் முடிவுகளே இறுதியானதாகும்.**

**மேர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சி**

தலைமை அலுவலகம்
236, காலி வீதி, கொழும்பு - 03
தொ.பேசி: 2343720 - 7 பேக்ஸ்: 210

Mercantile Investments and Finance PLC

தொடர்பு:
**ஜானக்க - 071 1624559 / மொதித - 071 9530350**


Marriage Proposals in the Sunday Observer Is the best way to fulfil your Future Dreams


# இலங்கை திரிபோஷ லிமிடட்

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### இலங்கை திரிபோஷ லிமிட்டடிற்கு 750 கிராம் பொதி – 60,000 கி.கிராம் அச்சடிக்கப்பட்ட ரீல் வகையான பொதியிடல் பொருட்களை (பொதியிடும் பொருட்கள் 12 PET/12MET PET/40L.LDPE) வழங்குதல்

**விலைமனு இல. SLTL/MKT/08/2022**

1. இலங்கை திரிபோஷ லிமிட்டடிற்கு 750 கிராம் பொதி - 60,000 கி.கிராம் அச்சடிக்கப்பட்ட ரீல் வகையான பொதியிடல் பொருட்களை (பொதியிடும் பொருட்கள் 12 PET/12MET PET/40L.LDPE) வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை திரிபோஷ லிமிட்டடின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் (மேல்நிலை) அழைக்கின்றார்.
2. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல் நடைமுறை ஊடாக, விலைமனுச் செயற்பாடானது மேற்கொள்ளப்படும்.
3. ஆர்வங்காட்டும் விலைமனுதாரர்கள் இலங்கை திரிபோஷ லிமிட்டடின் சிரேஷ்ட முகாமையாளரிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி: +94-0112236588) மற்றும் பின்வரும் முகவரியில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மற்றும் பி.ப. 3.00 மணிக்கிடையே விலைக்கோரல் ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
4. இந்தப் பெறுகையில் பங்குபற்றும் தகுதியைப் பெற்றுள்ள இலங்கைச் சந்தைக்கு அச்சடிக்கப்பட்ட ரீல் வகையான பொதியிடல் பொருட்களை (12 PET/12MET PET/40L.LDPE) வழங்கும் உற்பத்தியாளர்கள் அல்லது ஏக நியமன முகவர்கள் / உற்பத்தியாளர்களினால் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களுக்கு மட்டுமே விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும். வெளிநாட்டு முதன்மையாளர்களினால் நியமன முகவர்கள் / அங்கீகரிக்கப்பட்ட இலங்கை முகவர்களாக நியமிக்கப்படாதவர்களின் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
5. ஆர்வங்காட்டும் விலைமனுதாரர்கள் பின்வரும் முகவரிக்கு பொது ஒப்பந்தங்கள் பதிவாளரினால் வழங்கப்படும் PCA3 சதிதம் மீளளிக்கப்படாத கட்டணமாக 33,000.00 ரூபா ரொக்கப் பணத்தை ஜா-எல, கப்புவத்த, த.பெ. இல. 17, நீர்கொழும்பு வீதி, இலங்கை திரிபோஷ லிமிட்டடின் சிரேஷ்ட முகாமையாளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றையும் செய்தன் பேரில் 2022-10-17ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணங்களின் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
6. விலைமனுக்கள் 2022-10-18ஆம் திகதி பி. ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு ஒப்படைக்கப்படல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 2022-10-18ஆம் திகதி முதல் 2023-01-17ஆம் திகதி வரையான 91 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும்.
7. அனைத்து விலைமனுக்களும் 2,790,000.00 ரூபா தொகைக்கான 2022-10-18ஆம் திகதி முதல் 2023-02-14ஆம் திகதி வரையான 119 நாட்கள் செல்லுபடியாகும் மத்திய வங்கியால் அனுமதிக்கப்படும் இலங்கையில் தொழிற்படும் ஒரு வர்த்தக வங்கியால் வழங்கப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
8. மேற்குறிப்பிடப்பட்ட நேரத்தில் (2022-10-18ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு) விலைமனுதாரர்களின் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் பின்வரும் முகவரியில் உடனடியாக விலைமனுக்கள் திறக்கப்படும்.

**மேற்குறிப்பிடப்பட்ட முகவரியானது:**

**தலைவர்,**
**மேல்நிலை பெறுகைக் குழு,**
**இலங்கை திரிபோஷ லிமிட்டட்,**
**த. பெ. 17, நீர்கொழும்பு வீதி,**
**கப்புவத்த, ஜா-எல.**

# இலங்கை திரிபோஷ லிமிடட்

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### இலங்கை திரிபோஷ லிமிட்டடிற்கு 250 கிராம் பொதி – 60,000 கி.கிராம் அச்சடிக்கப்பட்ட ரீல் வகையான பொதியிடல் பொருட்களை (பொதியிடும் பொருட்கள் 12 PET/12MET PET/40L.LDPE) வழங்குதல்

**விலைமனு இல. SLTL/MKT/07/2022**

1. இலங்கை திரிபோஷ லிமிட்டடிற்கு 250 கிராம் பொதி - 60,000 கி.கிராம் அச்சடிக்கப்பட்ட ரீல் வகையான பொதியிடல் பொருட்களை (பொதியிடும் பொருட்கள் 12 PET/12MET PET/40L.LDPE) வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை திரிபோஷ லிமிட்டடின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் (மேல்நிலை) அழைக்கின்றார்.
2. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல் நடைமுறை ஊடாக, விலைமனுச் செயற்பாடானது மேற்கொள்ளப்படும்.
3. ஆர்வங்காட்டும் விலைமனுதாரர்கள் இலங்கை திரிபோஷ லிமிட்டடின் சிரேஷ்ட முகாமையாளரிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி: +94-0112236588) மற்றும் பின்வரும் முகவரியில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மற்றும் பி.ப. 3.00 மணிக்கிடையே விலைக்கோரல் ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
4. இந்தப் பெறுகையில் பங்குபற்றும் தகுதியைப் பெற்றுள்ள இலங்கைச் சந்தைக்கு அச்சடிக்கப்பட்ட ரீல் வகையான பொதியிடல் பொருட்களை (12 PET/12MET PET/40L.LDPE) வழங்கும் உற்பத்தியாளர்கள் அல்லது ஏக நியமன முகவர்கள் / உற்பத்தியாளர்களினால் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களுக்கு மட்டுமே விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும். வெளிநாட்டு முதன்மையாளர்களினால் நியமன முகவர்கள் / அங்கீகரிக்கப்பட்ட இலங்கை முகவர்களாக நியமிக்கப்படாதவர்களின் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
5. ஆர்வங்காட்டும் விலைமனுதாரர்கள் பின்வரும் முகவரிக்கு பொது ஒப்பந்தங்கள் பதிவாளரினால் வழங்கப்படும் PCA3 சதிதம் மீளளிக்கப்படாத கட்டணமாக 33,000.00 ரூபா ரொக்கப் பணத்தை ஜா-எல, கப்புவத்த, த.பெ. இல. 17, நீர்கொழும்பு வீதி, இலங்கை திரிபோஷ லிமிட்டடின் சிரேஷ்ட முகாமையாளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றையும் செய்தன் பேரில் 2022-10-17ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணங்களின் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
6. விலைமனுக்கள் 2022-10-18ஆம் திகதி பி. ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு ஒப்படைக்கப்படல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 2022-10-18ஆம் திகதி முதல் 2023-01-17ஆம் திகதி வரையான 91 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும்.
7. அனைத்து விலைமனுக்களும் 2,880,000.00 ரூபா தொகைக்கான 2022-10-18ஆம் திகதி முதல் 2023-02-14ஆம் திகதி வரையான 119 நாட்கள் செல்லுபடியாகும் மத்திய வங்கியால் அனுமதிக்கப்படும் இலங்கையில் தொழிற்படும் ஒரு வர்த்தக வங்கியால் வழங்கப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
8. மேற்குறிப்பிடப்பட்ட நேரத்தில் (2022-10-18ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு) விலைமனுதாரர்களின் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் பின்வரும் முகவரியில் உடனடியாக விலைமனுக்கள் திறக்கப்படும்.

**மேற்குறிப்பிடப்பட்ட முகவரியானது:**

**தலைவர்,**
**மேல்நிலை பெறுகைக் குழு,**
**இலங்கை திரிபோஷ லிமிட்டட்,**
**த. பெ. 17, நீர்கொழும்பு வீதி,**
**கப்புவத்த, ஜா-எல.**

## கல்வி அமைச்சு

## இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம்

# பெறுகை அறிவித்தல்

## 2022/2023ஆம் வருடங்களில் பாதுகாப்பு சேவை ஏற்பாட்டிற்கான விலைக்கோரல்கள்

**விலைமனு இல.: NERDC/DPC Minor (S)/03/22**

01. NERD நிலையத்திற்கு பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காக பாதுகாப்பு அமைச்சுடன் பதிவுசெய்யப்பட்ட பாதுகாப்பு நிறுவனங்களிடமிருந்து இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் (இலங்கை NERD நிலையம்) சார்பில் திணைக்கள பெறுகைக் குழு தலைவரினால் 2022.10.13ஆம் திகதி பி.ப. 2.00 வரை முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**அடிப்படை தேவைகள்:**

I. நிறுவனமானது 2022/2023ஆம் வருடத்தில் பாதுகாப்பு அமைச்சின் சிவில் பாதுகாப்பு பிரிவில் பதிவு செய்திருத்தல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்களுடன் சேர்த்து பாதுகாப்பு அமைச்சிலிருந்து பெறப்பட்ட செல்லுபடியான உரிமத்தின் பிரதி ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

II. பாரிய அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், நிர்வாகங்கள் அல்லது தனியார் அமைப்புகளுக்காக வெற்றிகரமாக பாதுகாப்பு சேவையை வழங்கியதில் (2019, 2020 மற்றும் 2021 உட்பட) குறைந்தது மூன்று ஆண்டுகள் அனுபவம் பெற்றவர்கள் மாத்திரமே விலைமனுவுக்கு தகுதி பெறுவர்.

III. சம்பளச் சபை சட்டம், ஊ.சே.நி. மற்றும் ஊ.ந.நி. இன் கீழ் தமது ஊழியர்களுக்கு ஊதியத்தை வழங்கும் தேவைகளை விலைமனுதாரர்கள் உறுதி செய்ய வேண்டும் என்பதோடு, அதற்காக விலைமனுவுடன் கடந்த 02 ஆண்டுகள் ஆவண அத்தாட்சியை சமர்ப்பித்தல் வேண்டும்.

02. மீளளிக்கப்படாத கட்டணமாக 2,300.00 ரூபாவைச் செலுத்தியதன் பின் 2022-09-26ஆம் திகதி முதல் 2022-10-12ஆம் திகதி வரையான சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையான காலத்தில் வழங்கல் அலுவலகத்திலிருந்து விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

03. விலைமனு திறக்கப்படும் நேரத்தில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்பதற்கு அனுமதிக்கப்படுவர். விலைக்கோரல்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின் NERD நிலையம், நிதி – பணிப்பாளரின் அலுவலகத்தில் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.

04. விலைமனுக்களை தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கை NERD நிலையம், 2P/17B, IDB, கைத்தொழில் பேட்டை, ஏக்கல, ஜா-எல என்ற முகவரிக்கு முத்திரை பொறிக்கப்பட்ட உறையில் பதிவுத் தபால் மூலம் அனுப்புவதற்கு அல்லது NERD நிலையம், நிதி – பணிப்பாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், "விலைக்கோரல் இல.: NERDC/DPC Minor (S)/03/22 – பாதுகாப்பு சேவை ஏற்பாடு" 2022.10.13ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் திறக்க வேண்டாம்" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

05. தமது தகைமையை நிரூபிக்கும் அத்தாட்சி ஆவணம் மற்றும் வர்த்தகக் கடிதத் தாள் ஒன்றில் ஆவணங்களுக்கான கோரிக்கை கடிதத்தை சமர்ப்பித்தால் மாத்திரமே விலைமனுதாரர்களுக்கு விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும்.

06. விரும்பினால் விலைமனு ஆவணங்களை பெறுவதற்கு முன்னர் அவைகளை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

**பணிப்பாளர் நாயகம்**
**இலங்கை NERD நிலையம்**
**2P/17B, IDB, கைத்தொழில் பேட்டை, ஏக்கல, ஜா-எல.**
**தொலைபேசி : 011-5852103, 011-2236284, 011-2236307**
**தொலைநகல் : 011-2233153, மின்னஞ்சல்: supplies@nerdc.lk**

# இன்டர்ஸ்ட்டை வெளிப்படுத்துவதற்கான கோரிக்கை

## பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு

## விவசாயத் துறை நவீனமயமாக்கல் திட்டம்

## கூறு: 1 விவசாய மதிப்பு சங்கிலி மேம்பாடு

பகுதி கடன் உத்தரவாத ஆலோசகர் - விவசாயத் துறை நவீனமயமாக்கல் திட்டத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட பகுதி கடன் உத்தரவாதத் (PCG) திட்டத்தின் மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு விவசாயத் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் விவசாய மதிப்பு சங்கிலி மேம்பாட்டுத் திட்டம் என்பது உலக வங்கியின் நிதியுதவியுடன் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டமாகும். இத் திட்ட அமுலாக்கம் 2017 இல் ஆரம்பிக்கப்பட்டு 30 ஜூன் 2023 அன்று முடிவடையும்.

பகுதி கடன் உத்தரவாதத் திட்டம், வேளாண் வணிக நிதியளிப்பில் உள்ள இடர்களைப் பகிர்ந்து கொள்வதற்கான திட்டத்தின் துணைக் கூறுகளில் ஒன்றாகும்.

பகுதி கடன் உத்தரவாதத் திட்டத்திற்கு தேவைகள் காணப்பட்ட போதும் அதற்கான தீர்வு மிகவும் கடினமானதாகவே காணப்பட்டது. எனவே, இக் கடன் பொறிமுறை செயலாக்கம் வெற்றிகரமாக காணப்படாமையாலும் ஒருபோதும் பயன்படுத்தப்படாததாலும் இந்த வகை கடன்திட்டம் விரைவில் ரத்து செய்யப்படும் சாத்தியம் காணப்பட்டது. எனவே, பகுதிக் கடன் உத்தரவாதத் திட்டம் ஏன் தோல்வியடைந்தது மற்றும் தனியார் முதலதனத்தைத் திரட்டுவதற்கு பயன்படுத்த கூடிய உத்திகள் யாவை என்பதைப் அறிந்து கொள்வதற்கு ஒரு ஆய்வு நடத்துவது முக்கியமான ஒன்றாக காணப்படுகின்றமையால் அதற்கான ஆய்வுகளை மேற்கொள்வதற்கு ASMP - VCD தீர்மானித்து அந்த ஆய்வுகளை நடாத்துவதற்கு தகுதியான தனிநபர்களிடமிருந்து விண்ணப்பங்களை கோருகின்றது.

பணியின் காலம்: ஆறு (06) வாரங்கள்

இந்த ஆய்வுப்பணியில் நீங்கள் இணைய ஆர்வமாக இருந்தால், இந்த பணிக்கான TOR மற்றும் விரிவான விண்ணப்ப மாதிரியை பெற்றுக்கொள்ள asmp.pd@gmail.com என்ற மின்னஞ்சல் மூலமாக கோரிக்கையை முன்வைக்கவும்

உங்களுடைய விருப்ப விண்ணப்பத்தினை பின்வரும் ஆவணங்கள் மற்றும் விவரங்களுடன் மின்னனு முறையில் அனுப்புவதாயின் asmp.pd@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது தபால் மூலமாகவோ நேரடியாகவோ அனுப்புவதாயின் கீழ் குறிப்பிட்ட முகவரிக்கு 12ம் திகதி அக்டோபர் மாதம் 2022 பிற்பகல் 3.00 மணிக்கு முன்னர் கிடைக்க கூடியதாக அனுப்பி வைக்கவேண்டும்.

விண்ணப்பத்தின் இடதுபுற மூலையில் PCG ஆலோசகர் எனக்குறிப்பிடவும்.

**சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்**

1. விரிவான சுயவிபரக்கோவை
2. துறைசார் அனுபவம், நிபுணத்துவம் போன்றவற்றை எடுத்துரைக்கும் ஒரு பக்க கடிதம்
3. பணிக்கான/ ஆய்வுக்கான அணுகுமுறையின் விளக்கம் (ஒரு பக்கம்)
4. எதிர்பார்க்கப்படும் ஆலோசனைக் கட்டணம்

**திட்டப் பணிப்பாளர்,**
**விவசாயத் துறை நவீனமயமாக்கல் திட்டம்,**
**16வது தளம், "சுஹுருபாய",**
**பத்தரமுல்ல.**
செப்டம்பர் 22, 2022


The easiest & convenient way to send your Marriage Proposal Ads, classified@lakehouse.lk
for 15 Words - Rs. 1,000/- For each additional word Rs. 25/-
Easy way to make your payment :- BOC - Acc.No. 000000377 LAKE HOUSE BRANCH
Green Light for Online Transfer
SUNDAY OBSERVER Marriage Proposals Decades of Trusted Service
For Inquiries - Piyumi - 011 2 429 383 | Ramani - 011 2 429 347 | Gayani - 011 2 429 342 / 343

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

# ஏலவிற்பனை அறிவித்தல்

## இலங்கை வங்கி

**1968ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டு 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 22ஆம் பிரிவின் (397ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்**

**கடன் வசதி தொடர்பு இலக்கங்கள்: 77854720 / 82405717**

**வெலிகம, கொஹுனுகமுவ, “வெதகெதர”, திரு. ஹேவா கொலபத்த துராகே கமல் கிஹான் கருணாரத்ன ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.**

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19ம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 25.10.2019ஆம் திகதி 2147ஆம் இலக்க வர்த்தமானியிலும் 10.10.2019ஆம் திகதி **“தினமின”, “டெய்லி நியூஸ்”, மற்றும் தினகரன்** ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26ன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் T&H ஒக்ஷன் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு. எம்.எச்.ரீ. கருணாரத்ன அவர்கள் 15.11.2022ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

BOC இலங்கை வங்கி
தேசத்தின் வங்கியாளர்

## ஏல விற்பனை அறிவித்தல்

## இலங்கை வங்கி

**1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் 22ஆம் பிரிவின் கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்**

கடன் தொடர்பு இலக்கங்கள்: 78427689, 83179218, 83986619
நடைமுறைக் கணக்கு இல. 73517789

இல. 189, அம்பாந்தோட்டை வீதி, வலவ்வ, அம்பலாந்தோட்டை என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. இமதுவ ஹேவாகெ அஜித் என்பவருக்குச் சொந்தமான ஈடு வைக்கப்பட்ட ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 19ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 2019.11.15ஆம் திகதிய 2150ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2019.11.01ஆம் திகதி தினமின, தினகரன் மற்றும் டெய்லி நியூஸ் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவையிலுள்ள முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் 22ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனத்தை இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த M/S T&H Auctions ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. எம்.எச்.ரி. கருணாரத்ன அவர்கள் 2022.11.14ஆம் திகதி பி.ப. 1.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

ஒடேகும்புர மலித்தங்கஹகும்புர, மலித்தங்கஹவத்த என அறியப்படும் டிங்கிரி எலபெத்த என்ற காணியின் 1016ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள ஒன்றிணைக்கப்பட்ட காணித்துண்டு 1 மற்றும் 1040ஆம் வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 1A என்பவற்றின் உரிமம் பெற்ற நில அளவையாளர் எச்.எச். தர்மதாச தயாரித்த 2013 ஏப்ரல் 10ஆந் திகதியிடப்பட்ட 3434ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு A என அடையாளமிடப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை நிர்ணயிக்கப்பட்டுள்ளதுமான காணியானது தென் மாகாணம், அம்பாந்தோட்டை மாவட்டம், அம்பாந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவு மற்றும் பிரதேச சபை எல்லைகளுள் வலவ்வ கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள மெதகம கிராமத்தில் அமைந்துள்ளதோடு குறித்த அக்காணித்துண்டு A **வடக்கில்** அதே காணியின் எஞ்சியுள்ள பகுதியையும் **கிழக்கில்** 1046ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டு 1Bஐயும் **தெற்கில்** அம்பலாந்தோட்டை - அம்பாந்தோட்டை பிரதான வீதியையும் **மேற்கில்** T.P. 135322ஐயும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. முப்பத்தைந்து தசம் ஐந்து பேர்ச்சுகள் (A0-R0-P35.5) பரப்பளவையும் அதன் கண் காணப்படும் மண், மரங்கள், தாவரங்கள், கட்டடங்கள் என அனைத்தையும் கொண்டுள்ள இக்காணி அம்பாந்தோட்டை காணிப் பதிகவத்தில் தொகுதி பக்கம் H 35/11இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி**

**இலங்கை வங்கி,**
**அம்பலாந்தோட்டை.**

**திரு. எச்.எம்.சி.எஸ். குமார,**
**முகாமையாளர்.**

## புத்தசாசனம், கலாசாரம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சு

## தேசிய சுவடிக்கூடத் திணைக்களம்

SLNA

## விலைக்கோரல் அறிவித்தல்

1. தேசிய சுவடிகூடத் திணைக்களத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் 2022/2023ஆம் வருடத்தில் இந்த நிறுவனத்தின் சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்வதற்கு தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

2. விலைமனு ஆவணக் கட்டணமாக மீளளிக்கப்படாத 1000.00 ரூபா வைப்பை நிறுவனத்தின் கணக்காளருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்தி நிறுவனத்தின் நிர்வாகப் பிரிவிலிருந்து 2022-09-26ஆம் திகதி முதல் 2022.10.25ஆம் திகதி வரையான வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை விலைமனுக்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

3. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் 2022.01.25 ஆம் திகதி பி.ப. 2.00 மணியாகும். அந்நேரத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்ததன் பின் அவைகளைத் திறப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

4. உங்களது விலைமனுக்களை இரு பிரதிகளில் தயாரித்து முத்திரைக் குறி பொறித்த உறையில் உள்ளிட்டு மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி எனக் குறிப்பிட்டு உறையின் இடதுபக்க மேல் மூலையில் திணைக்களத்தின் சிற்றுண்டிச்சாலையை நடாத்திக்கொண்டு செல்லல் 2022/2023 எனக் குறிப்பிட்டு 2022.10.25 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் கணக்காளர், தேசிய சுவடிகூடத் திணைக்களம், இல. 07, பிலிப் குணவர்தன மாவத்தை, கொழும்பு -07 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும்.

**தலைவர் - பெறுகைக் குழு,**
**தேசிய சுவடிக்கூடத் திணைக்களம்,**
**இல. 07, பிலிப் குணவர்தன மாவத்தை,**
**கொழும்பு -07.**

**தொலைபேசி: 011 2696917, 011 2696072**

## பெறுகை அறிவித்தல்

**புடவைக் கைத்தொழில் திணைக்களம்**

## கைத்தறி நெசவுத் தொழில் கண்காட்சி விற்பனை சந்தை மற்றும் விருது வழங்கல் விழா – 2022

2022 டிசம்பர் 02, 03, 04 ஆகிய மூன்று தினங்களில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள கைத்தறி நெசவுத் தொழில் கண்காட்சி விற்பனை சந்தை மற்றும் விருது வழங்கல் விழாவிற்கு கீழ்க்காணும் சேவைகளை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

01) வெளிப்புற கவரைத் தயாரித்தல் (150 x 60 அடி)
02) விற்பனைக் கூடங்கள் 40ஐ அமைத்தல்
03) 132 விருதுகளை தயாரித்தல்
04) முன்பக்கம் நுழைவுத் தோரணம் அமைத்து பொருத்துதல்
05) ஒலிபெருக்கி வசதிகள் மற்றும் மின் அலங்காரம் மேற்கொள்ளல்
06) வீடியோ படமெடுத்தல் மற்றும் புகைப்படமெடுத்தல் (விழா நிகழ்வுகள் விற்பனை சந்தை மற்றும் கண்காட்சி)
07) அச்சு விடயங்கள் (அழைப்பிதழ் 150 (உறையுடன்)/அனுமதிப் பத்திரம் 270/ சான்றிதழ் அச்சிடல் 186/ நினைவுப் படிகம் 200/ பின்னணி அமைத்தல் 01)
08) டிஜிட்டல் அச்சு பிரசார பலகைகள் 04
09) கண்காட்சி முகாமைத்துவம்
10) ஊடக பிரசார விடயங்கள் (அச்சு மற்றும் இலத்திரனியல்)

01) 2022 செப்டம்பர் 26ம் திகதி முதல் 2022 ஒக்டோபர் 17 வரை (அரச விடுமுறை தினங்கள் தவிர்த்து) மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை 3ஆம் மாடி, செயலகக் கட்டிடம், மாளிகாவத்தை, கொழும்பு -10 முகவரியில் அமைந்துள்ள தலைமையகத்தில் கேள்வி விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
02) 2022 ஒக்டோபர் 18ம் திகதி பி.ப. 2.00 இற்கு முன் பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி விண்ணப்பங்களை மேற்படி முகவரிக்குப் பதிவுத்தபாலில் கிடைப்பதற்கு செய்தல் அல்லது இந்த முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
03) 2022 ஒக்டோபர் 18 பி.ப. 2.00 இற்கு கேள்விப் பெட்டி பொறியிடப்படுவதுடன் பின்னர் கிடைக்கப் பெறும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
04) கேள்விகள் திறத்தல் 2022 ஒக்டோபர் 18ம் திகதி பி.ப. 2.00 இற்கு கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் அன்றைய தினம் வருகை தந்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
05) ஒவ்வொரு சேவை சார்பாகவும் வேறு வேறாக மீளளிக்கப்படாத ரூ. 1000.00 கேள்வி விண்ணப்பக் கட்டணம் அறவிடப்படும். அதற்கு மேலதிகமாக கண்காட்சி முகாமைத்துவம், விருதுகள் தயாரித்தல் மற்றும் வெளிப்புற கவர் அமைத்தல் போன்ற வேலைகளுக்காக ரூ. 10,000.00 மீளளிக்கப்படும் வைப்புத் தொகையும், விற்பனைக் கூடங்கள் அமைத்தல் முன்பக்க தேதரணம் அமைத்தல் ஒலிபெருக்கி வசதிகள் மற்றும் மின் அலங்காரங்கள் வழங்குதல், வீடியோ படமெடுத்தல் மற்றும் புகைப்படமெடுத்தல் அச்சு விடயங்கள் டிஜிட்டல் அச்சு பிரசார பலகைகள் 4 அமைத்தல் போன்ற வேலைகளுக்காக ரூ. 5,000.00 மீளளிக்கப்படும் வைப்புத் தொகையும் அறவிடப்படும். ஊடக பிரசாரம் (அச்சு மற்றும் இலத்திரனியல்) விடயங்களுக்கு வைப்புத் தொகை அறவிடப்பட மாட்டாது.
06) கேள்விகள் உள்ளடக்கப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் நெசவுத் கைத்தொழில் கண்காட்சி 2022 குறித்த சேவையின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும்.
07) ஒவ்வொரு சேவைக்கும் வேறு வேறாக கடித உறைகளைப் பயன்படுத்தல் வேண்டும்.
08) குறித்த சேவைகளை வழங்குதல் சம்பந்தமாக கேள்விதாரர்களின் அனுபவத்தை உறுதி செய்து கொள்வதற்கு குறித்த ஆவணங்களை விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் போது வழங்குதல் வேண்டும்.
09) உங்களால் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களுடன் வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதி மற்றும் வெட் வரியுடன் விலைமனுக்களை சமர்ப்பிப்பதாயின் வெட் வரி செலுத்துவதற்கான உள்நாட்டு வருமான ஆணையாளர் திணைக்களத்தினால் விநியோகிக்கப்படும் நாலதுவரைக்கு உற்படுத்தப்பட்ட வெட் வரி விடுத்தல் சான்றிதழின் பிரதியொன்றை இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் குறித்த சேவை சார்பான விலைமனுக்கள் இத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மாதிரிப் பத்திரத்திற்கு அமைவாக சமர்ப்பித்தல் கட்டாயமாகும்.

மேலதிக விபரங்களை தொ.பே. இல. 011 2322895ஐ அழைத்து பெற்றுக் கொள்ளலாம்.

முன் அறிவித்தல் இன்றி இப் பெறுகையை பிற்போடுதல் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் பெறுகைச் சபையின் தலைவருக்கு உரியது. இப் பெறுகை விடயங்கள் சம்பந்தமாக நெசவுத் தொழில் திணைக்களத்தின் பெறுகைச் சபையின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர் (பெறுகைக்குழு),**
**நெசவுக் கைத்தொழில் திணைக்களம்,**
**3ஆம் மாடி, செயலகக் கட்டிடம்,**
**மாளிகாவத்தை, கொழும்பு -10.**

## ஆர்வ வெளிப்பாட்டுக்கான கோரிக்கை

**(ஆலோசனை சேவைகள் - நிறுவனங்கள் தேர்வு)**

**கமத்தொழில் அமைச்சு**

**காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாயத் திட்டம் (CSIAP)**

| | | |
|---|---|---|
| **நாடு** | : | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு |
| **திட்டம்** | : | காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாயத் திட்டம் (CSIAP) |
| **கடன் இல.** | : | IDA 6346 LK |
| **ஒப்படைத் தலைப்பு** | : | உலக வங்கி நிதி அளிப்பின் கீழான காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தில் (CSIAP) மொனராகலை மையப் புள்ளி பகுதியில் விவசாய சுற்றுச்சூழல் நிலத்தோற்ற மீளாற்றல் திட்டம் ஒன்றை தயாரிப்பதற்கு ஆலோசனை சேவைகள் |
| **குறிப்பு இல.** | : | LK-MOA-309671-CS-CQS /PMU/Agro-ecological Landscape (01)/2022/02 |

காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் (CSIAP) செலவை நோக்கி உலக வங்கியிடம் இருந்து இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கு நிதி கிடைக்கப்பெற்றிருப்பதோடு அலோசனை சேவைகளுக்காக அந்த நிதியின் பகுதியை பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(a) மொனராகலை மாவட்டத்தின் மையப் புள்ளி பகுதியின் சுற்றுச்சூழல் பண்புகளை மீளாய்வு செய்தல் (b) நிலத்தோற்றத்திற்கு உட்பட்ட சூற்றுச்சூழல் பண்பு மற்றும் சமநிலையை தொடர்ந்து வடிவமைப்பது மற்றும் பிரச்சினை, அச்சுறுத்தல் மற்றும் மாற்றத்தின் இயக்கங்கள் ஆகியவற்றை அடையாளம் காணல் (c) முக்கிய சுற்றுச்சூழல் அமைப்பு சேவைகளின் HSA நிலத்தோற்றம் மற்றும் பொருளாதார பெறுமதிக்கு உட்பட்டு சிக்கலான சுற்றுச்சூழல் வலையமைப்புகளை அடையாளம் காணல் (d) கடந்த 10 ஆண்டுகளில் HEC இன் அளவை ஆய்வு செய்தல் (e) பாதிக்கப்படக்கூடிய குழுக்களின் தாக்கங்கள் உட்பட சமூக வாழ்வு மற்றும் வாழ்வாதாரங்களில் HEC இன் சமூக தாக்கங்கள் பற்றிய புரிதல் (f) HSA நிலத்தோற்றத்தில் முக்கிய பங்குதாரர் குழுக்களை அடையாளம் காணல், எதிர்கால நிலப் பயன்பாடு தொடர்பில் அவர்களின் ஆர்வம் மற்றும் செல்வாக்கு அளவை மதிப்பீடு செய்தல் மற்றும் HSA நிலத்தோற்றத்தின் காலநிலை மீள்திறன் மேம்பாட்டுக்கு பாதுகாப்பு மற்றும் உற்பத்தி நிலத்தின் நடைமுறைகளை பயன்படுத்துவதற்கு இடையே சிறந்த நல்லிணக்கத்தை வளர்ப்பதற்காக தம்மை ஈடுபடுத்துவதன் தேவையை அடையாளம் காணல் (g) பொருத்தமான நிலத்தோற்ற அளவு முகாமைத்துவ மூலோபாயங்கள் முதலியவற்றை அடையாளம் காணல் மற்றும் (h) முன்மொழியப்பட்ட மொனராகலை மாவட்ட விவசாய மையப் புள்ளிப் பகுதிக்காக காலநிலை ஸ்மார்ட் தலையீடு ஒன்றாக விவசாய சுற்றுச்சூழல் நிலத்தோற்ற மீள்திறன் திட்டம் ஒன்றை (ALRP) மேம்படுத்தல் ஆகியவை இந்த ஆலோசனை சேவைகளில் உள்ளடங்கும்.

ஆர்வமுடைய ஆலோசகர்கள் www.csiap.lk, www.agrimin.gov.lk என்ற இணையதள முகவரிகளில் விரிவான குறிப்பு விதிகளை இலவசமாக தரவிறக்கம் செய்யலாம் அல்லது வேலை நாட்களில் 9.00 மணி தொடக்கம் 16.00 மணி வரை பெறுகை நிபுணர், திட்ட முகாமைத்துவ பிரிவு, காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாயத் திட்டம் (CSIAP), இல.: 61/1, எம்.டி.எச் ஜயவர்தன மாவத்தை, மதின்னகொட, ராஜகிரிய என்ற முகவரியில் அதனை பெற முடியும்.

காலம்/ ஒப்படையின் காலம்/ ஒப்பந்தம்: 24 வாரங்கள்

சேவைகளை வழங்க தமது ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கு தகுதியுடைய ஆலோசனை நிறுவனங்களுக்கு ("ஆலோசகர்கள்") கமத்தொழில் அமைச்சை பிரதிநிதித்துவப்படுத்தும் காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் (CSIAP) திட்ட முகாமைத்துவ பிரிவினால் (PMU) தற்போது அழைப்பு விடுக்கப்படுகிறது. ஆர்வமுடைய ஆலோசகர்கள் சேவைகளை மேற்கொள்வதற்கு தேவையான தகைமைகள் மற்றும் அது சார்ந்த அனுபவத்தை பெற்றிருப்பதை வெளிப்படுத்தும் விபரத்தை வழங்குவது அவசியமாகும். ஆர்வ வெளிப்பாட்டுக்கான அளவுகோலின் குறுகிய பட்டியல்:

1. மையப் புள்ளி பகுதியில் விவசாய சுற்றுச்சூழல் நிலத்தோற்ற மீளாற்றல் திட்டங்களில் தயார்படுத்தல் சார்ந்த அனுபவங்கள்
2. ஆலோசகர் குறைந்தது கடந்த ஐந்து (05) ஆண்டுகளுக்காக இந்த பணியில் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
3. ஆலோசகர் போதுமான நிதி நிலை மற்றும் 10 மில். இலங்கை ரூபா பெறுமதிக்கு சமர்ப்பிக்கும் திரவச் சொத்துகளின் கிடைக்கும் தன்மையின் திறனை நிரூபித்தல் வேண்டும்.
4. ஆலோசகர் குறைந்தது 20 மில். இலங்கை ரூபாவின் மொத்த பெறுமதி, இதனை ஒத்த பண்புடைய குறைந்தது இரண்டு (02) ஒப்பந்தங்களை நிறைவு செய்திருத்தல் வேண்டும்.
5. அமைப்பு ரீதியான கட்டமைப்பு
6. ஒப்படையை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்கு தேவையான தகைமைகள், தொழில்நுட்ப மற்றும் தொழில்முறை திறனுடனான ஆளணி (சுயவிபரக் கோவை வழங்க வேண்டிய தேவை இல்லை)

உலக வங்கியின் ஆர்வ முரண் கொள்கைக்கு அமைய ("ஆலோசனை வழிகாட்டல்கள்") உலக வங்கி கடன் பெற்றவர்கள் மூலம் (IBRD கடன்கள் மற்றும் IDA கடன்கள் மற்றும் மானியங்களின் கீழ்) ஆலோசகர்களின் தேர்வு மற்றும் பணியமர்த்தலின், உலக வங்கியின் வழிகாட்டல்களின் 1.9 பந்தியில் வரையப்பட்டவை ஆர்வமுடைய ஆலாசகர்களின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

தமது தகைமையை மேம்படுத்துவதற்கு ஆலோசகர்கள் ஏனைய நிறுவனங்களுடன் கூட்டு முயற்சி அல்லது துணை ஆலோசனையில் இணையலாம்.

ஆலோசகர் வழிகாட்டலில் நிர்ணயிக்கப்பட்ட CQS (ஆலோசகர் தகைமை தேர்வு) முறைக்கு அமைய அலோசகர் ஒருவர் தேர்வு செய்யப்படுவார்.

2022 செப்டெம்பர் 26 ஆம் திகதி தொடக்கம் 2022 ஒக்டோபர் 10ஆம் திகதி வரை 9.00 மணி தொடக்கம் 15.00 மணி வரையில் (உள்ளூர் நேரம்) அலுவலக நேரங்களில் கீழுள்ள முகவரியில் மேலதிக விபரங்களை பெற முடியும்.

ஆர்வ வெளிப்பாடானது 2022 ஒக்டோபர் 10ஆம் திகதி 15.00 மணிக்கு (உள்ளூர் நேரம்) கீழுள்ள முகவரியில் நேரடியாக வந்து அல்லது மின்னஞ்சல் மூலமாக எழுதப்பட்ட வடிவத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**பொறியியலாளர் ஆர்.எம்.பி. ராஜகருணா**
**திட்டப் பணிப்பாளர்**
**காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் (CSIAP)**
**இல.: 61/1, எம்.டி.எச். ஜயவர்தன மாவத்தை, மதின்னகொட, ராஜகிரிய.**
**தொ.: +94112053252 மற்றும்/ அல்லது +940112871293**
**தொலைநகல் : +94112053167**
**மின்னஞ்சல் : pdcsiap@gmail.com மற்றும்/ அல்லது ps.pmu@csiap.lk**

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## இலங்கை புகையிரத சேவைகள்

**களனிவெளி பாதைக்கு (K V Line) புகையிரதப் பாதை தண்டவாளங்களைப் பரீட்சிப்பதற்கு EN 45 E1 தண்டவாளங்களுக்கான 4000 எண்ணிக்கையான குறைந்த உயரமுடைய கொங்கிறீட் சிலிப்பர்களை வழங்குவதற்கான பெறுகை**

**பெறுகை இல. SRS/F.7880**

01. இலங்கை புகையிரத சேவைகள் திணைக்களக் கொள்வனவுக் குழு (மேஜர்) தவிசாளர், களனிவெளி பாதைக்கு புகையிரதப் பாதை தண்டவாளங்களைப் பரீட்சிப்பதற்கு EN 45 E1 தண்டவாளங்களுக்கான 4,000 எண்ணிக்கையான குறைந்த உயரமுடைய கொங்கிறீட் சிலிப்பர்களை கொள்வனவு செய்வதற்காக முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை உள்நாட்டு தயாரிப்பாளர்கள்/ வழங்குநர்களிடமிருந்து பெற்றுக்கொள்வார்.
02. சர்வதேச போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல் மூலம் விலைமனுச் செயற்பாடானது நடாத்தப்படும்.
03. கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியிலிருந்து 2022-09-26ஆம் திகதி முதல் 2022-10-20ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடிவதுடன் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்),
புகையிரத பெறுகைகள் உப திணைக்களம்,
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு-10. இலங்கை.
தொலைபேசி : 94 (11) 2438078 அல்லது 94 (11) 2436818
தொலைநகல் : 94 (11) 2432044
மின்னஞ்சல் : srs.slr@gmail.com
இணையதளம் : www.railway.gov.lk

04. விலைமனுதாரர்கள் கடந்த ஐந்து வருடங்களில் இலங்கை புகையிரத சேவைக்கு 5,000 எண்ணிக்கைக்கும் மேற்பட்ட கொங்கிறீட் சிலிப்பர்களை வழங்கியிருத்தல் அல்லது 50 மில்லியன் ரூபாவிற்கும் மேற்பட்ட பெறுமதியுடைய முன் வலுவூட்டப்பட்ட கொங்கிறீட் தூண்கள் வழங்கியிருத்தல் அல்லது 500 மில்லியன் ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதியுடைய முன் வலுவூட்டப்பட்ட கொங்கிறீட் கம்பங்களை வழங்கியிருத்தல் வேண்டும் என்பதுடன் விலைப்பட்டியல்களின் பிரதிகளையும் (Copies of invoices) இணைத்தல் வேண்டும்.
05. மீளளிக்கப்படாத கட்டணமாக 30,500.00 ரூபாவை செலுத்துவதன் பேரில் 2022-09-26ஆம் திகதி முதல் 2022-10-20ஆம் திகதி வரை பி.ப. 3.00 மணி வரையில் இலங்கையில் கொழும்பு-10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத பெறுகைகள் உப திணைக்கள அலுவலகத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
06. சகல விலைமனுக்களுடனும் விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறியானது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் வழங்கப்பட்ட 1,700,000.00 ரூபா பெறுமதியுடைய நிபந்தனையற்ற உத்தரவாதமாகவிருத்தல் வேண்டும்.
07 விலைமனுக்கள் 2022-10-21ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் ஒப்படைக்கப்படல் வேண்டும் என்பதுடன் விலைமனுக்கள் முடிவுறுத்தல் நேரத்தின் பின் உடன் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுகைள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு (மேல்நிலை),**
**புகையிரத பெறுகைகள் உப திணைக்கள அலுவலகம்,**
**இலங்கை புகையிரத சேவைகள்,**
**ஒல்கொட் மாவத்தை, கொழும்பு-10. இலங்கை**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (மேல்நிலை),**
**இலங்கை புகையிரத சேவைகள்.**

Ref. No. SRS/F.7880

# கேள்வி அறிவித்தல்

## இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்

**கேள்வி இல.: 76/19.10.2022**

**PROCUREMENT OF HD/SD DIGITAL VIDEO PRODUCTION SWITCHER SYSTEMS FOR STUDIOS AND OUTSIDE BROADCASTING (OB) PRODUCTIONS OF SRI LANKA RUPAVAHINI CORPORATION**

பின்வருமாறு **HD/SD DIGITAL VIDEO PRODUCTION SWITCHER SYSTEMS FOR STUDIOS AND OUTSIDE BROADCASTING (OB) PRODUCTIONS OF SRI LANKA RUPAVAHINI CORPORATION** எனும் பெறுகைக்காக இலங்கை, கொழும்பு7, இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன பெறுகைக் குழுத்தலைவரினால் முத்திரையிடப்பட்ட கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 01 | HD/SD 2ME Digital Video Production Switcher system for OB Bus | 01 No. |
| 02 | HD/SD 1ME Digital Video Production Switcher system for OB Bus 01 & Dubbing Studio | 02 Nos. |
| 03 | HD / SD 1ME Digital Video Production Switcher system as a backup | 01 No. |
| 04 | HD / SD 2ME Digital Video Production Switcher system for Studio 1 & 3 | 02 Nos. |

உயர் தரத்திலான ஒலிபரப்பு உபகரணங்களின் உற்பத்தியாளர்கள், தரஅங்கீகாரம் பெற்ற முகவர்கள், அதிகாரமளிக்கப்பட்ட விநியோகஸ்தர்கள் மற்றும் வர்த்தகர்கள் இக்கேள்வியில் பங்குபெற்றலாம். 2022-10-18ஆம் திகதி அல்லது அதற்கு முன் இலங்கை, கொழும்பு-7, சுதந்திர சதுக்கம், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன உதவிப் பணிப்பாளருக்கு (பெறுகைகள்) எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியொன்றை பெற்றுக் கொள்ளலாம். கேள்வி ஆவணங்களின் தொகுதியொன்று வழங்கப்படுவதற்காக மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக 5000.00 ரூபாவை (ஐயாயிரம் ரூபா) இக்கூட்டுத்தாபன பிரதான கணக்காளரிடம் செலுத்துதல் வேண்டும். 2022-10-18ஆம் திகதி அல்லது அதற்கு முன்னராக கேள்வி ஆவணங்களை இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திலிருந்து அலுவலக நாட்களில் (வர்த்தக விடுமுறைகள் நீங்கலாக திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரையும்) மு.ப. 9.30 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையில் பெற்றுக் கொள்ளலாம். கேள்வி ஆவணங்களை இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன உதவிப் பணிப்பாளரின் (பெறுகைகள்) அலுவலகத்தில் இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.

கேள்வி ஆவணத்தில் நிர்ணயிக்கப்பட்டவாறு அனைத்துக் கேள்விகளுடனும் விலைமனுப் பிணையொன்று (வங்கி உத்தரவாதம்) இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

உற்பத்தியாளர்களின் சார்பாக இக்கேள்வியில் பங்குபெறுவதற்கு அதிகாரமளிக்கப்படுவதற்காக முதண்மையாளர்களினால் வழங்கப்பட்ட தரஅங்கீகார/அற்றோணித்தத்துவ கடிதமொன்றை சமர்ப்பிக்குமாறு முகவர்கள், அதிகாரமளிக்கப்பட்ட விநியோகஸ்தர்கள் மற்றும் வர்த்தகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

FOB விலையில் முகவர் தரகுப்பணம் ஏதாவது உள்ளடக்கப்பட்டிருப்பின், அத்தொகையானது தனியாக காட்டப்படல் வேண்டும்.

2022-10-19ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு இலங்கை, கொழும்பு-7, சுதந்திர சதுக்கம், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன பெறுகைக் குழுத் தலைவரின் அலுவலகத்தில் கேள்விகள் மூடப்பட்டு உடனடியாகவே திறக்கப்படும்.

மேலதிக விபரங்கள் தேவைப்படின், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன பிரதி பணிப்பாளர் நாயகம் (பொறியியல்) அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி : + 94 112 580 136/ தொலைநகல் + 94 112 500373)

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்,**
**சுதந்திர சதுக்கம், கொழும்பு-07**

**இலங்கை. (SLRC Website : http://www.rupavahini.lk)**

---

கல்முனை மாநகர சபை

# குத்தகை கேள்வி கோரல் அழைப்பு – 2023

கல்முனை மாநகரசபைக்குட்பட்ட பொதுச் சந்தைகள், இறைச்சிக் கடைகள், வாகனத் தரிப்பிடங்கள் என்பவற்றுக்கான 2023ஆம் ஆண்டிற்கு குத்தகை விடுவதற்கான கேள்வி கோரல்கள் அழைக்கப்படுகின்றன.

| விடயம் | இடம் | குறியீட்டு இல | மீளளிக்கப் படாத கட்டணம் | கேள்வி வைப்பு | ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|---|
| **01. இறைச்சிக்கடைகள்** | | | | | |
| **I. மாட்டிறைச்சிக் கடைகள்** | | | | | |
| மாட்டிறைச்சிக் கடை இல-01 | கல்முனை பொதுச்சந்தை | KMC/K/BS/01 | 1,000.00 | 10,000.00 | 320,000.00 |
| மாட்டிறைச்சிக் கடை இல-02 | கல்முனை பொதுச்சந்தை | KMC/K/BS/02 | 1,000.00 | 10,000.00 | 320,000.00 |
| மாட்டிறைச்சிக் கடை இல-03 | பிரதானவீதி பள்ளியடி (கல்முனைக்குடி) | KMC/K/BS/03 | 1,000.00 | 10,000.00 | 320,000.00 |
| மாட்டிறைச்சிக் கடை இல-04 | நற்பிட்டிமுனை பொதுச் சந்தை | KMC/N/BS/04 | 1,000.00 | 10,000.00 | 320,000.00 |
| **II. ஆட்டிறைச்சிக் கடைகள்** | | | | | |
| ஆட்டிறைச்சிக் கடை இல-01 | கல்முனைபொதுச் சந்தை | KMC/K/MS/01 | 1,000.00 | 10,000.00 | 210,000.00 |
| ஆட்டிறைச்சிக் கடை இல-02 | நற்பிட்டிமுனை பொதுச் சந்தை | KMC/N/MS/02 | 1,000.00 | 10,000.00 | 160,000.00 |
| **II. கோழி இறைச்சிக் கடைகள்** | | | | | |
| கோழி இறைச்சிக் கடை இல-01 | கல்முனை பொதுச்சந்தை | KMC/K/CS/01 | 1000.00 | 5,000.00 | 100,000.00 |
| கோழி இறைச்சிக் கடை இல-02 | கல்முனை பொதுச்சந்தை | KMC/K/CS/02 | 1000.00 | 5,000.00 | 100,000.00 |
| கோழி இறைச்சிக் கடை இல-03 | பிரதான வீதி பள்ளியடி | KMC/KK/ CS/03 | 1000.00 | 5,000.00 | 100,000.00 |
| கோழி இறைச்சிக்கடை இல-04 | நற்பிட்டிமுனை பொதுச் சந்தை | KMC/N/CS/04 | 1000.00 | 5,000.00 | 100,000.00 |
| **02. சந்தைகள்** | | | | | |
| **I. பொதுச் சந்தைகள்** | | | | | |
| கல்முனை பொதுச் சந்தை | கல்முனை நகர் | KMC/K/PM/01 | 1,000.00 | 25,000.00 | 4,900,000.00 |
| நற்பிட்டிமுனை பொதுச் சந்தை | நற்பிட்டிமுனை | KMC/N/PM/02 | 1,000.00 | 15,000.00 | 300,000.00 |
| **II. மீன் சந்தை** | | | | | |
| மீன் சந்தை | கல்முனை பொதுச்சந்தை | KMC/K/FM/01 | 1,000.00 | 25,000.00 | 1,100,000.00 |
| **03. வாகனத் தரிப்பிடங்கள்** | | | | | |
| வாகனத் தரிப்பிடம் - துவிச்சக்கரவண்டி | கல்முனை பொதுச்சந்தை | KMC/KPM/ VP/01 | 1,000.00 | 25,000.00 | 1,645,000.00 |
| வாகனத் தரிப்பிடம் - துவிச்சக்கரவண்டி தவிர்ந்த | கல்முனை பொதுச்சந்தை | KMC/KPM/ VP/02 | 1,000.00 | 25,000.00 | 1,900,000.00 |
| வாகனத் தரிப்பிடம் - அனைத்து வாகனங்களும் | கல்முனை ஸாஹிறா கல்லூரி வீதியின் வடக்கு–தாளவட்டான் வீதியின் தெற்கு | KMC/KK/ VP/03 | 1,000.00 | 25,000.00 | 1,750,000.00 |
| வாகனத் தரிப்பிடம் - கடற்கரை தவிர்ந்த அனைத்து வாகனங்களும் | கல்முனை தாளவட்டான் வீதியின் வடக்கு – பெரிய நீலாவனை வீதியின் தெற்கு | KMC/MM/ VP/04 | 1,000.00 | 25,000.00 | 1,050,000.00 |
| வாகனத் தரிப்பிடம் - அனைத்து வாகனங்களும் | கல்முனை நகர் ஐக்கிய சதுக்கம் | KMC/K/ VP/05 | 1,000.00 | 15,000.00 | 300,000.00 |
| வாகனத் தரிப்பிடம் | சாய்ந்த மருது (ஸாஹிறா கல்லூரி வீதியின் தெற்கு– மாளிகா வீதியின் வடக்கு) | KMC/S/VP/06 | 1,000.00 | 15,000.00 | 500,000.00 |

01. கேள்விகளுக்கான விண்ணப்பப் படிவங்களை வேலைநாட்களில் 2022.09.26 ஆம் திகதி முதல் 2022.10.10 ஆம் திகதி பி.ப.3.00 மணிவரை மாநகர சபையின் நிதிப்பிரிவில் பெற்றுக் கொள்வதோடு, கேள்வி வைப்புத் தொகையினையும் குறித்த காலப்பகுதியில் நிதிப்பிரிவில் செலுத்தி பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ள வேண்டும்.
02. முத்திரையிட்ட விலைமனுக்கள் 2022.10.12 ஆம் திகதி பி.ப 2.30க்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபாலில் அல்லது நேரடியாக மாநகர சபையின் முதல்வர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உரியவாறு சேர்ப்பிக்க வேண்டும். அதே தினம் பி.ப. 3.00 மணிக்கு அக்கேள்விகள் அனைத்தும் திறக்கப்படும்.
03. மேலதிக தகவல்கள் தேவைப்படின் மாநகர சபை ஆணையாளரின் 067-2229275 தொலைபேசி அல்லது கணக்காளரின் 067-2224588 தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.
04. முத்திரையிட்ட விலைமனுக்களின் இடதுபக்க மேல் மூலையில் தாங்கள் விண்ணப்பம் செய்யும் விலைமனுக்களின் குறியீட்டு இலக்கத்தினை அவசியமாக எழுதவேண்டும்.
05. தேர்வு செய்யப்பட்ட கேள்விதாரர்கள் கேள்வித் தொகையில் 60% ஐ பணமாகவும்,40% ஐ மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு வங்கியின் உத்தரவாதக் கடிதமாகவும் (Letter of Guarantee) மாநகர சபையின் முதல்வருக்கு முகவரியிட்டு சமர்ப்பிக்க வேண்டும்.
06. மேற்படி தெரிவு செய்யப்படும் கோள்விதாரர்கள் ஒருவார காலத்தினுள் நிபந்தனை 5இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயத்தை நிறைவேற்றி ஒப்பந்தம் ஒன்றினை கைச்சாத்திட வேண்டும். தவறும் பட்சத்தில் அவர்களின் கேள்வி நிராகரிக்கப்படும்.
07. ஒவ்வொரு குத்தகைக்கும் தனித்தனியான விண்ணப்பங்கள் கோரப்பட வேண்டும்.
08. எந்த ஒரு கேள்வி கோரலிலும் கேள்விச்சபையின் முடிவே இறுதியானதாகும்.

**சட்டத்தரணி ஏ.எம்.றகீப் LLB, JPUM**
**தலைவர் -கேள்விச்சபை**
**முதல்வர், கல்முனை மாநகர சபை**
**26-09-2022**

---

# நீர்கொழும்பு மாநகர சபை

## 2023ஆம் வருடத்திற்கான ஒப்பந்தக்காரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்தல்

நீர்கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரினால் 2023ஆம் வருடத்திற்காக பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் பொருட்டு பதிவு செய்து கொள்வதற்கு விரும்பும் தகைமை வாய்ந்த அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதிவு செய்து கொள்வதற்கான மாதிரிப் படிவங்கள் வழங்குதல் 2022-09-26ஆம் திகதி முதல் 2022-10-26ஆம் திகதி வரை அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை மாநகர கணக்காளர் திணைக்களத்தில் இடம்பெறும். விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளும் வேளையில் விண்ணப்பப் படிவக் கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணம் என்பவற்றைச் செலுத்துதல் வேண்டும்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பணம் வைப்புச் செய்யப்பட்ட பற்றுச்சீட்டுடன் 2022-10-28ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''ஒப்பந்தக்காரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2023'' எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கலாம். முகவரி:

மாநகர ஆணையாளர், மாநகர சபை, நீர்கொழும்பு.

மாநகர சபைக்குச் செலுத்தப்படும் சகல கொடுப்பனவுகளுக்கும் அரசாங்கத்தினால் அவ்வப்போது விதிக்கப்படும் வரிகளுக்கு உட்படும்.

ஒவ்வொரு விடயத்தின் பொருட்டும் வெவ்வேறாகப் பதிவுக் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் ''மாநகர ஆணையாளர், மாநகர சபை, நீர்கொழும்பு'' எனும் பெயரில் எழுதப்பட்ட காசுக் கட்டளை / வங்கிக் கட்டளை மூலம் அல்லது ரொக்கப் பணமாகக் கொடுப்பனவைச் செய்யலாம். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

| விடயம் | தொகை |
|---|---|
| கேள்வி மாதிரிப் படிவக் கட்டணம் | 100.00 |
| பதிவுக் கட்டணம் (மீளளிக்கப்படாதது) நிர்மாண ஒப்பந்தங்கள் தவிர்த்து | 3,000.00 |
| நிர்மாண ஒப்பந்தங்களுக்கான பதிவுக் கட்டணம் | 7,500.00 |

**நிபந்தனைகள்**

- வியாபாரமொன்றாகப் பதிவு செய்திருத்தல் வேண்டும். (வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றை விண்ணப்பத்துடன் இணைத்துச் சமர்ப்பித்தல் வேண்டும்)
- VAT வரிக்காகப் பதிவு செய்திருந்தால் பதிவுச் சான்றிதழின் சான்றுபடுத்திய பிரதியொன்றை விண்ணப்பத்துடன் இணைத்துச் சமர்ப்பித்தல் வேண்டும்.
- உற்பத்தியாளரற்ற சகல வழங்குநர்களும் அதிகாரம் வாய்ந்த வாடிக்கையாளர் அல்லது விநியோகஸ்தர் என்பதற்காக உற்பத்தியாளர் அல்லது இந்நாட்டில் அதிகாரம் வாய்ந்த நிறுவனமாக நடப்பாண்டுக்கு இயைபாக பெற்றுக்கொண்ட சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
- அரசாங்க பெறுகைகள் (பொருட்கள் மற்றும் வேலைகள்) 8.5.11ஆம் இலக்க அத்தியாயத்தின் பிரகாரம் நிபந்தனைகளை கடைபிடிக்காத வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களுக்கு பதிவிற்கான அனுமதி இல்லை.
- ஒப்பந்தக்காராகப் பதிவு செய்துகொள்ளும் விண்ணப்பதாரர்கள் நிர்மாணக் கைத்தொழில் மற்றும் அதிகார சபையின் (CIDA) பதிவுச் சான்றிதழைக் கொண்ட நிறுவனமாக அல்லது நபராகவிருத்தல் வேண்டும்.
- வாகன பராமரிப்பு சேவை மற்றும் ஒப்பந்தக்காரர்களாகப் பதிவு செய்தலின்போது மாநகரப் பொறியியலாளரின் பரிந்துரையின் பேரில் மேற்கொள்ளப்படும்.
- பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடம் விலைகள் கோரப்படுவதோடு தேவைப்படுமிடத்து பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களுக்குப் புறம்பாகவும் பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக வழங்குநர்களைத் தெரிவு செய்யும் உரிமையை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.
- பல்வேறுபட்ட பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குவதற்காக வழங்குநர்கள் தெரிவு செய்யும் உரிமையை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.
- அறிவிக்கப்பட்ட பின் குறிப்பிட்ட உரிய வகையில் விலைகளைச் சமர்ப்பித்து ஏற்றுக்கொண்ட விலைகள் மற்றும் தரங்களின் பிரகாரம் பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்கத் தவறும் விண்ணப்பதாரரின் பதிவு இரத்துச் செய்யப்படும்.
- விலைகளைச் சமர்ப்பித்ததன் பின் வழங்குவதற்குத் தேவையான அளவு கையிருப்பை வழங்குநர்கள் வைத்திருத்தல் வேண்டும்.
- பொருட்கள் வழங்குதல் சம்பந்தமாக மேலதிக நிபந்தனைகள் இடுவது அவசியம் எனத் தெரியவந்தால் அவ்வாறு செய்யும் உரிமையை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.
- பதிவு செய்து கொண்டதன் பின் எந்தவொரு விடயத்தின் கீழும் பொருள் வகைகளில் எவ்வித மாற்றமும் செய்ய முடியாது என்பதுடன் பொருட்களுக்கிடையில் மாற்றங்களைச் செய்ய முடியாது என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.
- விண்ணப்பதாரர்களால் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் போலியானால் முன்னறிவித்தலின்றி பதிவு இரத்துச் செய்யப்படும். அதேபோல் எவ்வகையிலும் பணம் மீளளிக்கப்படமாட்டாது என்பதைக் கவனத்திற் கொள்ளப்படும்.
- பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கியதன் பின் குறைந்தபட்சம் 60 நாட்கள் கடன் வசதியை வழங்குவதற்கு அனைத்து வழங்குநர்களும் சுயமாக இணங்குவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.
- மேலதிக விபரங்களை 031-2281987 எனும் தொலைபேசி இலக்கத்தில் பிரதான மாநகர கணக்காளர் அவர்களைத் தொடர்பு கொண்டு விசாரித்தறிந்துகொள்ளலாம்.
- இயைபுடைய பொருட்களுக்காக கட்டணத்தைச் செலுத்தியும் ஆனால் அவர் பதிவு செய்யப்படாதவராக இருந்தால் அக்கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது.
- பதிவு செய்து கொண்டதன் பின் நிபந்தனைகளை மீறும் வழங்குநர்கள் அல்லது ஒப்பந்தக்காரர்களின் பெயர் பதிவேட்டிலிருந்து அகற்றப்படும்.
- மாநகர ஆணையாளரினால் நியமிக்கப்படும் குழுவினால் இயைபுடைய நிறுவனங்கள் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குதல் தொடர்பான கொள்ளளவு பரிந்துரை பெற்றுக்கொள்ளப்படும் என்பதுடன் அக்குழுவினால் பரிந்துரை செய்யப்படாத நிறுவனங்கள் பதிவு செய்துகொள்ளப்பட மாட்டாது.

### பதிவு செய்து கொள்ளப்படும் பொருட்கள் வழங்கல் மற்றும் சேவை விடயப் பட்டியல் - 2023

A. **பொருட்கள் வழங்குதல்**

| இலக்கம் | விபரம் | இலக்கம் | விபரம் |
|---|---|---|---|
| A 01 | அலுவலக மரத்தளபாடங்கள் மற்றும் உருக்கு பொருட்கள் | A 16 | ஆற்றுமணல் (அனுமதிப் பத்திர உரிமையாளராக இருத்தல் வேண்டும்) |
| A 02 | கணனி மற்றும் கணனி துணைப்பாகங்கள், அச்சுப் பொறிகள் மற்றும் புகைப்படப் பிரதி இயந்திரங்கள் | A 17 | மண் மற்றும் கிரவல் (அனுமதிப் பத்திர உரிமையாளராக இருத்தல் வேண்டும்) |
| A 03 | விரல் ரேகை பதிவு இயந்திரங்கள் மற்றும் ஏனைய இலத்திரனியல் உபகரணங்கள் | A 18 | முன் வார்ப்பு கொங்கிறீட் |
| A 04 | வளிச்சீராக்கி இயந்திரம் | A 19 | அஸ்போல்ட் மற்றும் கொல்ட் மிக்ஸ் |
| A 05 | மின்சாரப் பொருட்கள் | A 20 | எரிவாயு மற்றும் எரிபொருள் |
| A 06 | கைத்தொழில் உபகரணங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் | A 21 | தார் மற்றும் கோலாஸ் |
| A 07 | திரைச்சீலைகள் மற்றும் கம்பளங்கள் | A 22 | மோட்டார் வாகனங்கள் மற்றும் டிராக்டர் உதிரிப்பாகங்கள் |
| A 08 | சீருடைகள் மற்றும் பாதணிகள் | A 23 | பெட்டறிகள் (வாகனங்களுக்கு) |
| A 09 | விளையாட்டு உபகரணங்கள் | A 24 | டயர்கள் மற்றும் டியூப்கள் |
| A 10 | எழுதுபொருட்கள் மற்றும் காகிதங்கள் | A 25 | கிறீஸ் மற்றும் உராய்வுநீக்கிகள் |
| A 11 | நூலகப் புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் பத்திரிகைகள் | A 26 | துப்புரவேற்பாட்டுப் பொருட்கள் |
| A 12 | அச்சு வேலைகள், பதாகைகள் மற்றும் ஸ்டிக்கர் அச்சிடுதல் மற்றும் ஞாபகச் சின்னங்களை வடிவமைத்தல் | A 27 | சேதனப் பசளை தொட்டிகள், குப்பைத் தொட்டிகள் மற்றும் திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்குத் தேவையான உபகரணங்கள் |
| A 13 | கனரகப் பொருட்கள் | A 28 | கிருமிநாசினிகள் மற்றும் கிருமிநாசினி உபகரணங்கள் (அனுமதிபத்திரம் உரித்துடையவராகவிருத்தல் வேண்டும்) |
| A14 | மரம், பலகை மற்றும் அரிந்த மரம் | A 29 | கால்நடை மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருத்துவ வழங்கல்கள், மருந்து வகைகள் |
| A 15 | கருங்கல் | A 30 | அச்சுக்கற்கள் |

B. **சேவைகள்**

| இலக்கம் | விடயம் |
|---|---|
| B 01 | கட்டிட பராமரிப்பு வேலை மற்றும் நிர்மாண ஒப்பந்தங்கள் |
| B 02 | மோட்டார் வாகன திருத்த வேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல் |
| B 03 | வாகன மின்னியல் சேவைகள் |
| B 04 | டிராக்டர்களின் திருத்தவேலைகள் |
| B 05 | டியூம் மற்றும் பெச் இடுதல் |
| B 06 | விளையாட்டு மைதான பராமரிப்பு |
| B 07 | அலுவலக மரத் தளபாடங்கள் மற்றும் உருக்கு கெபினட், அலுமாரி பராமரிப்புகள் |
| B 08 | கணனி மற்றும் கணனி துணைப்பாகங்கள், அச்சுப்பொறிகள் மற்றும் புகைப்படப் பிரதி இயந்திரங்களின் திருத்தவேலைகள் |
| B 09 | கணனி ஆலோசனை சேவைகள் |
| B 10 | கணனி வலையமைப்பு |
| B 11 | மின்சாரப் பொருட்களின் திருத்தவேலைகள் |
| B 12 | வளிச்சீராக்கி இயந்திர திருத்தவேலைகள் |
| B 13 | தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் |
| B 14 | மனிதவலு வழங்கல் |
| B 15 | பத்திரிகை அறிவித்தல்களைப் பிரசுரித்தல் |
| B 16 | மாநாடுகள் மற்றும் உற்சவங்களுக்கான உணவு பானங்களை வழங்குதல் |
| B 17 | உற்சவப் பொருட்கள் மற்றும் மின்னொளி சேவைகளை வழங்குதல் |

**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**நீர்கொழும்பு.**

# பவர் பிளயர் சம்பியன்



**கல்முனை மத்திய தினகரன் நிருபர்**

சினேகபூர்வ டி10 கிரிக்கெட் போட்டியில் பவர் பிளாஸ்டர் 89/91 அணியை வீழ்த்தி பவர் பிளயர் அணி கிண்ணத்தை கைப்பற்றியது.

கல்முனை சாஹிரா தேசிய பாடசாலை மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பவர் பிளயர் அணி 06 விக்கெட்டுகளை இழந்து 113 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பவர் பிளாஸ்டர் அணி 07 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 35 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. இப்போட்டியின் தொடர் நாயகனாக தாரிக் தெரிவானார்.

# ஒக். 1இல் டீடாட் சாஹிரா சுப்பர் 16 கால்பந்து தொடர்

**ருஸைக் பாரூக்**

கொழும்பு சாஹிரா கல்லூரியின் பழைய மாணவத் தலைவர்கள் அமைப்பினால் நடத்தப்படும் டீடாட் சாஹிரா சுப்பர் 16 கால்பந்து தொடர் தொடர்ந்து 16ஆவது முறையாக வரும் ஒக்டோபர் 1ஆம் திகதி நடைபெறவுள்ளது.

முன்னணி பாடசாலை கால்பந்துத் தொடராக வருடாந்தம் நடத்தப்படும் இந்தத் தொடரின் அனைத்துப் போட்டிகளும் கொழும்பு குதிரைப் பந்தய திடல் மைதானத்தில் நடைபெறவுள்ளன. நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமையை கருத்திற்கொண்டு, இம்முறை தொடர் மேல் மாகாண பாடசாலைகளுக்கிடையிலான மோதலாக இடம்பெறும் விதத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன்படி, மேல் மாகாணத்தின் 16 முன்னணி பாடசாலைகளின் கால்பந்து அணிகள் இம்முறை தொடரில் பங்கேற்கவுள்ளன.






இந்தப் போட்டி தொடர்பில் விளக்கம் அளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு சாஹிரா கல்லூரி கேட்போர் கூடத்தில் கடந்த வியாழக்கிழமை (22) நடைபெற்றபோது அனுசரணையாளர்கள் மற்றும் போட்டியில் பங்கேற்கும் அணியினர் அறிமுகம் செய்யப்பட்டனர். இந்தத் தொடருக்கு தொடர்ச்சியாக முதன்மை அனுசரணை வழங்கும் டீடாட் நிறுவனம் இம்முறையும் அனுசரணை வழங்குகிறது.

அணிக்கு 7 பேர் கொண்ட இந்தத் தொடரில் நடப்புச் சம்பியன் புனித ஜோசப் கல்லூரி, கடந்த முறை இரண்டாம் இடம் பிடித்த கேட்வே கல்லூரி, போட்டியை நடத்தும் கொழும்பு சாஹிரா கல்லூரியுடன் அல் ஹிக்மா கல்லூரி, அலிதியாசர்வதேசபாடசாலை, தாருஸ்ஸலாம் கல்லூரி, டி மெசனட் கல்லூரி, டி.எஸ் சேனநாயக்க கல்லூரி, இந்து கல்லூரி, இசிபத்தன கல்லூரி, லைசியம் சர்வதேச பாடசாலை, மரிஸ் டெல்லா கல்லூரி, றோயல் கல்லூரி, புனித தோமஸ் கல்லூரி, புனித பெனடிக்ட் கல்லூரி, வெஸ்லி கல்லூரி அணிகள் பங்கேற்கின்றன.

## சாய்ந்தமருது பிரதேச செயலக அணி வெற்றி

**சவளக்கடை குறூப் நிருபர்**



சாய்ந்தமருது பிரதேச செயலக அணிக்கும் சஹிரியன் 90கள் அணிக்குமிடையிலான சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டியில் பிரதேச செயலக அணி வெற்றி பெற்றது. அணிக்கு 11 பேர் கொண்ட10 ஓவர் மட்டுப்படுத்தப்பட்ட போட்டி நேற்று (25) சாஹிராக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய சஹிரியன் 90கள் அணி 10 ஓவர் நிறைவில் 4 விக்கெட் இழப்புக்கு 82 ஓட்டங்களை பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சாய்ந்தமருது பிரதேச செயலக அணி 9.5 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 84 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது.

# கிழக்கு மாகாண விளையாட்டு விழா: மட்டக்களப்பு சம்பியன்

**கிண்ணியா மத்திய நிருபர் கியாஸ், தம்பலகாமம் குறூப் நிருபர், கந்தளாய் தினகரன் நிருபர்**

47ஆவது தேசிய விளையாட்டு விழாவுக்கு இணையாக நடத்தப்பட்ட கிழக்கு மாகாண விளையாட்டு விழாவின் சம்பியனாக மட்டக்களப்பு மாவட்டம் முடிசூடியது.

கிழக்கு மாகாண விளையாட்டு விழா நிகழ்வுகள் கடந்த 22, 23ஆம் திகதிகளில் கந்தளாய் லீலாரத்ன மைதானத்தில் நடைபெற்றது.

ஆரம்பநாள் நிகழ்வுகளில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் கலந்துகொண்டு விளையாட்டு விழாவை ஆரம்பித்து வைத்தார்.



மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 200க்கு மேற்பட்ட வீர, வீராங்கனைகள் இப்போட்டி நிகழ்ச்சிகளில் பங்கேற்றனர். இதில் பல கிழக்கு மாகாண சாதனைகளும் புதுப்பிக்கப்பட்டன.

இதன்போது கிழக்கு மாகாணத்தின் சிறந்த தடகள வீரராக ஈட்டி யெறிதல் போட்டியில் கலந்துகொண்ட ஆர். ரதுஷான் தெரிவானார்.

பெண்களுக்கான மெய்வல்லுநர் போட்டிகளில் 2ஆம் இடத்தை அம்பாறை மாவட்டமும் இப்போட்டியின் சம்பியனாக மட்டக்களப்பு மாவட்டமும் தெரிவாகின.அதேபோன்று ஆண்களுக்கான மெய்வல்லுநர் போட்டிகளில் 2ஆம் இடத்தை அம்பாறை மாவட்டமும் இப்போட்டியின் சம்பியனாக திருகோணமலை மாவட்டமும் வெற்றி பெற்றன.

# யாழ். மத்திய கல்லூரி அணிக்கு இலகு வெற்றி

இலங்கை 19 வயதின் கீழ் பிரிவு மூன்று பாடசாலை அணிகளுக்கு இடையிலான ஒருநாள் கிரிக்கெட் தொடரில் கடந்த சனிக்கிழமை (24) நடைபெற்ற போட்டியில் யாழ். மத்தியக் கல்லூரி அணி இலகு வெற்றியை பதிவுசெய்தது.

நுகேகொட லைசியம் சர்வதேச பாடசாலை அணிக்கு எதிரான இந்தப் போட்டியில், மதீஷ்வரன் சன்ஜயன் மற்றும் என். அஜயின் சிறந்த துடுப்பாட்டங்களின் உதவியுடன் யாழ். மத்தியக் கல்லூரி அணி 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.



முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட லைசியம் சர்வதேச பாடசாலை 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகளை இழந்து 213 ஓட்டங்களை பெற்றது. அரித வினால் ஆட்டமிழக்காமல் 64 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணியின் மத்தியவரிசை துடுப்பாட்ட வீரர்களான மதீஷ்வரன் சன்ஜயன் மற்றும் என். அஜய் ஆகியோர் சிறந்த ஆட்டங்களை வெளிப்படுத்த, அந்த அணியானது 36.5 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. சன்ஜயன் 89 ஓட்டங்களையும், என். அஜய் 39 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றுக்கொடுத்தனர்.

# சர்வதேச செய்திகள்

## சீனாவில் ஐரோப்பிய முதலீடுகளில் வீழ்ச்சி

சீனாவின் பூஜ்ய கொவிட் கொள்கையால் நுகர்வோர் செலவு குறைந்து ரியல் எஸ்டேட் சந்தையில் சரிவு ஏற்பட்டு அந்நாட்டில் ஐரோப்பிய பெருநிறுவன முதலீடுகள் குறைந்து வருவதோடு அரசியல் பதற்றம் காரணமாக அமெரிக்க முதலீடுகளும் குறைந்து வருவதாகக் கூறப்படுகிறது.

வெளிநாட்டு முதலீடுகள் ஒருசில பெருநிறுவனங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட சூழலில் சீன பொருளாதார அச்சுறுத்தலுக்கான சமிக்ஞைகள் தெரிவதாக ஸ்ட்ரெயிட் டைம்ஸ் குறிப்பிடுகிறது.



# இத்தாலி பொதுத் தேர்தல் நிறைவு: வலதுசாரிகளுக்கு வெற்றி வாய்ப்பு

இத்தாலியில் இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் தீவிர வலதுசாரிகள் ஆட்சி அமைக்கும் வாய்ப்பை அதிகரித்துள்ள பொதுத் தேர்தலில் நேற்று மக்கள் வாக்களித்தனர்.

தீவிர வலதுசாரிகளான இத்தாலி சகோதரத்துவக் கட்சியின் தலைவி ஜோர்ஜியா மெலோனி நாட்டின் முதல் பெண் பிரதமராக வெற்றி பெறும் எதிர்பார்ப்புடன் போட்டியிடுகிறார். அவர் மேலும் இரு வலதுசாரி கட்சிகளுடன் கூட்டணியாகவே இந்தத் தேர்தலில் போட்டியிடுகிறார்.

இத்தாலியின் கடந்த கால பாசிசத்துடன் அவர் தொடர்புபடுத்தப்பட்டபோதும் தற்போது அதில் மிதவாத போக்கை கடைப்பிடித்து வருகிறார். ஐரோப்பிய ஒன்றிய எதிர்ப்பு கருத்துகளை குறைத்துக் கொண்டிருக்கும் அவர் ரஷ்யா மீதான மேற்கத்திய நாடுகளின் தடைக்கு ஆதரவை வெளியிட்டு வருகிறார்.




எனினும் பாசிசவாதிகளால் ஏற்கப்பட்ட ‘கடவுள், தாய்நாடு மற்றும் குடும்பம்’ என்ற முழக்கத்தினை எழுப்பும் அவர், எல்.ஜி.பி.டீ சமூகத்திற்கு எதிராக பேசுவதோடு, குடியேறிகள் வருவதை தடுக்க லிபியாவின் கடல் பயணத்தை முடக்கவும் அழைப்பு விடுத்து வருகிறார்.

கொவிட் பெருந்தொற்றுக்குப் பின்னர் இத்தாலி பொருளாதாரம் முன்னேற்றம் கண்டபோது உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்பை அடுத்து வலுசக்தி பிரச்சினை ஏற்பட்டு விலைவாசி அதிகரித்துள்ளது.

இந்நிலையில் மெலோனி மீதான ஆதரவு அதிகரித்து வந்த நிலையில் அதனை முறியடிக்க இத்தாலி இடதுசாரி மற்றும் மையவாத கட்சிகள் கூட்டணி சேரும் முயற்சி தோல்வி அடைந்துள்ளது.

பாராளுமன்றத்தின் இரு அவைகளுக்குமாகவே நேற்றைய தேர்தல் இடம்பெற்றது. புதிய விதிகளின்படி இந்த இரு அவைகளினதும் ஆசனங்கள் மூன்றில் ஒரு பங்கு குறைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தேர்தல் முடிவுகள் இன்று திங்கட்கிழமை வெளியாகும் என்று எதிர்பார்க்கப்பட்டபோதும் புதிய அரசு அமையவரும் நவம்பர் வரை காத்திருக்க வாய்ப்பு உள்ளதாக நம்பப்படுகிறது.

## லெய்செஸ்டர் வன்முறை தொழிற் கட்சி அறிக்கை

லெய்செஸ்டர் நகரில் சில முஸ்லிம்கள் மற்றும் ஹிந்துக்கள் தொடர்புபட்ட அண்மைய மோதல்களின் பின்னணியில் கடும்போக்குக் குழுக்கள் இருந்ததாகக் கூறப்படும் அடிப்படையற்ற கூற்றை பிரிட்டன் எதிர்க்கட்சியான தொழிற் கட்சி நிராகரித்துள்ளது. இந்திய அரசியல் சக்திகளின் தலையீடு பற்றிய அடிப்படையற்ற குற்றச்சாட்டுகளையும் அது நிராகரித்துள்ளது.



இந்திய அமைப்புகளின் லேபர் மாநாடு வெளியிட்ட அறிவிப்பில், இந்த வன்முறை சம்பவங்கள் தொடார்பில் கவலை அடைவதாகவும், சமூகங்களுக்கு இடையே புதிய மத வெறுப்புணர்வுகள் தூண்டப்படலாம் என்று அஞ்சுவதாகவும் குறிப்பிட்டுள்ளது.

## ஈரான் போராட்டம் குறித்து நடவடிக்கை எடுக்க உறுதி

ஈரானில் ஒரு வாரத்துக்கும் மேலாக அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நீடித்துவரும் நிலையில் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று அந்நாட்டு ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி உறுதி அளித்துள்ளார்.



தற்போது ஈரானின் 31 மாகாணங்களுக்கு பரவியுள்ள இந்த போராட்டங்கள் தொடர்பில் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக தீர்க்கமான முடிவு எடுக்கப்படும் என்று ரைசி கூறினார்.

ஹிஜாப் கட்டுப்பாடுகளை மீறிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மஹ்சா அமினி என்ற பெண் உயிரிழந்ததை அடுத்து வெடித்த இந்த ஆர்ப்பாட்டங்களில் இதுவரை சுமார் 35 பேர் உயிரிழந்திருப்பதாக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

பல நகரங்களில் தொடர்ந்து மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

அமினியின் மரணம் தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என்று ரைசி குறிப்பிட்டுள்ளார்.

## உக்ரைன் போர்: ரஷ்யாவில் ஆர்ப்பாட்டக்காரர்கள் கைது

உக்ரைன் போருக்காக ரஷ்யாவின் இராணுவ அணிதிரட்டலை எதிர்த்து ரஷ்யா எங்கும் ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்து இடம்பெற்று வரும் நிலையில் மேலும் நூற்றுக் கணக்கானோர் கைது செய்யப்பட்டிருப்பதாக சுயாதீன உரிமைக் குழுவான ஓ.வி.டி இன்போ தெரிவித்துள்ளது.



கடந்த சனிக்கிழமை 32 வெவ்வேறு நகரங்களில் இருந்து 724 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாக அது குறிப்பிட்டுள்ளது.

உக்ரைன் போருக்காக 300,000 மேலதிக துருப்புகளை ஈடுபடுத்தும் திட்டத்தை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் வெளியிட்டதை அடுத்தே பரந்த அளவில் ஆர்ப்பாட்டங்கள் வெடித்துள்ளன.

ரஷ்ய சட்டத்தின்படி அனுமதியற்ற பேரணிகளுக்கு தடை உள்ளது.

கடந்த வார பிற்பகுதியில் நகர்புறப் பகுதிகளில் 1000க்கும் அதிகமான ஆர்ப்பாட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டனர்.

## மீண்டும் ஏவுகணையை ஏவியது வடகெரியா

வடகொரியா அடையாளம் தெரியாத புவியீர்ப்பு ஏவுகணை ஒன்றைப் பாய்ச்சியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதுகுறித்த எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்த நிலையில் வடகொரியா ஏவுகணையைப் பாய்ச்சியுள்ளது.

கிழக்குக் கடலில் அது பாய்ச்சப்பட்டதாக தென்கொரிய இராணுவம் தெரிவித்தது. ஜப்பானும் அதை உறுதிப்படுத்தியது.

பியோங்யாங் பாய்ச்சிய ஏவுகணை ஏற்கனவே விழுந்துவிட்டதாக ஜப்பான் கூறியது.

வடகொரியா நீர் மூழ்கிக் கப்பலிலிருந்து குறுந்தொலைவு ஏவுகணையைப் பாய்ச்சியிருக்கலாம் என்று தென்கொரியா முன்னர் கூறியிருந்தது.



தென்கொரிய ஜனாதிபதி யூன் சுக்இயோல், வடகொரியாவின் தூண்டுதல் நடவடிக்கைக்கு ஏற்ப உடனே செயல்படும்படி இராணுவத்துக்கு அறிவுறுத்தியுள்ளார்.

வடகொரியா கடந்த ஆண்டு 8 ஏவுகணைகளைச் சோதித்தது. ஆனால் இந்த ஆண்டில் மட்டும் 30க்கும் மேற்பட்ட ஏவுகணைகளை பாய்ச்சியுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 செப்டெம்பர் மாதம் 26ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.